
கல்கி
KALKI
26.4.1964
30 காசு





ஒரு சிறந்த கட்டழகி

ஒரு சிறந்த கட்டழகியாக விளங்குங்கள். பரிசுத்தமான மேனியழகை அளிக்கக் கூடிய **ஜி-11*** சேர்க்கப்பட்டுள்ள **சிந்தால்** சோப்பை உபயோகித்து குளியுங்கள்.

ஓர் சிறந்த அழகியாக தோற்றமளியுங்கள். **ஜி-11*** சேர்க்கப்பட்டு மனோகர நறுமணமும் மிருதுத்தன்மையும் கொண்ட **சிந்தால்** சோப், சருமத்தில் உள்ள துர்நாற்றத்தைப் போக்கி பரிசுத்தமாக்குகிறது என்று நிரூபணம் செய்யப்பட்டிருக்கிறது. இதன் காரணமாகத்தான் எழிலை விரும்பும் யாவரும் **சிந்தால்** சோப்பை உபயோகிக்கிறார்கள்.

வியர்வை நாற்றத்தைப் போக்கி, எழிலுடன் விளங்கச்செய்யும் சோப்

பூரணப் பாதுகாப்பிற்கு, சிந்தால் சோப்பினால் குளித்த பிறகு, இனிய மணங்கமழும், இதமான ஜி-11 அடங்கியுள்ள கோத்ரெஜ் சிந்தால் டால்கம் பவுடர் உபயோகியுங்கள்.

* படங்களுடன் கூடிய "ஜி-11 என்பது என்ன?" என்ற இலவச புத்தகத்திற்கு கோத்ரெஜ், பம்பாய்-12 என்ற விலாசத்திற்கு எழுதுங்கள்.

கோத்ரெஜ் ஹேர்டானிக்கிலும் ஜி-11 அடங்கியுள்ளது.

Godrej கோத்ரெஜ்

சோப்புகளில் முதன்மையான பெயர்




மூஷிகர்: இப்போதே மக்கள் சொல்வதைக் காங்கிரஸ் தலைவர்கள் காதில் வாங்கிக்கொள்ள மாட்டேனென்கிறார்களே; வருங்காலத்தில் ஏர் இந்தியா இண்டர்நேஷனல் வாங்கப் போகும் ஒலியை விட வேகமாய்ச் செல்லும் விமானங்களில் பிரயாணம் செய்ய ஆரம்பித்து விட்டாலோ?...

கல்கி பொருளடக்கம்

குரோதி சித்திரை 14 ★ ஏப்ரல் 26

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



தோற்றம் – மறைவு
1905 – 1964



மலர் 23

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 39

தொழில்துறை ஜோதி மறைந்தது!


தமிழகம் தனது செல்வப் புதல்வர் ஒருவரைப் பிரிந்து துயரத்தில் ஆழ்ந்துள்ளது. 'செல்வப் புதல்வர்' என்ற பெயர் முற்றிலும் பொருந்துமாறு வாழ்ந்து மறைந்து விட்டார் ஸ்ரீ எஸ். அனந்தராமகிருஷ்ணன் அவர்கள். தனம் என்ற செல்வத்தை மட்டுமின்றி, தானம் செய்யும் உணர்வுச் செல்வத்தையும் பெற்றிருந்தார். பணத்தில் மட்டுமின்றிக் குணத்திலும் பெரியவராக இருந்தார். எனவேதான் இன்று அவரது பிரிவில் தொழில் உலகம் ஓர் அற்புத அதிபரை இழந்து துக்கிப்பதோடன்றி நாடே ஒரு நன்மகனை இழந்து சோகத்திலாழ்ந்துள்ளது. அவரது ஆயுளின் ஒவ்வோர் ஆண்டிலும் பாரதத்தின் தொழில்துறை பற்பல ஆண்டுகளில் பெறக்கூடிய செழிப்பைப் பெற்றது. எனினும் நீர்க்காயுள் என்ற வரம் வாங்கி வந்திராத ஸ்ரீ அனந்தராமகிருஷ்ணன் அறுபதாண்டுகள் நிறையுமுன்பே அமர வாழ்வு பெற்றுவிட்டார்.


பாங்குத் தொழிலுக்குப் புகழ்பெற்ற திருநெல்வேலிச் சீமையில் பிறந்து, கணக்காயர் துறையில் வண்ணமுடன் மலர்ந்து பின்னர், ஸிம்ஸன் கம்பெனியில் சாமானிய அலுவலராகப் பணியாற்றிப் படிப்படியாக முன்னேறிய அனந்தராமகிருஷ்ணன் அவர்கள் உழைப்பின் உயர்வுக்கு ஓர் உத்தம உதாரணம். நாளடைவில் ஸிம்ஸன் ஸ்தாபனத்தின் முதல்வர் பதவிக்கு அவர் உயர்ந்த வரலாற்றைத் தொழில் நுட்ப அறிவு, அயராத உழைப்பு, நிர்வாகத் திறன், நேர்மை இவற்றின் சரிதமே எனலாம்.

தொழில் ஸ்தாபனங்களை அமைப்பதிலும், முன்னேற்றப் பாதையில் அவற்றைச் செலுத்துவதிலும், எந்தெந்த வகைகளில், எவரெவர்களைக் கொண்டு வெற்றிகரமாக நடத்த வேண்டுமோ அம்முறைகளில் நடத்துவதிலும் அவர் பெற்றிருந்த ஆற்றல் ஆச்சரியமானது.

வெவ்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள பல ஸ்தாபனங்களை ஒன்றாக இணைத்து, ஒரு குடைக்கீழ் கொணர்ந்து தொழிலுலகில் ஒரு மன்னனாகத் திகழ்ந்தார் அவர். அவரது ஆற்றலின் ஆட்சிக்குட்பட்ட "அமால்கமேஷன்ஸ் லிமிடெட்" தமிழகத்துக்கும், தொழிலுலகுக்கும் ஓர் அணிகலனாகும். ஏராளமான தொழிலாளர்களின் வாழ்வை மலர்த்தி, நாட்டு சுபிட்சத்துக்கும் வழிகூட்டும் மகத்தான நிறுவனம் அது. தம்மிடம் பணிபுரியும் ஆயிரமாயிரம் தொழிலாளர்களிடத்திலும் தம்முடன் தொடர்பு கொண்டுள்ள மற்ற எல்லோரிடமும் மனிதத்தன்மை, அன்பு, அபிமான உணர்ச்சி முதலியவற்றைக் காட்டி, "நல்லவர்; வெகு நல்லவர்" என்ற புகழைச் சம்பாதித்த பாக்கியசாலி ஸ்ரீ அனந்தராமகிருஷ்ணன்.

தாம் பெற்ற செல்வத்தைச் சமூக நலனுக்காகச் செலவிட வேண்டும் என்ற சீரிய பண்பைக் கைக்கொண்ட அவர் பரம கல்யாணி தரும ஸ்தாபனத்தை நிறுவி, அதன் மூலம் தமது ஊரான ஆழ்வார்குறிச்சியில் உயர்நிலைப் பள்ளியும், கல்லூரியும் ஸ்தாபித்திருக்கிறார். சம்ஸ்கிருதத்தைப் போஷித்து சிரோமணி வகுப்பு மாணவர்கள் பலருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து உதவியுள்ளார். உண்மையான அந்தணனுக்கு உரிய நீண்டகால ஒழுக்க மரபுகள் அவ்வளவையும் பெற்றிருந்த ஒரு புனித புருஷனை இழந்து விட்டோம். எளிமையும், ஈகையும், இறைப் பற்றும், ஆசாரிய பக்தியும் நிரம்பிய ஸ்ரீ அனந்தராமகிருஷ்ணனின் மறைவில் எல்லாவிதமான செல்வங்களும் பொருந்திய ஒரு சீலவானை இழந்துவிட்டோம். ஆறாத்துயரத்தில் ஆழ்ந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு நம் உளமார்ந்த அநுதாபங்களை அளிக்கிறோம்.


லஞ்ச ஊழல்
பெர்மிட்
லைசென்ஸ் ஆட்சி
தன் வாலையே பிடிக்க முயல்கிறது!


நேற்று கைக்குப் பூட்டு
இன்று வாய்க்குப் பூட்டு

நான் சொல்வது தவறா?

ராஜாஜி

நாட்டுப் பற்றும் நல்ல அறிவும் படைத்த பலருக்கு, முக்கியமாக இளைஞர்களுக்கு, காச்மீர விஷயமாக நான் சொல்லும் கருத்து புதிராக இருக்கிறது. என்னிடம் சத்தியப்பிரமாணமாகஅன்பு வைத்த பலரும்கூட இவ்விஷயத்தில் என் போக்கு புதிராக இருக்கிறது என்று நினைக்கிறார்கள்.

குழந்தை தாயின் வயிற்றிலேயே மரிக்காமல் காக்க வேண்டுமானால் தாய் வயிற்றில் சஸ்திர சிகித்சை செய்து சிசுவை எடுக்க வேண்டும். 'ஸிஸேரியன் ஆபரேஷன்' செய்தால்தான் தாய்-குழந்தை இருவரும் பிழைக்க வழி உண்டு. இதுபோலவே இந்தியா—பாகிஸ்தான் பிரச்னைக்கு 'ஸிஸேரியன் ஆபரேஷன்' செய்து காச்மீரக் குழந்தையை அப்புறப்படுத்தி விடுங்கள் என்கிறேன். அதாவது காச்மீரத்தின் எதிர்கால அந்தஸ்து என்ன என்பதை இந்தியா — பாகிஸ்தான் பூசலை வைத்து நிர்ணயிக்க வேண்டாம்; இவ்விரு நாட்டுப் பூசலிலிருந்து சஸ்திர சிகித்சை மூலம் காச்மீரத்தை விடுவிக்க வேண்டும்; காச்மீர மக்களே தங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்கிறேன். பல சிறு நாடுகளும், நாகரீகத்தில் குறைந்தவர்களும் இன்று சுய நிர்ணய உரிமை பெற்றிருக்கிறார்கள். அந்த உரிமையைக் காச்மீர மக்களுக்கும் வழங்க வேண்டும் என்கிறேன். இந்தக் கருத்தைத்தான் அறிவுள்ள ஏராளமான ஆணும் பெண்ணும், சிறுவர் சிறுமியரும் புதிராகக் கருதுகிறார்கள். 'காச்மீரம் இந்தியாவைச் சேர்ந்ததே' என்ற உரிமையை நான் கைவிடுமாறு சொல்வது தேச பக்தியற்ற யோசனையாயிருக்கிறதே என்று வருத்தப்படுகிறார்கள்.

தேச பக்தி என்றால் என்ன? வெறும் கோபமும் தாபமும் ஆசையும் தேச பக்தியாகி விடாது. உணர்ச்சியோடு விவேகமும் ஆழ்ந்த சிந்தனையும் சேர்ந்தாலே தேச பக்தியாகும். நான் சொல்வதில் தவறேதும் இல்லை என்று திடமாக உணர்கிறேன். ஷேக் அப்துல்லாவின் சார்பிலோ, காச்மீர மக்களின் சார்பிலோ மட்டும் நான் யோசனை சொல்லவில்லை. இந்தியாவின் எதிர்காலத்தை நினைத்து நாட்டுப் பற்றுடன் இந்தக் கருத்தை வெளியிடுகிறேன். இன்று போல் இந்தியாவும் பாகிஸ்தானும் என்றுமே நிரந்தரமாகப் பூசலிட்டுக் கொண்டு இரு நாடுகளும் நாசமாகக் கூடாது என்ற அக்கறையிலேயே என் அபிப்பிராயத்தைச் சொல்கிறேன். 'காச்மீரப் பிரச்னையை உயிருள்ள குழந்தையாக வெளியே எடுத்துப் போடுங்கள். இந்தியா — பாகிஸ்தான் இரண்டும் காப்பாற்றப்படும்' என்கிறேன். இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பர விரோதம் இல்லாமல் நல்ல முறையில் வாழ்ந்தேயாக வேண்டும். சமாதானத்தை விரும்பும் பண்புள்ள உலக மக்கள் யாவரும் இதைத்தான் விரும்புகிறார்கள். இதற்கு அநுகூலமாகவே என் கருத்தைச் சொல்கிறேன்.

பாகிஸ்தான் காச்மீரத்தில் ஆக்கிரமிப்பு செய்தது பற்றியும், தந்தி மூலம் காச்மீர மகாராஜா இந்தியாவுடன் சேர இணக்கம் தந்தது பற்றியும், அப்போது கவர்னர் ஜெனரலாயிருந்த மவுண்ட்பாட்டன் அவர்கள் இணைப்புக்கு ஒப்புக் கொண்டது பற்றியும் சொல்லப்படும் சட்ட நுணுக்க வாதங்கள் யாவும் சரியே. ஸ்ரீ கிருஷ்ண மேனன் அவர்கள் ஐக்கிய நாட்டு சபையில் மணிக் கணக்காக, ஜாஜ்வல்லியமாக நம் தரப்பு வாதத்தை விளக்கினார். சமீபத்தில் சக்ளா அவர்களும் நேர்த்தியான முறையில் நம் கட்சியை வாதித்தார். காச்மீரம் இந்தியாவுக்கு உரியது என்று நானும் ஓர் அறிக்கை விட்டதாக நினைக்கிறேன். ஆனால் அதையெல்லாம் இப்போது விடாப்பிடியாகப் பிடித்திருப்பதில் பயனில்லை. பழைய சட்ட அம்சங்களைக் காட்டிக் காச்மீரத்தை ஒரு சொத்தாகக் கருதி அது நம் உடைமையென வாதிப்பதும், ஷேக் அப்துல்லா அவர்கள் பழைய போக்குக்கு முரணாக நடக்கிறார் என்று அவரைத் தாக்குவதும் இப்போது விவேகமாகாது என்றே கருதுகிறேன். ஷேக் அப்துல்லாவை அடக்கி, மௌனமாக்கி விடலாம். ஆனால் இந்தியா—பாகிஸ்தான் பிரச்னை இதனால் தீராது. ஷேக் அவர்களை மீண்டும் சிறையில் அடைக்கும் யோசனை அதிருஷ்டவசமாகச் செலாவணிக்கு வரவில்லை. இந்த அறிவற்ற நடவடிக்கையால் இந்தியாவுக்கு அகௌரவம் விளையும் என்று நேரு அவர்கள் உணர்ந்து, அந்த யோசனையைக் கைவிட்டிருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். நேரு அவர்களுக்கு உடல் நிலை குன்றியிருக்கக் கூடும்; ஆனாலும் இந்த அம்சத்தில் அவருடைய விவேகம்

சம நிலையில் இருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

இன்றைய நெருக்கடியில் நாம் அடிப்படை அம்சங்களைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பாகிஸ்தானைத் தீராப் பகை என்று வெறுக்கும் கூட்டத்தின் உணர்ச்சி வெறிக்கு நாம் கீழ்ப்படிவது விவேகமா? இப்படியே இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம் துவேஷித்துக் கொண்டும், சந்தேகித்துக் கொண்டும், இதற்காக வெளிநாட்டாரிடம் கடன் வாங்கித் தளவாடங்களைப் பெருக்கிக் கொண்டும் போனால் முடிவு என்ன? எதிர்காலத்து மாரீச குருக்ஷேத்திரம் ஒன்றுக்காக அந்நிய உதவி என்கிற மணல் மீது இருநாடுகளும் கோட்டை கட்டிக் கொண்டு போனால் இருநாடுகளும் தம்மைத் தாமே நாசமாக்கிக் கொள்ளும். சரித்திரம் கண்டறியாத அறிவிலிகளாவோம். ஆயுதப் போட்டியின் அறிவீனத்தை அமெரிக்காவும் ருஷ்யாவும் உணர்ந்து விட்டன. நாம் உணரக் காணோம். நம்முடைய ஆயுதப் போட்டியும், நம்முடைய தனிப் பனிப் போரும் வல்லரசுகளைப் போலச் சுய பலத்தின் மேல் நிற்கவில்லை. வல்லரசுகள் கடன் வாங்கவில்லை. நாமோ மக்களை நெரிக்கும் அளவுக்கு வரி போட்டும், இருவல்லரசு கோஷ்டிக்கும் பூச்சிக் காட்டி அவர்களிடம் கடனும் நன்கொடையும் வாங்கியும் பனிப் போரை வளர்க்கிறோம். வல்லரசுகளின் பனிப் போரைப் போலவே இந்தியா—பாகிஸ்தான் பனிப்போரும் இவ்விரு நாடுகளை நாசமாக்குவதில்தான் முடியும். ஊக்கமாகத் தொழில் செய்பவர்களையெல்லாம் வரிச் சுமையால் நசுக்கி, மறைமுக வரிகள் போட்டு ஏழை மக்களை மேலும் ஏழைகளாக்கி வருகிறோம். இது போதாதென்று, எதிர்கால சந்ததியினருக்கும் பெருத்த வட்டியுடன் ஏராளமான கடன்களை வைத்திருக்கிறோம். எதிர்கால இந்தியாவைக் கடனை அடைப்பதற்காகவே அடமானம் வைத்து விட்டோம். பழைய விரோதத்துக்காகவும், அதில் பிறந்த அச்சத்துக்காகவும், ஐயத்துக்காகவும் பாகிஸ்தானுடன் ஆயுதப் போட்டியைத் தொடர்ந்தோமானால் எதிர்கால சுபிட்சமெல்லாம் வெறும் கானல் நீராகும்.

பாகிஸ்தான், சீனா என்ற இரு போர் முனைகளில் யுத்தம் செய்வது மடமை என்று யாவரும் உணர்ந்திருக்கிறார்கள்; சொல்லியும் இருக்கிறார்கள். என்றாலும் சரியான நடவடிக்கை எடுக்காததால், பாகிஸ்தான் சீனாவுடன் கூட்டணி அமைக்க இடம் தந்திருப்பது மடமையைப் பல மடங்காக்கி விட்டது. பாகிஸ்தான் சீனாவுடன் கூட்டுச் சேர்ந்து விடாது. மேல் நாட்டு நேச நாடுகளைக் குழம்பச் செய்து, உதவியைப் பெருக்கிக் கொள்ளவே பாகிஸ்தான் இப்படிப் பயமுறுத்துகிறது. அது எப்படியானாலும் சரி, வரிக் கொடுமை, கடன் இவற்றின் மேல் ஆயுதப் போட்டியை நாம் வலுவாக்கிக் கொண்டே போவது சாத்தியமற்ற சாகசமாகும். சீனா, பாகிஸ்தான் இரண்டையும் சேர்த்து இந்த முறையால் நாம் எதிர்ப்பது முடியவே முடியாது. பாகிஸ்தானுடன் விரோதத்தைத் தீர்த்துக் கொண்டு ஒரே எதிரியுடன் ஈடு கொடுப்பதுதான் வழி, வேறு வழி இல்லவே இல்லை.

காச்மீரப் பிரச்னை விலகி விட்டால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள விரோதம் பெருமளவுக்குத் தீர்ந்து போகும். அதன் பின் உள்ள சில்லறைச் சிக்கல்களை இரு நாட்டு அதிகாரிகளும் கூடி விவாதித்துச் சுலபமாகத் தீர்த்து விடலாம். உத்தியோகஸ்தர்களே போதும். மந்திரிகள் தலையிடக் கூட அவசியம் இராது. உணர்ச்சிகள் பொங்கி எழவும் அவசியமிராது. இதனால்தான் காச்மீரத்தை இந்தியா—பாகிஸ்தான் விவகாரங்களிலிருந்து நீக்க வேண்டும் என்கிறேன்.

பாகிஸ்தான் அக்கிரம ஆக்கிரமிப்புச் செய்தது உண்மை. 1948 அல்லது 49-ல் இதை ஐக்கிய நாடுகள் சபை ஒப்புக் கொண்டு பாகிஸ்தானைக் கண்டித்திருந்தால் சரித்திரமே மாறியிருக்கும். ஆனால் அப்படி நடக்கவில்லை. எனவே பழங்கதைகளைச் சொல்லிப் புண்ணியமில்லை. இன்றைக்கு நம் முன் உள்ள தெளிவான ஒரே பிரச்னை இதுதான்: சீன கம்யூனிஸத்தின் வேட்டையிலிருந்து இந்தியா — பாகிஸ்தானையும் (ஆசியாவையுமே) காப்பாற்ற வேண்டுமானால் நம் இரு நாடுகளும் சமரசம் செய்து கொள்வது அத்யாவசியமல்லவா என்பதே பிரச்னை. அவசியம்தான் என்று உறுதியாக ஒரு முடிவுக்கு வந்தபின் உணர்ச்சிகளைத் தள்ள வேண்டும்; கொள்கையை மாற்றிக் கொள்ளக்கூடாது என்ற பிடிவாதத்தை விலக்க வேண்டும்; ஷேக் அப்துல்லா அவர்களும் அவருக்கு மாறுபாடான கருத்துள்ள காச்மீரத் தலைவர்களும் தத்தம் கொள்கையின் மேல் ஒரு பொதுத் தேர்தலில் மக்களின் ஆதரவைக் கோரி ஒரு முடிவுக்கு வரவிட வேண்டும். வயது வந்த எல்லாரும்

வோட்டளிக்கும் பொதுத் தேர்தல் நடத்தி, காச்மீர மக்களின் கருத்தை அறிந்து அதன்படியே அதன் அரசாட்சியை அமைக்க வேண்டும். இதில் ஷேக் அப்துல்லா வெற்றி பெற்றாலும் — அவர் தான் வெற்றி பெறுவார் என்று நம்ப இடமிருக்கிறது — அதை ஒப்புக் கொள்ள வேண்டும். மக்கள் கருத்துக்குப் பிரச்னையை விட்டு விட்டால் அதன் முடிவு எப்படியானாலும், பிறகு பாகிஸ்தான் நம்மைக் குறைகூற முடியாது; அல்லது தனக்கு நியாயமான குறையிருப்பதாகப் பாசாங்கு செய்து மேல் நாடுகளிலிருந்தோ கம்யூனிஸ்டு நாடுகளிலிருந்தோ உதவி பெற முடியாது. சமாதான நோக்கம் வெற்றி பெறும். அதன் பின் அந்நியக் கடன்கள் தற்கொலைக்கு வழி செய்யாமல் நாட்டு அபிவிருத்திக்கே உதவும். அடிப்படைக் காரணத்தைத் தெளிவாகக் கண்டு அதன் மேல் முடிவெடுக்கும் விவேகத்தை நாம் பெற்று விட்டால், அதன்பின் சந்தேகங்களையோ, உணர்ச்சிகளையோ கிளறிவிட்டுக் குழம்பாமல் முன்னேறலாம்.

என் கருத்தைக் காரணம் காட்டி விளக்க முயன்றிருக்கிறேன். நான் இங்கே தெளிவு படுத்த முயன்ற அம்சங்களை அமைதியுடன் ஆலோசித்துப் பார்க்குமாறு என் நண்பர்களையும், ஆள்கிற காங்கிரஸ் கட்சியின் அங்கத்தினர்களையும் வேண்டிக் கொள்கிறேன். மந்திரிமார்கள் இனியேனும் ஷேக் அப்துல்லாவைப் பயமுறுத்த மாட்டார்கள் என்று நம்புகிறேன். வெகு நீண்ட காலம் விசாரணைக் கைதியாக இருந்து விடுதலையாகியுள்ள அவருடைய மன நிலையின் சங்கடங்களை உணர வேண்டும். காச்மீரச் சிங்கம் என்று பெயர் பெற்ற அவரை எளிதில் பயமுறுத்த முடியாது. அதற்கு யாரும் முயலவும் கூடாது. அவரை அடக்கிவிட்டுக் காச்மீரத்தைக் கையாள முயல்வது பெருந்தன்மை ஆகாது. இந்தியாவின் நற்பெயர் அந்த முறையில் இழிவு அடையும். இந்தியாவும் பாகிஸ்தானும் சமரஸமாக வாழ வேண்டும் என்பது சரியானால் — இரண்டு முனைகளில் யுத்த நெருக்கடியை உண்டாக்கிக் கொள்வது மடமை என்பது சரியானால் — என்னுடைய யோசனை ஒன்றே பிரச்னையைத் தீர்க்கும். உணர்ச்சிக் குழப்பத்தை விவேகத்தினால் வெல்லுவோமாக!

என்ன சேதி?

பண்பிழந்த பாரதம்

பகைவரையும் அன்புடன் வரவேற்று உபசரிக்கும் பண்புள்ள நாடு என்று பெயர் எடுத்த நமது நாட்டுக்கு நண்பர்களையும் அவமானப்படுத்தும் நாடு என்ற பெயரைக் காங்கிரஸ் அரசாங்கம் வாங்கிக் கொடுத்து விட்டது. பம்பாயில் உள்ள இஸ்ரேல் தூதுவர் தமது நாட்டு சுதந்திர தின விழாவைத் தில்லியில் கொண்டாடச் சர்க்கார் நடத்தும் அசோகா ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தார். பல வெளி நாட்டுத் தூதுவர்கள் பங்கு எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்யும் படி கூறியிருந்தார். இவற்றுக்கு முதலில் ஒப்புக்கொண்ட அசோகா ஹோட்டல் மானேஜர், கடைசி நிமிஷத்தில் சர்க்காரின் வெளி விவகார காரியாலயத்திலிருந்து வந்த தாக்கீதுமீது விருந்தை ரத்து செய்தார். நூற்றுக்கணக்கான விருந்தினர்கள் வந்து ஏமாற்றமடைந்து திரும்பினர். அமெரிக்காவிலிருந்து பல முக்கியமான தொழிலதிபர்கள் இந்தியாவுக்கு வந்துள்ள சமயத்தில் இப்படி நடந்திருப்பது மிக மிக வருத்தத்தை அளிக்கிறது. இந்தியாவைப் பற்றி என்ன எண்ணிக் கொண்டு அவர்கள் திரும்புவர்? நேருஜியின் இலாக்கா தான் இவ்வளவுக்கும் காரணம் என்னும் போது வேதனை அதிகமாகிறது. இராக் சர்வாதிகாரிக்குச் சமீபத்தில் தில்லி அளித்த அமோக வரவேற்பையும் நினைத்து, இந்தியா ஏன் இவ்வாறு இஸ்ரேல் நாட்டை அவமதித்து அவலப்போக்கில் செல்கிறது என வருந்துகிறோம்.

இன்னோர் இடி

காருகுறிச்சி ஸ்ரீ அருணாசலம் அவர்களுக்கு மறு உலகில் தவில் வாசிக்கவே இவரும் சென்றுவிட்டாரோ என்று ரசிகர்கள் வருந்தும் வண்ணம் நாச்சியார்கோவில் ஸ்ரீ ராகவப் பிள்ளை அவர்களும் நம்மைப் பிரிந்து சென்று விட்டார். எப்படி ராஜரத்தினம் பிள்ளை அவர்களின் பாணியைக் காருகுறிச்சியிடம் கேட்டோமோ அதே போல் புகழ் வாய்ந்த தவில் வித்துவானாகிய நீடாமங்கலம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் பாணியை ராகவப் பிள்ளை அவர்களிடம் கேட்டு மகிழ்ந்து வந்தோம். மகிழ்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது. நாச்சியார்கோவில் ராகவப் பிள்ளையின் மறைவு இசை உலகுக்கு ஈடு செய்ய முடியாத பெரும் இழப்பாகும்.

'உலக நாடுகளிலெல்லாம் பரவியுள்ள ஆங்கில சாம்ராஜ்யம் அழிந்துவிட்டாலும், அங்கெல்லாம் இங்கிலாந்து தந்த ஷேக்ஸ்பியரின் பெயர் மட்டும் அழியாது' என்று பல ஆண்டுகளுக்கு முன் கூறினார் கார்லைல். அவருடைய வார்த்தையை இன்று நாம் மெய்ப்பிக்கிறோம். இம் மாதம் இருபத்தி மூன்றும் தேதியன்று கவிஞர் பிரான் ஷேக்ஸ்பியரின் நானூறாவது ஜன்ம தினத்தைக் கொண்டாடுவதன் மூலம். கவி உள்ளம் படைத்த தலைவர் ராஜாஜி அவர்களின் சிறப்புக் கட்டுரையை வெளியிட்டுக் 'கல்கி' தன் அஞ்சலியைக் கவி அரசருக்கு அளிக்கிறது.

ஷேக்ஸ்பியரின் இறுதி நாடகமாகக் கருதப்படுவது 'புயல்' (Tempest). இந்த நாடகத்தின் நாயகனான ப்ராஸ்பெரோ தனது மந்திரக் கோலால் மாயா ஜாலம் பல புரிந்துவிட்டுக் கடைசியில் அதனை முறித்துப் போடுவது, ஷேக்ஸ்பியர் அது காறும் தமது எழுதுகோலால் சிருஷ்டித்த கற்பனை உலகுக்கு முற்றுப் புள்ளி வைத்ததன் அடையாளமே என்று கருதுவார் உண்டு. 'கனவுப் பண்டம் போன்ற ஒன்றால் உருவானவரே நாமெல்லாரும்' என்ற வேதாந்த வாசகத்தை ப்ராஸ்பெரோ மூலம் இந் நாடகத்தில் வெளியிடும் ஷேக்ஸ்பியர், அதே உன்னத நிலையிலிருந்து உலகின் சிறுமை — பெருமை, அழகு — அவலம் யாவற்றையும் சம பாவத்துடன் காண்கிறார். அந்த உச்ச நிலையில் உருவான மிராண்டா — ஃபெர்டினண்டின் சிருங்காரத்தையே இவ்விதழ் அட்டையில் ஓவியர் வினு அளிக்கிறார்.

ஷேக்ஸ்பியர்

ராஜாஜி

ஆங்கில பரிசயத்துக்கு இரண்டு சாதனங்களைச் சொல்லுவேன்: ஒன்று பைபிள், மற்றொன்று ஷேக்ஸ்பியர் நாடகங்கள்.

ஷேக்ஸ்பியர் என்ற ஆங்கில நாடகாசிரியர், பாரத நாட்டில் காளிதாஸர் பெற்றுள்ள உன்னத ஸ்தானத்துக்குச் சமானமான இடத்தை மேல்நாட்டில் பெற்று இன்னும் அந்தப் புகழ் பெற்ற பதவியை வகித்துவரும் மகான். அவர் காலம் பொதுவாக ஆங்கில மக்களின் புகழ் ஓங்கி வளர்ந்த காலம். மக்கள் நாடகங்களைப் பார்த்து மிகவும் பாராட்டி மகிழ்ந்த காலம். வேடிக்கை, பரிகாசம், சோகம் எல்லாத் துறைகளிலும் நாடக ரஸம் மக்களின் மனங்களைக் கவர்ந்த காலம் அது.

ஷேக்ஸ்பியர் முப்பத்தேழு நாடகங்களை எழுதினார். பரிகாசம் நிறைந்த இனங்கள், சோகம் பொங்கி மனத்தைச் சுத்தப் படுத்தும் இனங்கள், மகிழ்ச்சியும் வேடிக்கையும் நிறைந்த நாடக இனங்கள், மூன்று நூற்றாண்டு ஆங்கில சரித்திரத்தை மிக உருக்கமாகவும் தெளிவாகவும் காட்டும் நாடகங்கள், மேல் நாட்டாருடைய பண்பாட்டுக்குஅடிகோலிய ரோமானிய சரித்திர நாடகங்கள் — எல்லாவகையும் எழுதி மக்கள் இன்னும் மிக ஆர்வத்துடன் படித்தும் நடித்தும் வரும் நாடகப் படைப்புகளை இயற்றியுள்ளார்.



ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியரின் அற்புதப் படைப்பான அந்தோனி, கிளியோபாட்ரா - டெலிவிஷன் காட்சி இது.

சில சாதாரண பழங் கதைகளை எடுத்துத் தம் சாமர்த்தியத்தினால் ஷேக்ஸ்பியர் அற்புத நாடகங்களைப் படைத்துத் தந்தார். காட்டு விறகில் மூடிக் கிடக்கும் தீயைப் போல் பழங் கதைகளில் மூடிக் கிடந்த அக்கினியைக் கடைந்தெடுத்து அற்புதப் படைப்புக்களை இயற்றினார் — அரணிக் கட்டையில் மறைந்திருக்கும் அக்கினியை உபநிஷத்து ரிஷிகள் யாகத்துக்காகக் கடைந்து எடுத்தது போல். சாதாரண

கதைகளாக இருந்தவை ஷேக்ஸ்பியரின் மந்திர சக்தியினால் உயிரும் வேகமும் கொண்டு நம் உள்ளத்தைக் கவர்கின்றன. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்கிற பழமொழியில் எவ்வளவு உண்மை கிடக்கிறது என்பதை ஷேக்ஸ்பியரின் கலைத்திறனால் சாமானியக் கதைகளும் அற்புதமாக வடிவுபெற்றதிலிருந்து அறியலாம்.

இவற்றில் அவரவர்களுக்குப் பிடித்தமான நாடகங்களை அவரவர்கள் மிகவும் போற்றிப் பேசுவார்கள். ஒன்றுக்கு மேல் ஒன்று உயர்ந்தது, தாழ்ந்தது என்று வாதிப்பார்கள். அதைப்பற்றி நமக்குஅக்கறையில்லை.

ஃ ஃ ஃ

பொதுவாக ஷேக்ஸ்பியர் இயற்றித் தந்திருக்கும் நாடகங்களின் பான்மையை எடுத்துச் சொல்லப் போனால், வேகமும், மொழிச் சுருக்கமும், மனித இயற்கையைப் பளிச்சென்று எடுத்துக் காட்டும் குணமுமே அவற்றின் சிறப்பியல்பு என்று சொல்லலாம். படிக்கும் போது கால் மணிக்குள் பாத்திரங்களின் உருவம் மிகத் தெளிவாக மனத்தில் பதிந்து போகிறது. மானுட உள்ளத்திலும் வாழ்க்கையிலும் சுழலும் அடிப்படை வேகங்களே ஷேக்ஸ்பியர் நாடகங்களின் மையப்பொருள். கால தேசவர்த்தமான வரம்புகளைத் தாண்டி நிற்கும் சாசுவத மானுட மனோவேகங்களையும் பண்புகளையும் ஷேக்ஸ்பியர் எடுத்துக் காட்டுவது போல் வேறு எங்கும் காண முடியாது.

ஃ ஃ ஃ

கற்பு, அன்பு, துராசை, சமூகத்தை நஞ்சாக்கும் அதருமம், நட்பு, பயம், குரோதம் முதலிய மனித வாழ்க்கையின் நன்மை தீமைகளை மகோன்னத முறையில் விளக்கும் பாத்திரங்களை ஷேக்ஸ்பியர் நாடகங்களில் காணலாம்.

எந்தநாட்டிலும் உருவான உயர்ந்த நாடகப் பாத்திரத்துக்கெல்லாம் ஷேக்ஸ்பியரின் சிருஷ்டிகளில் ஒரு பிரதியைக் காணலாம். உதாரணமாக, உத்தர ராம சரித சீதையை எட்டாவது ஹென்றி நாடகத்தில் காதரைன் ராணி என்ற ஆங்கில உருவில் கண்டு மனம் உருகலாம்.

எவ்வளவு சாமர்த்தியத்தைச் செலுத்தினாலும் ஒரு மொழியிலுள்ள நாடகத்தையோ காவியத்தையோ வேறுமொழியில் பெயர்த்து எழுதிப் பூரண வேகத்தையும் அழகையும் காணச் செய்வது முடியாத காரியம். ஆயினும் தமிழர்கள் ஷேக்ஸ்பியர் இலக்கியத்தில் ஓரளவு பரிசயம் பெறுவது கடமை. நம் கம்பர், காளிதாஸர், வள்ளுவர் இவர்களை ஆங்கிலப் பெரியார்கள் தேடித் தேடிக் கஷ்டப்பட்டுப் படித்து மகிழ்கிறார்கள். அதே போல் நாமும் விசால நோக்கத்தையும் படர்ந்த கலை ஞானத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டுமல்லவா?



ஸர் லாரென்ஸ் ஆலிவர் நடித்துப் புகழ் பெற்ற திரைப்படமான 'ஐந்தாவது ஹென்றி மன்ன'னில் வரும் காட்சிகளில் ஒன்று. மகா கவியின் இலக்கியத்தை இசையோடு அமைத்துக் கொடுத்தவர் ஸர் வில்லியம் வால்டன்.



உங்கள் குழந்தைக்கு

க்ரைமிக்ஸ்

முறையாகக் கொடுத்து

ஆரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் இருக்க உதவுங்கள்.

க்ரைமிக்ஸ் உங்கள் குழந்தையின் தேவைகளை மனதிற் கொண்டு—அதன் மென்மையான வயிற்றுக்கு இதமளிக்க, வாயு, வயிற்றுப்பிடிப்பு, வயிற்றுக் கோளாறு முதலிய வற்றிலிருந்து துரித நிவாரணமளிக்க—பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டது. பல் முளைக்கும்போதும், தாய்ப்பால் மறக்கும்போதும்கூட க்ரைமிக்ஸ் குழந்தை புன் சிரிப்புடனும், குதூகலத்துடனும் இருக்க உதவுகிறது.

ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்-உங்கள் குழந்தையின் சிறந்த ஆரோக்கியத்திற்கும், மகிழ்ச்சிக்கும் க்ரைமிக்ஸ் கொடுங்கள்

க்ரைமிக்ஸ்

பூட்ஸ் Boots தயாரித்தது, லக்ஷக்கணக்கான தாய்மார்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானது.

NAS b879



படம் பிடிக்கும் போதினிலே..

இன்று சீரும் சிறப்பும் பெற்றுத் திரை உலகின் சிகரத்தில் விளங்கும் நடிக, நடிகையர்கள் யாருக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறார்கள் தெரியுமா? ரசிகப் பெருமக்களுக்கு என்பீர்கள். அது சரியல்ல. அவர்களையெல்லாம் வற்றாத வனப்புடன், மாறாத இளமை எழிலுடன் வெள்ளித் திரையில் விளங்கும்படி செய்துவரும் 'மேக்கப்' கலைஞர்களுக்குத்தான் அவர்கள் கடமைப் பட்டிருக்கின்றனர். தங்கள் வயதைப் பற்றிய கவலை ஒருசிறிதும் இல்லாமல் படங்களில் வளையவரும் நடிக நாரீமணிகள் மூச்சுவிட மறந்தாலும் மறப்பார்கள்; 'மேக்கப்' இல்லாமல் வெளியே ஒரு நாளும் முகத்தைக் காட்டத் துணிய மாட்டார்கள். துயரக் காட்சியில் கண்ணீர் விட்டு அழும் நட்சத்திரம் இந்தக் காட்சியினால் தன் மேக்கப் கலைந்துவிடுமோ என்ற கவலையினால்தான் அதிகமாகக் கண்ணீர் விடுவாள்! படம் எடுப்பதற்குப் பணம் இல்லாவிட்டால் மேக்கப் செய்து கொள்ளலாம்; கச்சா பிலிம் இல்லாவிட்டால்கூட மேக்கப் செய்துகொள்ளலாம். ஆனால் மேக்கப் கலைஞர் ஒருவர் இல்லாவிட்டால் எதையும் மேக்கப் செய்து கொள்ள முடியாது!

சினிமாவை விட்டுவிடுவோம். நம் வீட்டுப் பெண்களில் எத்தனைபேர் மேக்கப் இல்லாமல் வெளியே கிளம்புகிறார்கள்? கணவன் குடும்பச் செலவை எப்படி 'மேக்கப்' பண்ணுவது என்று தவித்துக் கொண்டிருக்கும்போது மனைவி தனக்குப் பொருத்தமான மேக்கப் எதுவென்று தீர்மானம் பண்ண முடியாமல் தவித்துக் கொண்டிருப்பாள்!

இப்படி எல்லா விதத்திலும் இன்றியமையாததாக விளங்கும் மேக்கப் என்னும் ஒப்பனைக் கலையில் முதல்வராகத் திகழும் திரு ஹரிபாபு அவர்களைச் சந்தித்துப் பேசிய போது அந்தக் கலையைப் பற்றிய பல அரிய விஷயங்களை அறிந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது.



ஹரிபாபு

''ஒப்பனைக் கலைதான் படத்துக்கு உயிர் நாடி. 1928ம் ஆண்டிலிருந்து இந்தக் கலையில் எனக்கு அனுபவம். 'மேக்கப்' கலைஞன் முதலில் திரைக் கதையை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். கதாபாத்திரங்களின் குண இயல்புகளை நன்கு புரிந்து கொண்டு அதற்கேற்ப நடிகர்களுக்கு ஒப்பனை செய்ய வேண்டும். ஆகவே, ஒப்பனைக் கலைஞருக்கு நல்ல கலை ஞானமும், இலக்கிய அறிவும் இன்றியமையாதவையாகின்றன'' என்று உணர்ச்சியோடு கூறினார் திரு ஹரிபாபு. ஒப்பனைக் கலை நம் நாட்டுக்குப் புதியதல்ல. கதக்களியில் கையாளப்படும் ஒப்பனை மேல்நாட்டவரையே பிரமிக்கச் செய்கிறது என்றும் குறிப்பிட்டார்.

சினிமாத் துறையில் புகுவதற்கு முன்பு அவர் கல்கத்தாவில் பிரசித்தி பெற்ற ஓவியரா யிருந்தார். கல்கத்தா ஓவியக் கலைக் கூடத்தில் அக்கலையைப் பயின்றார். சினிமாத் துறையில் நுழையச் சந்தர்ப்பம் கிடைத்த போது ஒப்பனைக் கலையைப் பற்றி அறிந்து கொள்ள அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. முதலில் அவர் உதவி ஒளிப் பதிவாளராக இருந்து காமிராவை இயக்கி வந்தார். அப்பொழுது பேசாத படம் ஓடிய காலம். ஒப்பனைக் கலைஞர்கள் அதிகமாக இல்லாத காலம். திரு ஹரிபாபு கைதேர்ந்த ஓவியராதலால் அவருக்கு ஒப்பனைக் கலையைப் பயில்வது கஷ்டமான காரியமாயிருக்கவில்லை. தமிழ் நாட்டுக்கு வந்து சுமார் நூறு படங்களில் தம் கைவண்ணத்தைக் காட்டியிருக்கிறார். சமீபத்தில் வெளியான ''நானும் ஒரு பெண்'', ''அன்னை இல்லம்'' முதலிய படங்களை உதாரணமாகக் கூறலாம்.

பிளாஸ்டிக் மேக்கப் என்கிற அருங்கலையில் இப்பொழுது கவனம் செலுத்தி ஆராய்ச்சியும் செய்து வருகிறார் ஹரிபாபு. சரித்திரப் பிரசித்தி பெற்ற ஒரு பாத்திரத்தை ஏற்று நடிக்கத் திறமையான நடிகர் அகப்படலாம். ஆனால் அவருக்கு உருவ ஒற்றுமை இல்லாமல் போகும். அதற்குத்தான் பிளாஸ்டிக் மேக்கப் உதவும். அதே நேரத்தில் மெழுகினால் செய்த பொம்மை போல் அவர் முகத்தை உணர்ச்சியற்றதாய் மாற்றிவிடாமல் பாவங்களை வெளிப்படுத்தவும் வசதியாக அமையும். ''கணவனே கண் கண்ட தெய்வம்'', ''பெற்ற மனம்'' முதலிய படங்களில் பிளாஸ்டிக் மேக்கப் முறையைக் கையாண்டு மறக்க முடியாத பாத்திரங்களை உருவாக்கியிருக்கிறார். திரு சிவாஜி கணேசனிடம் முதுமையின் தோற்றம் தத்ரூபமாகக் கொண்டுவரப் பட்டிருப்பதை மேலே இருக்கும் புகைப்படத்தில் கண்டுகொள்ளலாம்.

— விஜயம்

பதினொன்ரும் அத்தியாயம்

"**ய**சோதை!" என்று குரல் கொடுத்துக் கொண்டே வந்தார் ராஜு.

யசோதை சமையற் கட்டிலிருந்து எழுந்து வந்தாள். தாய்மைப் பேற்றை அடையப் போகும் ஆனந்தம் அவள் முகத்தில் பிரதிபலித்தது.

"இதோ, பார், யசோதை! இன்று கதம்பம் வாங்கி வரத்தான் நினைத்தேன். ஆனால் அருமையான ஜாதி மல்லிகை விற்றுக் கொண்டிருந்தான். அதில் நிறைய வாங்கி வந்துவிட்டேன்." கையில் இருந்த பொட்டலத்தை மேஜையின்மீது வைத்தபடி ராஜு கூறினர்.

மல்லிகையைப் பார்த்ததும் யசோதைக்குச் சுசிலாவின் நினைவுதான் வந்தது. சுசிலாவுக்கு மல்லிகை என்றால் நிரம்பப் பிடிக்கும். அந்தக் கல்கத்தா நகரில் மல்லிகை இது போல் மணம் நிறைந்ததாகக் கிடைக்குமோ, கிடைக்காதோ! யாரிடமாவது ஆசையாகக் கொடுத்தனுப்பக் கூடிய பண்டமுமல்ல இது. மூன்று நாட்கள் ரயிலில் போவதற்குள் வாடி வதங்கி விடும். விளையாட்டுப் போல் சுசிலா ஊருக்குச் சென்று பத்து மாதங்களுக்கு மேலேயே ஆகி விட்டன. யாராவது கல்கத்தாவுக்குப் போகிறார்கள் என்று தெரிந்து விட்டால் உடனே அப்பளம், கருவடாம், அது இது என்று மூட்டை கட்ட ஆரம்பித்து விடுவாள் யசோதை. ஸ்டேஷனுக்குச் சென்று மனிதர்களைத் தேடி அவர்களிடம் அந்தப் பண்டங்களை ஒப்படைப்பது ராஜுவுக்குப் பெரிய பொறுப்பாக இருக்கும்.

"யசோதை! போன மாதம்தானே கூடை நிறைய சாமான்களை அனுப்பினாய்? அதற்குள் மேலும் என்ன சேகரித்து விட்டாயோ!" என்று ராஜு அலுத்துக் கொள்வார்.

"பாவம், தனியாக எப்படிச் சமாளிக்கிறளோ! அவள் அம்மா இருந்தால் இன்னும் என்னவெல்லாம் செய்து அனுப்புவாளோ! சுசிலா கடிதம் எழுதுவதைக் கூட நிறுத்திக் கொண்டு விட்டாள். அவள் அங்கே எப்படி இருக்கிறளோ....!"

"அவள் அம்மா இருந்தால் இவ்வளவு உயர்வாகச் சுசிலாவுக்கு நடக்காது. நீதான் ஏதேதோ செய்கிறாய்.... சரி சரி, நீ உடம்பை அலட்டிக் கொள்ளாதே. அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்..." ராஜு வாசல் வராந்தாவுக்குப் போய் விட்டார்.

மாடி அறை இப்பொழுதெல்லாம் தூசியும் தும்புமாகப் படிந்து கிடந்தது. மாடியோடு கிடந்தவர் இப்படி மாடிப் பக்கமே போவதில்லையே என நினைத்தாள் யசோதை. சுசிலா இப்பொழுது இங்கிருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டுக் கொள்வாள் என்றிருந்தது அவளுக்கு. சித்தியோடு சகஜமாகப் பழக வேண்டும் என்று அப்பாவோடு எவ்வளவு வாதாடியிருக்கிறாள் அவள்!

இன்னும் இரண்டு மாதங்கள் சென்றால் சுசிலாவுக்குத் தங்கையோ தம்பியோ பிறந்துவிடும். சுசிலாவுக்கு இதை எப்படித் தெரியப்படுத்துவது.....? ராஜு இதைப் பெரிதாக நினைக்கவில்லை. ஆனால் யசோதைக்கு வேண்டியவற்றை வாங்கிவந்தார். தினமும் பூ வாங்கி வருவதும் வழக்கமாகிவிட்டது. யசோதையைப் பரிசோதித்த லேடி டாக்டர் அவளைச் சற்றுக் கவனமாக இருக்கக் கூறினாள்.

அன்று காலை யசோதை காப்பி போட்டுக் கொண்டிருந்தாள். வாசலில் டாக்ஸிச் சத்தம் கேட்டு விரைந்தா



''அடே, சுசிலாவா, வாம்மா வா.... ஏது.... எட்டு மாதம் இருக்கும் போல் இருக்கே..... ஒரு வரி எழுதக் கூடாதா சுசீ. இந்த உடம்பில் நீ தனிச்சு வரலாமா? அப்பாவை அனுப்பி நல்ல நாள் பார்த்து அழைச்சிட்டு வரச் சொல்லி யிருப்பேனே..... நியாகுகூட எழுதாமலிருந்து விட்டாளே....''

யசோதையின் வரவேற்பைச் சுசிலா காதில் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை. சித்தியை அவள் வியப்புடன் நோக்கினாள்.

''சித்தி.....நீயும்......''

யசோதை வெட்கத்துடன் தலை குனிந்தாள். ''ஆமாம், சுசிலா! நீ விரும்பியதுபோல் என் வாழ்வும் நிரம்பி விட்டது......'' என்றாள் மெதுவாக.


அதற்குள் உள்ளிருந்தபடி ராஜு, ''யசோதை! காப்பியைக் குடித்துவிட்டுப் போயேன். இந்த உடம்பில் ஜாக்கிரதையாக இருக்கணும்னு டாக்டர் சொன்னாரே'' என்று பரிவுடன் குரல் கொடுத்தார்.

சுசிலாவுக்குப் பூமியே சுழல்வது போல் இருந்தது. அவள் என்ன நினைத்து வந்தாள்! இங்கு இவ்வளவு மாறுபாடா...... இங்கேயும் அவளுக்கு ஆதரவு மங்கி விடுமோ !

''எழுந்து வாருங்கள். சுசிலா வந்திருக்கிறாள்.....'' என்று யசோதை உட்புறம் நோக்கிக் கூவ, ''சுசிலா வா, வாம்மா'' எனத் தந்தை அவளை வரவேற்றது ஒன்றும் சுசிலாவின் காதுகளில் விழவில்லை.

ஏகபோக அன்பை எதிர்நோக்கி ஓடோடி வந்தவளுக்கு இந்தச் சூழ்நிலை பெரும் ஏமாற்றத்தைத்தான் அளித்தது. யசோதை சுற்றிக் கொட்டித் திருஷ்டி கழித்ததுகூடக் கண் திரையில் படாதபடி முட்டி மோதி வந்த கண்ணீர் மறைத்தது.

எஸ். ரங்கநாயகி



தியாகு அன்று வந்த கடிதத்தை மேல்நோக்காகப் படித்து விட்டான். மீண்டும் ஒரு முறை படிக்கச் சுவாரசியமே கிட்டாது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. திரும்பத் திரும்பப் படித்து அதில் அவன் ருசி காணப் போவதில்லை. இதுபோல் ஒரு கடிதம் சென்னையிலிருந்து வருமென்று அவனுக்குத் தெரியும். ராஜு—தான் மகளின் பேச்சைக் கேட்டுவிட்டு ஏதாவது எழுதுவார் என நினைத்தான். ஆனால் எழுதியிருந்தவள் யசோதை.

அவள் எழுதியிருந்தாள்: 'தியாகு! மாமியார் என்ற உறவு வைத்தால் நான் மாப்பிள்ளைக்குக் கடிதம் எழுதுவது முறையல்ல என்பதை அறிவேன். ஆனால் இந்தக் கடிதத்தின் மூலம் எதைப் பற்றி நான் அறிய ஆவலுள்ளவளாக இருக்கிறேனோ, அதன் பொருட்டு, சகோதரி என்ற உரிமையில் உனக்கு எழுதுகிறேன்.

'சுசிலாவை நீ தனித்து ரயிலேற்றி விட்டது தவறு. அவளைக் கஷ்டப்பட்டு எப்படியாவது நிறுத்திவைத்து எங்களுக்குக் கடிதம் எழுதியிருந்தால் சுசீலாவின் அப்பாவிடம் கூறி நான் அவரைக் கண்டிப்பாக அனுப்பியிருப்பேன்... வந்தவள் ஏன் இவ்விதம் எப்பொழுதும் சோர்ந்து உட்கார்ந்து கிடக்கிறாள் என்பதே புரியவில்லை. அவளுக்கு மனத்தில் என்னதான் குறை இருக்குமோ... கர்ப்ப காலத்தில் மனக் குறையுடன் இருந்தால் குழந்தைக்கு ஊனம் காணும் என்பார்கள்... சுசிலாவிடம் பேச்சுக் கொடுத்து அவள் மனச் சங்கடத்தை அறிய நானும் எவ்வளவோ முயன்று விட்டேன். அவளுக்குக் கோபம் அதிகரிக்கிறது. மனத்தில் உள்ள விஷயத்தைப் பகிர்ந்தெடுக்கப் பக்குவமில்லை... இவ்வளவு நாட்கள் நீங்கள் இருவரும் இல்லறத்தில் என்றும் காணாத குதூகலம் கொண்டிருப்பீர்கள்; பருவ காலத்துப் படிகளில் இன்னிசை எழுப்பிக் கற்பனைப் பூங்காவில் ஆனந்தமாகத் திரிந்து கொண்டிருப்பீர்கள் என்றுதான் நினைத்தேன். ஏனெனில் இருவருக்கும் குறை நேர வழியில்லை. வயதிலோ, பணத்திலோ குறை கிடையாது.... அதனால்தான் குறை மூடி விட்டதில் எனக்கு ஆச்சரியம் உண்டாகிறது... தியாகு! இந்த உலகில் யாருமே குறை கொண்டு வாழ்வதை நான் விரும்பவில்லை. அதனால்தான் என் வாழ்வையே நான் நிறை கண்ணோடு பார்க்கிறேன். பலனும் கிட்டியுள்ளது என்றுதான் சொல்ல வேண்டும்.

'நீ ஊருக்குச் சென்றபோது உனக்கு அவசரத் தபால் ஒன்று வந்து அதன் காரணமாக நீ ஊருக்குப் புறப்பட்டது உனக்கு நினைவிருக்குமே! கடிதத்தை எரித்துவிட்ட நீ, கவரை மட்டும் போட்டு விட்டாய். உனக்குக் கடிதம் யார் எழுதியது என்பதை அறிந்தேன்... ஒரு விஷயம் தியாகு. கணவன்—மனைவி என்று ஏற்பட்ட பிறகு அவர்களுக்குள் இரகசியம் இருப்பது நல்லதல்ல. தம் பதிகளுள் வயதோ, பணமோ விளைவிக்காத கலகத்தை ஒருதலைப்பட்ச ரகசியம் விளைவித்துவிடும்... இரகசியம் காரணமாகச் சுசீலாவின் மனம் புண்பட்டிருந்தால், நான் உனக்கு இவ்வளவு தான் எடுத்துச் சொல்ல முடியும்.

'சுசிலாவின் வாழ்வு நன்றாக இருக்க வேண்டும் என்பதே என் விருப்பம். அவள் அம்மா இருந்தால் அவளும் அதைத்தானே விரும்புவாள்! நான் கொண்டுள்ள விருப்பத்தைப் பூர்த்தி செய்து நீ எனக்கு உதவுவாய் என்று நம்புகிறேன்....'

இன்னும் ஏதேதோ சில விஷயங்கள் எழுதியிருந்தாள்.

தியாகுவின் மனம் வேதனையில் ஆழ்ந்து கிடந்தது. அடர்ந்த கேசத்தில் கைவிரல்களை அலையவிட்டுத் தவித்தது தான் மிச்சம். அமைதியின் அடிச்சுவடு புலப்படவில்லை. துயரம் எங்கிருந்து ஆரம்பிக்கிறது என அவனுக்கு ஆரம்பமே கண்டும் காணாததுமாக இருந்தது... சுசீலாவிடம் அவன் முழுத் தவறும் இருப்பதாக நினைக்கவில்லை.

ஆசாபாசங்கள் நிறைந்தவள் சுசீலா. அவளுக்கும் ஈடு கொடுக்கத்தான் விரும்பினான். ஆனால் 'நம்பிக்கை' என்பது நசிந்து விட்டால் ஆசாபாசங்களும் நசுங்கிவிடும் என்பதைச் சுசீலா உணரவில்லையே! யசோதையின் எதிரே சுசீலாவோடு இன்பமாகப் பழகினால் யசோதையின் மனம் தவிக்குமே என அவன் எவ்வளவு சிரமத்துடன் தன் மனத்தை அடக்கி வைத்திருந்தான். கல்கத்தா போய்விட்டால் இருவரையும் ஏன் என்று கேட்பவர் இல்லை. இல்லற ராஜ்யத்தில் இருவருமே சர்வாதிகாரிகள் என்றுதான் அவன் நினைத்திருந்தான். அந்த நம்பிக்கை ஒளி காரணமாகவே யசோதையின் எதிரில் தன்னடக்கமாக நடந்து கொண்டான்.

ஆயினும் கல்கத்தாவுக்கு வந்ததும் அந்த ஒளி மங்கிவிடும் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை. சுசீலாவின்மீது தவறா அல்லது சூழ்நிலை தவறா அல்லது தன் தவறா என அவனுக்குப் புரியவில்லை. அந்தப் புரியாத புதிரை விடுவிப்பது


ஸிர்ஸில்க்
டபெட்டா, ஸாடின்,
கிரேப்,
சாதா & பிரிண்டட்
ஸிர்ஸில்க் லிட்.
ஸிர்பூர்,
காகஸ்நகர், ஆந்திரப் பிரதேசம்

போல்தான் இருந்தது, யசோதையின் கடிதம். அவள் எழுதியிருப்பது போல் வயதும், பணமும்கூட உண்டுபண்ணுத கலகத்தை இரகசியம் ஏற்படுத்தி விடும் என்பது நன்ருகப் புரிந்தது.

கணவனும் மனைவியும் உடலோடு ஒட்டி வாழப் பிரதிக்ஞை எடுத்த பிறகு அதில் அடைபட்டிருக்கும் உள்ளங்களும் ஒட்டி வாழ வேண்டும் என்பதை அவன் அறிவான். ஆனுல் கீதாவின் பண்பு நிறைந்த நற்குணம் காரணமாகச் சுசீலாவிடம் மட்டுமல்ல, எவரிடமும் அவளைப் பற்றி ஒன்றும் கூறவே மாட்டேன் என்ற பிரதிக்ஞையையும் விவாகத்துக்கு முன்பே அவன் எடுத்து விட்டான். ஒரு விதத்தில் இந்தப் பிரதிக்ஞையை வாக்குத்தத்தம் என்றே கூறலாம். இந்த வாக்குத் தத்தம் இவ்வளவு தூரத்துக்கு வந்து விசுவரூபம் எடுத்துவிடும் என அவன் நினைக்கவேயில்லை. எந்தக் கஷ்டம் வந்தாலும் அதை அவன் வெற்றி காணவே விரும்பினுன்.

யசோதையை விடச் சுசீலா அதிகக் கஷ்டம் அடைந்திருக்கவில்லை. தனக்குச் சம வயதுடைய ஒரு பெண்ணின் தந்தை அவளுக்குக் கணவன். கணவனிடம் பண்பும் யசோதை காணவில்லை. அப்படியிருந்தும் அவள் தளர்வு அடையவில்லை. இந்தக் குணம் சுசீலாவிடம் ஏன் காணப்படவில்லை? பண்பும், பொறுமையும், நம்பிக்கையும் ஏட்டுப் படிப்பில் ஏருத விஷயங்களோ!

யசோதையை மணந்திருந்தால் ...... மாமாவும் அவசரப்பட்டு விட்டார். அவனுக்கும் கஷ்டம்.... சே, சே, அதைப் பற்றி நினைப்பதும் தவறு. சுசீலா, யசோதை இருவருக்குமே துரோகம் இழைப்பதாகும்....

இதற்குள் அடுத்த பிளாக்கிலிருந்து ஒரு சிறு பையன் வந்தான். "மாமா! இந்தக் கடிதம் உங்களுக்கு வந்தது. என் தம்பி தவருக போஸ்ட்பாக்ஸிலிருந்து எடுத்து வந்துவிட்டான். அப்பா உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொடுத்து விட்டு வரச் சொன்னுர்" என்று கூறிவிட்டு அவன் கையில் ஒரு கார்டைக் கொடுத்தான். தியாகு அதை வாங்கிப் படித்தான். உணர்ச்சித் தவிப்பில் அவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. கடிதத்தைப் பலமுறை படித்தான். சந்தேகமேயில்லை. ஒவ்வொரு வார்த்தையும் செய்தியை ஊர்ஜிதம் செய்தது.

மகள் மூலம் பேரன் பிறக்கப் போவதை அறிவித்திருந்த அவனது மாமா மனக் குறையையும் எழுதியிருந்தார். மாமா எழுதியிருந்ததும் சரிதானே! உண்மையில் ராஜுவுக்கு இது இரண்டாவது குழந்தையாக இருக்கலாம். யசோதைக்கு இது தலைப் பிரசவம். பிறந்த வீட்டில் தலைப் பிரசவம் நடக்க வேண்டும் என யசோதையின் தாயார் விரும்பினுள். பண வறுமையில் வாடும் குடும்பமாக இருந்தாலும் தாயின் பாசமும் அன்பும் எங்குமே வறுமை கண்டு விடாது. யசோதையை அனுப்ப அவளது கணவர் சம்மதித்தாலும், யசோதை கண்டிப்பாகப் பிறந்த வீட்டுக்குப் போக மறுக்கிருளாம். தனது மற்றக் குழந்தைகளை விட்டு விட்டுப் பேறு காலத்தில் அருகில் இருக்க யசோதையின் தாய்க்கும் வசதி இல்லையாம். அதனுல் மாமா மருமானுக்கு அனைத்தும் குறிப்பிட்டு எழுதிய கடிதத்தில் கடைசியில் ஒரு வேண்டுகோளும் விடுத்திருந்தார். யசோதைக்கு உதவியாகச் சுசீலாவையாவது அனுப்பி வைக்கும்படி உருக்கமாகக் கேட்டு எழுதியிருந்தார்.

தியாகு ஒரு பக்கம் குதூகலம் கொண்டான். யசோதையை இரண்டாந் தாரமாகக் கொடுத்து விட்டது எல்லையற்ற வேதனையை அளித்தாலும், அவள் வாழ்வு நிறைவு கண்டு விட்டது குறித்து

ஏட்டிக்குப்போட்டி

எல்லைப்புறத்திலிருக்கும் நம் ஜவான்களுக்காக 11,000 அடி உயரத்தில் சினிமா காட்டப்பட்டது. உலகில் மிக உயர்ந்த சினிமா இதுதான்.


—பி. டி. ஐ.

நமது திரைப் படக் கலை உயர வேண்டும் என்று இனிமேல் யாரும் மூச்சுவிடக் கூடாது!

ஃ ஃ ஃ

பாகிஸ்தானில் உள்ள சிகை அலங்காரக் கலைஞர்கள், '1963ம் வருஷத்திய எடுப்பான தோற்றம் கொண்ட நப'ராக ஜனதிபதி அயூப்கானைத் தேர்ந்தெடுத்திருக்கிறுர்கள். —செய்தி

'காஷ்மீர மக்களுக்குச் சுய நிர்ணய உரிமையைக் கோருவதற்கு முன்னுல் பாகிஸ்தானிகளுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட வேண்டு மல்லவா' என்று துணிந்து கேட்ட அவாமி லீக், சுமாருஸ்ஸாமா அவர்களுக்கு அயல் நாட்டு மந்திரி புட்டோ மேலே குறிப்பிட்ட செய்தியைச் சுட்டிக் காட்டி 'பாகிஸ்தானிலும் தேர்தல் நடக்கிறதே' எனச் சமாதானம் கூறலாம்!



"என்ன இது! பாதிப் பரீட்சை எழுதிக்கொண்டிருக்கும்போது வெளியில் போகிறாய்?"

"கொஞ்சம் போஸ்டாபீஸுக்கு அர்ஜெண்டா போக வேண்டியிருக்கு...!"

"போஸ்டாபீஸா! எதற்கு?"

"கேள்வித் தாளில், 'உன் மாமாவுக்கு இந்த லீவு நாளே அங்கு வந்து கழிப்பதாக ஒரு லெட்டர் எழுதவும்' என்று போட்டிருக்கு. எழுதிப் போட்டு விட்டு உடனே ஓடி வந்து விடுகிறேன், சார்....!"

ஆனந்தம் கொண்டான். பொறுமை ஒன்றையே விளக்காகக் கொண்டு நம்பிக்கை எண்ணெயை ஊற்றிக் கடைசியில் அவன் நிறை வழியைக் கண்டு விட்டான்.

ஆனால் இதே நேரத்தில் சுசீலாவும் அங்கு போய் நிற்க வேண்டியிருக்கிறதே! மனிதன் கண்டு அறிய முடியாத காலப் போக்கே அவனுக்கு விசித்திரமாக இருந்தது. தாய் என்ற முறையில் சுசீலாவுக்குப் பணிவிடை செய்ய முன்வந்தாள் யசோதை. மாமாவோ தாயின் உதவிக்காக மகளை அனுப்பும்படி வேண்டியிருந்தார். ஆனால் ஒருவரும் எதிர்பாராத விதமாகத் தாய்க்கும் மகளுக்கும் ஒரே காலத்தில் உதவி வேண்டியிருக்கிறது. எதிர்பாராதவிதமாக இருவரும் எதிர்பாராத நிலையில் சந்தித்திருக்கிறார்கள். இருவரும் இக்கட்டான இந்த நிலையை எப்படி வரவேற்றார்களோ! சுசீலா கல்கத்தாவிலிருந்து புறப்பட்டபோது அவள் கர்வத்துடன் கூறிச் சென்றது இன்னமும் நினைவிருக்கிறது. தந்தை யசோதையிடம் இன்னமும் பராமுகமாக இருப்பார் என்று நினைத்துச் சென்றவள் இப்பொழுது அங்கு நிலவும் நிறைவு கண்டு பொறுமைப்படுவாளா? அல்லது நல்நெஞ்சுடன் வரவேற்பாளா? யசோதை எழுதியிருப்பதைப் பார்த்தால் சுசீலாவுக்கு அதிர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டுமென்றுதான் தோன்றுகிறது. அதனால்தான் அவள் தன் மனத்தைத் திறந்து காட்டவில்லை.

தியாகு எழுந்து ஒரு கார்டைக் கையிலெடுத்தான். யசோதைக்கே நேராகக் கடிதத்தை எழுதி விட்டான்.

'யசோதை! மாமாவின் மூலமாக உன் வாழ்வு நிறை பாதையில் திரும்பி விட்டதை அறிந்து மகிழ்கிறேன். இந்த நிலையில் நீ வீணாக மனத் துன்பம் அடைவது சரியில்லை. ஒரே ஒரு விஷயத்தை மட்டும் மீண்டும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். சுசீலாவும் நானும் விவாகமான தம்பதிகள். அவள் மனத்தில் எப்படி மற்றவர்களுக்கு இடம் கொடுக்க மாட்டாளோ, அதேபோல் அவள் ஒருத்தியே என் மனத்திலும் இருப்பாள். இந்த அடிப்படையில்தான் எங்கள் வாழ்க்கையைப் புரிந்து கொள்ள நான் விரும்புகிறேன். மீண்டும் கூறுகிறேன். சுசீலாவை நான் வஞ்சித்துவிட மாட்டேன். — **தியாகு**'

பிரமாண ரூபத்தில் கடிதத்தை முடித்துவிட்டுத் தபாலில் சேர்த்து விட்ட பிறகுதான் தியாகு சற்று நிம்மதி கண்டான்.

கல்கத்தாவிலிருந்து வந்த கடிதத்தைத் தபால்காரனிடமிருந்து வாங்கியவள் சுசீலாதான். தியாகு எழுதியிருக்கிறான் என்பதை அவள் புரிந்து கொண்டு விட்டாள். அன்று ராஜூ ஆபீசுக்குச் செல்லவில்லை. தம் அறையில் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து எதையோ படித்துக் கொண்டிருந்தார். சுசீலா வேண்டுமென்றே யசோதையைத் தாண்டிக் கொண்டு அந்த அறைக்குச் சென்றாள்.

அங்கிருந்தபடியே, "சித்தி! உன் பெயருக்கு ஏதோ கடிதம் வந்திருக்கிறது. கல்கத்தா முத்திரை போட்டிருக்கிறது" என்று கூவினாள். மாமியாருக்கு மாப்பிள்ளை கடிதம் எழுதுவது அப்பாவுக்குத் தெரியட்டும் என்றுதான் அவள் இரைந்தே கூறினாள்.

ஆனால்...

"சுசீலா! இங்கிருந்து ஏன் கூப்பாடு போடுகிறாய்? யசோதையைத் தாண்டித்தானே இங்கே வந்தாய்? அங்கேயே கொடுத்திருக்கக் கூடாதா?

பாவம், இப்பொழுதுதான் வேலையை முடித்துக் கொண்டு அவள் படுத்தாள்'' என்றார் ராஜு. அத்துடன் நில்லாமல் சுசீலா மேஜையின் மேல் எறிந்த கடிதத்தைத் தாமே யசோதையிடம் எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்தார். அதைப் படிக்கவும் இல்லை.

சுசீலா விக்கித்து விட்டாள். அப்பா உணர்ச்சியற்ற ஜடமாக மாறிவிட்டாரா? ஓர் ஆடவன், மேலும் யசோதையை மணக்க இருந்த ஒருவனே, யசோதைக்குக் கடிதம் எழுதியிருக்கிறான். அதைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம்கூட இவருக்குத் தோன்றவில்லை. சித்தியை ஏறிட்டுப் பார்க்காதிருந்த தந்தை இப்பொழுது அவளுக்குப் பணிவிடை செய்யுமளவுக்கு எப்படி மாறினார்!

சென்ற காலமெல்லாம் கனவு. இப்பொழுது நடப்பதுதான் உண்மை... அவள் எவ்வளவோ ஆசைக் கனவுகள் கட்டித் தனது மண வாழ்வை எதிர் நோக்கியிருந்தாள். சென்னையிலிருந்த போது தியாகுவுடன் விவாகம் நிச்சயமானபோது வாழ்க்கை கரும்பாக இனிக்கும், இந்த இடத்தில் கசப்புக்கு இடமேயிருக்காது என நினைத்தாள். சம வயது, போதிய வரும்படி, உற்சாகம் நிறைந்த கணவன் — வாழ்க்கை சரிந்து விழ எங்கிருந்து காரணம் குறுக்கிடப் போகிறது? அந்நிலையில் அவளுக்கு யசோதையின் மீது பரிதாபமாகத்தான் இருந்தது. சமமற்ற வயது, அலட்சியம் செய்யும் கணவன் — பாவம், தன் வாழ்வைப் பலியாக்கிக் கொண்டவள் என்ற அனுதாபம் மேலிட்டிருந்தது.

அதெல்லாம் பொய்யாகி இப்பொழுது காண்பதுதான் மெய்யாகி நிற்கிறது. அவள் எதிர்பார்த்திராத காரணம் குறுக்கிட்டு அவள் வாழ்வைப் பாழடித்து விட்டது. யசோதையோ எதிர்பாராத வகையில் இன்பம் காண்கிறாள்.

ரயில் பிரயாணத்தின்போது கூட சுசீலா நினைத்து வந்தாள்: பிறந்த வீட்டில் அவளுக்குத் தந்தையின் ஏகபோக உரிமை கிடைக்கும்; சித்தியும் முன் போலவே அன்பாக இருப்பாள்...

வீட்டுக்கு வந்த பிறகு, ஏற்பட்ட அதிர்ச்சிக்குப் பிறகும் அவள் உணர்ந்தாள்—சித்தி அவளிடம் மாறாத அன்பு கொண்டிருந்தாள் என்பதையும், அப்பாவும் முன்போலவே அவளைப் பாவித்தார் என்பதையும். அப்படியிருந்தும் அந்தச் சூழ்நிலை அவளுக்கு ஏன் தாங்க முடியாத கிலேசத்தை அளித்தது? தான் வாழ்வில் காணாத சுகத்தைச் சித்தி அனுபவிக்கிறாளே என்ற பொறாமையா?

(தொடரும்)

திரைத் துணுக்குகள்

கேட்கிறோம்; சொல்லுங்கள்:

வள்ளுவன், அருணகிரி நாதர் என்று திரைப் படங்கள் தற்போது உருவாகி வருவதாய் அறிகிறோம். இவர்களைப் போன்ற பெரிய புலவர்கள், கவிஞர்களைப்பற்றி எத்தனை தமிழ்ப் படங்கள் இதுவரை வெளியாகியுள்ளன? யோசித்துப் பட்டியலைத் தயாரிக்கக் குறைந்தது ஒரு வார காலமாவது உங்களுக்கு ஆகும் என்பதால் விடையை விவரமாக அடுத்த இதழில் வெளியிடுகிறோம்.

சொல்லுகிறோம்; கேளுங்கள்:

விடைகள்: 1. ரயில் செல்லும் திசையை நோக்கியவாறே கைகாட்டியும் சாய்ந்திருக்கிறது.

2. நடிகர்திலகம்.

கேள்விகள்: 1. பச்சை விளக்கு திரைப்படம் பற்றிப் பத்திரிகைகளில் வெளியான சில விளம்பரங்களில் பகிரங்கமாக நேர்ந்துவிட்ட சிறிய தவறென்ன?


2. சாவித்திரிக்குச் சமீபத்தில் தரப்பட்ட சிறப்புப் பட்டம் என்ன?

உங்களுக்குத் தெரியுமா?


பாரத நாட்டில் மொத்தம் இருபத்தி மூன்று மொழிகளில் திரைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. அனைவருக்கும் தெரிந்த சில பிராந்திய மொழிகளைத் தவிர பின்வரும் மொழிகளிலும் இந்திய சினிமா தயாராகிறது. பஞ்சாபி, அஸ்ஸாமி, ஒரியா, அரபிக், பர்மிய மொழி, ஜெர்மன், கொங்கணி, மலே மொழி, மார்வாரி, நேபாளி, பெர்ஷியன், புஷ்டு ஸிந்தி, சிங்களம்.

வெள்ளித்திரை விநோதங்கள்

நவீன பாணி ஓவியங்கள் பலவற்றைப் பார்த்து நம்மில் பலர் ஒன்றும் புரியாமல் விழிக்கிறோம். இந்த நவீன பாணி திரை உலகிலும் புகுந்திருக்கிறது. ஒரு நவீன பாணி சினிமாவில் ஒரு காட்சி: ஒரு பெண்ணின் முகம் மட்டும் பெரிதாகத் தெரிகிறது. அவள் வாய்க்குள்ளிருந்து குபுக்கென்று முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஹாரி ட்ருமன் வெளிப்படுகிறார். பெண்ணின் மூக்கிலிருந்து ஒரு கத்தி வெளிப்படுகிறது. அந்தக் கத்தி ட்ருமனின் தலையைத் தட்டுகிறது. ட்ருமன் வாய்க்குள்ளேயே மறைந்து விடுகிறார். கத்தியும் மூக்குக்குள்ளேயே பின்னேக்கிச் சென்று மறைந்துவிடுகிறது. — தலையைச் சுற்றுகிறதா? இப்படிப்பட்ட சில படங்களுக்கு போர்டு பவுண்டேஷனுடைய பரிசுகளும் பாராட்டுக்களும் கிடைத்துள்ளனவே!



சூடாக ஒரு கப் தேயிலை
அருந்தியபின் ஏற்படும்
புது மலர்ச்சியே அலாதிதான்!



நீங்களே ஒப்புக்கொள்வீர்கள்

டாடா-ஃபின்லே
தேயிலை

ஈடில்லாத தேயிலை!

புத்தம் புது தேயிலை
•
சுவையுள்ள தேயிலை
•
சிறந்த தேயிலை

டாடா-ஃபின்லே தேயிலை பருகுவீர்;
உன்னதத் தேயிலை இன்பம் எய்துவீர்!

பின்வரும் ஐந்து ரகங்களில் கிடைக்கிறது:
ப்ரெஸ்டீஜ் டார்ஜிலிங்-டின்னில்
லலித் பொன்னிற அட்டைப் பெட்டியில்
மிலாப் வெள்ளிநிற அட்டைப் பெட்டியில்
பஹாதூர் ஆரஞ்சு நிற அட்டைப் பெட்டியில்
ஷான் நீலநிற அட்டைப்பெட்டியில்





சண்டாளிகா

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஓர் ஏழைப்பெண் மேல்வகுப்பினரால் பலவிதத்திலும் கொடுமைப் படுத்தப்படுகிறாள். தயிர்க்காரனிடம் எல்லாப் பெண்களும் வந்து தயிர் வாங்குகின்றனர்; அந்த ஏழைப் பெண்ணை மட்டும் தயிர் வாங்க விடாமல் ஏசிப் பேசித் துரத்தி விடுகின்றனர், மற்றப் பெண்கள். வளையல் காரப் பெண் வருகிறாள்; எல்லாப் பெண்களும் அவளிடம் கைநீட்டி வளையல் போட்டுக் கொள்கின்றனர்; ஆனால் அவள்... வளையல்காரியிடம் நெருங்கவே முடியவில்லையே. கிணற்றில் குடிநீர் மொள்ளப் போன இடத்திலும் இதே கதிதான். அவள் சமூகத்தின் கொடுமை தாங்காமல் தள்ளாடிச் சோர்ந்து தளர்ந்து கீழே விழுந்து விடுகிறாள். அப்பொழுது புத்தபிக்ஷு ஒருவர் வருகிறார். தாகம் தாங்காமல் தவித்துக்கொண்டு வந்தவர் தீண்டாதவளைப் பார்த்துக் குடிக்கத் தண்ணீர் கேட்கிறார். உலகத்தைத் துறந்த பரமஞானிக்கு வேற்றுமை மனப்பான்மை ஏது? அவளிடம் தண்ணீர் பெற்றுத் தாகம் தீர்ந்த பிக்ஷு அவளை ஆசீர்வதிக்கிறார். அந்த மகாபுருஷரின் ஆசியைப் பெற்ற அப்பேதைப்பெண் ஆனந்த நடனம் புரிகிறாள்.

ரவீந்திர நாத தாகூரின் ''சண்டாளிகா'' என்னும் நாடகத்தைத் தழுவித் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நாரத கான சபாவின் ஆதரவில் 13–4–64, 14–4–64 இரண்டு நாட்களும் சென்னை மியூஸிக் அகாடமி ஹாலில் இந்நாட்டிய நாடகம் நடைபெற்றது.


இதில் விறுவிறுப்பான கதையில்லை, சுவை ததும்பும் நிகழ்ச்சிகளும் இல்லை; காதலனும் இல்லை; காதலும் இல்லை; ஆனால் அனைத்துலகையும் ஆட்கொள்ளும் அன்பு இருக்கிறது.

இன்று தீண்டாமை மறைந்து அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையும் மறைந்து எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்து விட்டது. ஆகவே நாடகத்தில் மிகைப்படுத்தப்பட்டிருக்கும் காட்சிகள் அந்தக் காலத்துக்கு ஏற்றதாக இருந்திருக்கலாம். இப்பொழுது அவ்வளவாக ரஸிக்கும்படியில்லை.

ஆனால் குமாரி வைஜயந்திமாலாவின் முக பாவங்கள் அவர் ஏற்ற பாத்திரத்துக்கு ஏற்றம் அளித்து விட்டன; ஒன்றும் இல்லாத கதைக்கு ஒரு தனிச் சுவை ஊட்டி விட்டன. ஊர்ப் பெண்களால் ஒதுக்கித் தள்ளப்படும் போது வைஜயந்தி வேதனையில் துடிப்பதும், புத்தபிக்ஷுவின் ஆசியைப் பெற்று ஆனந்தக் களிப்பில் ஆடுவதும், மனத்தில் பதிந்துவிட்ட காட்சிகள். வைஜயந்தி இந்த நடன நாடகத்தில் உள்ளத்தைத் தொடும் நடிப்பினால் எல்லோரையும் கவர்ந்து விட்டார்.

சிறந்த நடன நாடகத்துக்கு ஏற்ற முறையில் உயர்ந்த பின்னணி இசை அமைந்திருந்தது. பிரசித்தி பெற்ற இசைக் கலைஞரான ரவி சங்கரின் இசை அமைப்புக்குக் கேட்க வேண்டுமா? தேன் அருவியாய்ப் பெருகுகிறது. ஒவ்வோர் அசைவுக்கும் தகுந்த மாதிரி இசை அமைக்கப்பட்டிருந்தது. விதம் விதமான ராக லய வேறுபாடுகளைக் கையாண்டு அதி நுட்பமான உணர்ச்சிச் சாயல்களை இசையமைப்பின்மூலம் வெளிப்படுத்த முயன்றிருப்பது அரிய முயற்சி. பரவசமடையச் செய்யும் சங்கீதத்துக்கு ஏற்ற முறையில் ஒளிவெள்ளம் அமைந்திருந்தது அபாரம். உதய பானுவின் பொற்கிரணம், இடி, மின்னல் ஆகியவை தத்ரூபமா யிருந்தன. வங்காளக் கலைஞரான தபஸ்சென் ஒளியமைப்புச் செய்து கொடுத்தவர். காட்சி ஜோடனைகளைத் திறமையாகப் புனைந்து கொடுத்திருக்கிறார் கலைஞர் அச்ரேகர். சம்பவங்களே இல்லாத நாடகமானாலும் நடிக்கிற விதத்தில் நடித்தால் சுவையாகவே இருக்கும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகவே விளங்கியது சண்டாளிகா நாடகம். —**காந்தன்**





நீங்கள் அப்படிச் சொல்லமாட்டீர்கள்... ஆனால் அவள் சருமத்தில் ஏதோ குறையுள்ளது!

நீங்கள் அப்படி எண்ணமாட்டீர்கள்... ஆனால் இப்பொழுது அக்குறை நீங்கிவிட்டது!

அதைப்பற்றி நீங்கள் அறிந்திருக்க நியாயமில்லை. அத்தனை நுட்பமாக, துல்லியமாக அதை மறைத்திருக்கிறது இலேசான, லாவண்யமான லாக்டோ-காலமைன்! குறை எதுவாயினும் சாமர்த்தியமாக மறைக்கவல்ல மழமழப்பான இப்பவுடர் தளம்...உங்கள் மேனியெழிலுக்கு மேன்மை அளிக்கிறது.

அத்தியாயம் 4

கன்றல்ல; களிறு!


நான்மாடக் கூடலாம் 'பாடல் சால் சிறப்பின் பாண்டியன் பெருஞ்சீர் மாட மதுரை' நகரத்துப் பெருமக்கள் பரணித் திருநாளை மறந்து மூன்று நூற்றாண்டுகளாகி விட்டன. பரந்து விரிந்து கிடந்த சோழ சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாகப் பாண்டித் திருநாடு மாறிய பின்னர் அதன் வீரர்களும் தமது வீரத் தேவியின் பிறந்தநாளை மறந்து வந்தனர் போலும். நாட்டின் உட்பகுதிகளில் மட்டிலும் ஆங்காங்கே ஒரு சில ஊர்களில் விழா நடைபெற்று வந்தது.

ஆனால் பேரரசர் குலசேகரப் பாண்டியர் மட்டிலும் அந்த நன்னாளை மறந்தாரில்லை. நாடு முழுதும் அதைக் கொண்டாடச் சொல்லி உத்தரவிட வேண்டும் என்பது அவர் எண்ணந் தான். என்றாலும் சோழப் பேரரசின் மேலாட்சி தனது ஒற்றர் கூட்டத்தாலான ஆயிரமாயிரம் விழிகளால் அவரது செயல்களைக் கண்காணித்து வந்தது.

காலம் காலமாகச் சிதறுண்டு உட்பகையை வளர்த்துக் கொண்டிருந்த பாண்டிய நாடு அவருடைய ஆட்சியில் தான் ஒரு கொடிக் கீழ் வந்தது. அதைக் கட்டிக் காத்து ஒருமுனைப்படுத்துவதிலேயே அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார். படைவீரர்களைப் பெருக்கினாலோ, வீரத் திருவிழாக்களை மீண்டும் பாண்டிய மக்களுக்கு நினைவூட்டினாலோ, குலோத்துங்கச் சோழரின் கழுகுக் கண்களான ஒற்றர்கள் ஒன்றினைப் பத்தாக்கி விடுவார்கள்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்ட பாண்டியர் அதைத் தமது அரண்மனைக்குள்ளாகவே குடும்பத் திருநாளாகக் கொண்டாடி வந்தார். இராஜ கம்பீரன் என்று மக்களால் பரிவோடு அழைக்கப்பெற்ற பாண்டியரும் அரசியார் உலக முழுதுடைய பெருந் தேவியுமே தொழுகைக்குரிய ஏற்பாடுகளை நேரில் இருந்து கவனித்தனர்.

வீரர்களின் அரசன் என்ற பொருளில் 'மழவராயன்' என்று போற்றி அழைக்கப்பெற்ற பாண்டியப் பேரரசின் சிங்காதனம் அரசியாரால் பொன்னாலும் மணிகளாலும் அலங்கரிக்கப்பெற்றது. புத்தம் புது மலர்கள் அதன்மேல் தூவப்பட்டன. அரசியாரின் பணிவிடைகளை அருகிலிருந்து கண்ணுற்ற பாண்டியர் அங்கு நின்ற திருக்கோலம், கோயில் வாயிலைக் காத்து நிற்கும் துவாரபாலகர் ஒருவரின் கருங்கற் சிலையை ஒத்திருந்தது. ஐம்பது வயதைக் கடந்து நின்றவரின் உடற்கட்டா அது!



கயல் விழி

அகிலன்

பாண்டியர் குலத்தின் வீரத் திருவாளை உயர்த்திப் பிடித்து, அதன் கூர்மையைப் பதம் பார்ப்பது போன்று தமது விரல்களை மெல்ல அதன் மீது படர விட்டார் பாண்டியர். சரேலென்று பீறிட்டுப் பொங்கியது செவ்விரத்தம். பெருமிதத்தோடு புன்னகை பூத்து, அதில் ஒரு துளியைச் சுண்டி எடுத்துத் தமது நெற்றியில் திலகமாக அணிந்து கொண்டார். வேப்பம்பூ மாலை அருகே வாழை இலையில் சித்தமாக இருந்தது. அதை எடுத்துத் திருவாளுக்கு அணிவித்துச் சிங்காதனத்தின் மீது வைத்தார். வாளுக்கருகே செங்கோல் துலங்கியது; திருக்குறள் ஏட்டுச் சுவடி ஏற்றம் பெற்றது. பொற்கலத்தில் அமுது படைத்து அதனையும் கொண்டு வந்து வைத்திருந்தார் அரசியார் கோப்பெருந்தேவி.



''படை, குடி, கூழ், அமைச்சு நான்கும் சித்தமாகி விட்டன. நட்பும் அரணும் நம்மிடம் ஏற்கனவே இருக்கின்றன'' என்றார் குலசேகரப் பாண்டியர் புதிர் போடுவது போல.

விளக்கம் கோருவது போல் கோப்பெருந் தேவி பாண்டியரின் முகத்தை ஏறிட்டு நோக்கினார்.

''தேவி! இன்றைக்கு நமக்குப் படை திரட்டும் உரிமை இல்லாதிருக்கலாம்.

ஆனால், நாளைக்கு இதே வாளைச் சுற்றித்தான் பாண்டிய நாடே படை வீடாகத் திரண்டெழுந்து நிற்கப்போகிறது. வள்ளுவப் பெருந்தகை அரசர்க்குரிய அறு வகை இலட்சணங்களைக் கூறுகிறாரல்லவா? அதில் படைக்குத்தான் முதலிடம் கொடுத்திருக்கிறார்.''

அடுத்தாற் போல் செங்கோலைச் சுட்டிக் காட்டினார் பாண்டியர்.

''குடிமக்களின் அன்பைப் பெறாத எந்த ஆட்சியும் எந்தக் காலத்திலும் நிலைத்திருக்காது. ஆட்சியில் நேர்மை உள்ள வரையில் மக்களின் அன்பு மாறாதிருக்கும். அதை நினைவூட்டவே இந்தச் செங்கோல்!''

''திருக்குறள் சுவடி.....?'' என்று வியப்போடு வினவினார் அரசி.

''எந்த நல்லரசுக்கும் எந்தக் காலத்துக்கும் ஆலோசனை கூறக் கூடிய பெருந்தகை நமது திருவள்ளுவர். நமது பாண்டியப் பேரரசின் இப்போதைய அமைச்சர்கள் நம் கால மாறுதல்களுக்கு ஏற்ற ஆலோசனைகளைக் கூறுகிறவர்கள். அவற்றைக் கேட்டு முடிவு செய்வதற்கு முன்பு நான் வள்ளுவரையும் தனிமையில் கலந்து ஆலோசிப்பது உண்டு. அவர் எனது அந்தரங்கமான முதலமைச்சர்.''

பொற்கலத்தில் படைத்துள்ள புத்தமுதைப் பற்றிக் கோப்பெருந் தேவிக்கு முன்னமேயே தெரியும். நாட்டுமக்கள் அனைவருக்கும் உணவு வழங்க வேண்டிய கடமை அரசுக்கு உண்டு என்று அரசர் அடிக்கடி கூறுவார். பஞ்சம், பசி, பட்டினி என்ற சொல்லே அவர் செவியில் விழக் கூடாது.

குலசேகரப் பாண்டியர் குறித்த வேளையில் எதையும் செய்து முடிப்பவர். அன்று மட்டிலும் ஏனோ அரசியாரிடம் மனம் விட்டுப் பேசியவாறே காலத்தைக் கடத்திக் கொண்டு வந்தார். அரசியாருக்கும் அதன் காரணம் விளங்காமலில்லை. ஒவ்வொரு கணமும் அவருடைய மனம் சுந்தர பாண்டியனின் வரவுக்காகத் துடித்த துடிப்பு அரசியாருக்கல்லவோ தெரியும்!

நடுச் சாமம் ஆயிற்று. இனியும் எதிர்பார்ப்பதில் பயனில்லை என்பது போல் அரசியாரும் தாமுமாக அவர் சிங்காதனத்தைத் தொழுதெழுந்தார். அதே வேளையில்தான் பாண்டிய நாட்டின் எல்லைப்புற நகரத்திலும் அந்த இளைஞன் கொற்றவைக் கோவிலில் வழிபட்டுக் கொண்டிருந்தான்!

அரசர் உணவு கொள்ளும் வேளையில் அவருடைய நெற்றிச் சுருக்கம் கவலைக் குறி காட்டியது. பிறிதொரு நாளாக இருந்திருந்தால் அரசியாருக்கு அவரிடம் வாய் திறந்து பேசவே துணிவு பிறந்திருக்காது. ஆனால் அரசருடைய அன்றைய மன நிலை அரசியாருக்குச் சாதகமாகத் தோன்றியது.

''இந்த ஆண்டுதான் சுந்தரபாண்டியன் நம்மோடு உடனிருந்து வழிபடவில்லை'' என்று தொடங்கினார் கோப்பெருந்தேவி.

''திரும்பிவிடக் கூடும் என்றுதான் நினைத்தேன். ஆனால் சென்ற இடத்தில் நடந்த நிகழ்ச்சிகள் அவனைத் தாமதப் படுத்தி யிருக்கலாம்.''

'' தாமதமானாலும் போகட்டும்.... ஆனால்.....'' கோப்பெருந் தேவியின் நாத்தழுதழுத்தது; ''பயமறியாத இளங்கன்று அது. கருவூர்ப் போரை நேரில் சென்று காண வேண்டும் என்று அவன் துடித்தபோது அரசரின் அனுமதி கிடைக்குமென்று நான் நம்பவில்லை.''

''இளங்கன்று என்றா கூறினாய்?'' புன் முறுவல் பூத்தார் பாண்டியர். ''கன்று என்ற பாசத்தோடு நீ வளர்த்து வருகிறாயே, அது கன்றல்ல; களிறு! வேங்கையையே எதிர்த்துத் துரத்தப் பிறந்த வேழம் அது. தன்னை அது உணர்ந்து கொள்ளும் காலம் வந்து விட்டது; பாசத்தால் இனி அதை விலங்கிட்டு வளர்க்க முடியாது.''

குலசேகரப் பாண்டியருக்குச் சுந்தர பாண்டியன் தம்பிதான்; உலக முழுதுடைய தேவிக்கு அவன் மைத்துனன்தான். என்றாலும் அவர் அவனைத் தம்பியாகவும் அரசியார் அவனை மைத்துனனாகவும் கருதவில்லை. மகப்பேறில்லாத அவர்களுக்கு அவன் குலம் விளங்க வந்த செல்வக் குமாரனாகவே விளங்கினான்.

''கருவூர்ப் போரைக் காணவேண்டுமென்று அவன் கேட்காமல், போரில் ஏதாவது ஒரு பக்கம் சேர்ந்து வாளேந்துவதாய்க் கூறியிருந்தால்கூட நான் மறுத்திருக்க மாட்டேன்.''

''அரசே!'' என்று துணுக்குற்றுக் கூவினார் கோப்பெருந்தேவி.

''தேவியாருக்கு இன்னும் அவன் குழந்தைதான்; என்றுமே குழந்தைதான். ஆனால் பாண்டிய மக்களின் தந்தையாக வேண்டியவன் அவன்.''

அச்சம் என்பதையே அறியாத பிள்ளையாகிய அவன், போரைக் கண்டமாத்திரத்தில் வெறி கொண்டு களம் புகுந்து விடுவான் என்று அரசியார் பதறினார். வேலும் வாளும் மோதுவதைக் கண்டால், கரியும் பரியும் தாவுவதைக் கண்டால் அவன் தன்னை மறந்து விடுவான் என்ற கவலை அவருக்கு.

பாண்டியர் தம் தேவியாருக்கு ஆறுதல் கூறினார். ''தேவி! விழுப்பரையர் அவனோடு சென்றிருக்கிறார். அவனுக்

குத் தெரியாமல் ஆபத்துதவிகளையும் அனுப்பி யிருக்கிறேன். ஒரு தீங்கும் நேர்ந்து விடாது.''

கோப்பெருந் தேவிக்குத் தம்மைத் தேற்றிக் கொள்ளவே முடியவில்லை. குலசேகரப் பாண்டியருக்கும் அரசியாருக்கும் திருமணமாகிப் பல ஆண்டுகள் கழிந்து விட்டன. இளமைப் பருவத்தில் மூன்று நான்கு ஆண்டுகள் மட்டுமே அவர்கள் இணைபிரியாது வாழ்ந்திருக்கிறார்கள். பிறகு அவர் தந்தையார் காலத்தில் போர்கள் குறுக்கிட்டு அவர்களைப் பிரித்தன. பின்னரே அங்கு நிலையான ஆட்சி தொடங்கியது.

ஆட்சிக்குக் குலசேகரப் பாண்டியர் வந்த பிறகு சிறிது சிறிதாகக் கோப்பெருந்தேவியின் பிடியிலிருந்து விலகி, முழு நேரமும் அரசியல் விஷயங்களிலேயே மூழ்கி வந்தார். அன்பு செலுத்துவதற்கும் மக்கட் பேறு இல்லாமற் போகவே, சுந்தர பாண்டியன்தான் கோப்பெருந் தேவியின் அன்புப் பெருக்கில் திக்குமுக்காடித் திணற வேண்டியிருந்தது. பெற்ற தாயின் முகம் காணாத அவனுக்கு அவர்தாம் தாய்.

அடிக்கடி கைகளிலும் கால்களிலும் காயங்களோடு வந்து சேர்வான் சுந்தர பாண்டியன். அரபு நாட்டுப் புதுக் குதிரையைப் பழக்க முயன்றதாலோ, மலை நாட்டு யானையின்மீதிருந்து தாவியதாலோ ஏற்பட்ட காயங்களாக இருக்கும் அவை. கோப்பெருந் தேவியார் பதறித் துடிப்பார். அவன் சிரிப்பான். வேதனைகளும் வலியும் அவருக்குத்தான்; அவன் முகம் சுளிப்பதுகூட இல்லை. உறக்கத்தில்கூடத் தன்னை மறந்து தன் வலியை அவன் வெளியிட மாட்டான்.

கோப்பெருந் தேவிக்கே அவனிடம் ஓர் அச்சம் உண்டு. கண்ணீரை ஆறாய்ப் பெருக்கி அவனிடம் மன்றாடுவார். விழிப்போடு நடந்து கொள்ளச் சொல்வார். காலம் குறிப்பிட்டு, அது வரையில் பயிற்சிக் களம் செல்லக் கூடாதெனக் கட்டளை யிடுவார். ''ஆகட்டும்!''—என்று உறுதிமொழி கூறி விட்டு, அடுத்தமுறை முழங் காலைப் பெயர்த்துக்கொண்டு வந்து நிற்பான்!

குலசேகரப் பாண்டியர் கூடியவரையில் அவன் போக்கில் குறுக்கிடுவதில்லை. அரசியார் அவனைப் பற்றிக் குறை கூற வந்தால், ''கயல் மீனை நீந்த வேண்டாமென்று நான் கட்டளையிட வேண்டுமா?'' என்று கேட்பார். அரசரிடம் இரத்த பாசமே இல்லை போலும் என்று கூட அரசியார் நினைத்ததுண்டு.

ஆனால் அவர் போக்குக் கோப்பெருந் தேவியால் அறிந்து கொள்ள முடியாதது. களப் போர்களை அவர் மிகுதியாக நடத்த வில்லையே தவிர, தமது சிந்தனையையே ஒரு பெருங் களமாக மாற்றிக் கொண்டிருந்தார். அந்தக் களத்திலே சுந்தர பாண்டியன் நடமாடாத நாளில்லை.

தெற்கே குமரிக் கடலிலிருந்து மாமதுரைப் பதி வரையிலும், மறுபக்கம் சேதுக் கடற்கரை வரையிலும் பரவிக் கிடந்தது அவரது நாடு. சிதறுண்டு போய் உட்பகை நிறைந்த நாடாகச் சீர்கெட்டிருந்த அதை ஒரு குடைக் கீழ்க் கொண்டு வந்து நிலையான ஆட்சிக்குக் கட்டுப்படச் செய்வதே பெரும் போருக்கொப்பானதுதான்.

குலசேகரப் பாண்டியரின் கயல் கொடி வானளாவப் பறந்து கொண்டுதான் இருந்தது. ஆனால் பாண்டிய நாட்டின் அந்தப் பரந்த வானத்தில் அதே சமயம் சோழப் பேரரசின் மேலாட்சி எனும் கார்மேகத் திரள் மண்டிக் கிடந்ததும் மெய்தான்.

அத்தியாயம் 5

இழிவா? அழிவா?

மறுநாள் முற்பகல் பத்து நாழிகைப் பொழுதிருக்கும். சுந்தர பாண்டியரது அரண்மனைத் தோட்டத்து வேப்ப மரங்கள் தங்களது வெண்ணிற மலர்களைத் தரையில் உதிர்த்தவண்ணம் சலனமின்றி நின்று கொண்டிருந்தன. காவலர்களது கண்ணோட்டமும் விழிப்பு நிறைந்ததாக இருந்தது.

பாண்டியரின் அந்தரங்க ஆலோசனை மண்டபம் நான்கு புறங்களும் மரங்களால் சூழப் பெற்றுத் தனித்து நின்றது. அதன் வாயில்களைக் காத்த வீரர்களின் கூர் வேல்கள் அவர்களது கூர்மை பெற்று மின்னிய ஐம்புலன்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கின; செய்தொழில்களும் கடமைகளும் பலப் பல உண்டு அவர்களுக்கு; ஆனால் சிந்தனை ஒன்றே ஒன்றுதான்! குலசேகரப் பாண்டியரின் குறிப்பறிந்து நடந்து கொள்வது: அவருக்காக எந்தக் கணத்திலும் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையுமே தியாகம் செய்வது.

பாண்டியரின் முகக் குறிப்பிலிருந்தே மிக முக்கியமான விஷயம் என்பதை

உணர்ந்து கொண்டார்கள் அவர்கள். உள்ளே பாண்டியர் தமது ஆசனத்தில் வீற்றிருந்தார். அவருக்கு இரு புறங்களிலும் சுந்தர பாண்டியனும் காரானை விழுப்பரையரும் காணப்பட்டார்கள். உறக்கமற்ற இரவுகள் அந்த இருவரது விழிகளையும் சிவக்கச் செய்திருந்தன. களைப்பையும் சோர்வையும் விரட்டுவதற்காக அவ்விருவருமே குளித்து முழுகி உடை மாற்றி வந்திருந்தனர் என்றாலும் அவர்களை அவர்களது விழிகளிலிருந்து உணர்ந்து கொண்டார் பாண்டியர்.

விழுப்பரையரின் குரல் மெல்லத்தான் ஒலித்தது; ஆனால் சொற்களில் வலிமையின் துடிப்பிருந்தது.

''கருவூர்ப் போருக்குக் காரணம் கொங்கு நாட்டுச் சிற்றரசர்கள் உரிய காலத்தில் இறை செலுத்த வில்லையென்றும், சோழப் பேரரசை இழிவுபடுத்தினார் என்றும் சோழர்கள் பக்கம் பேசப்படுகிறது. ஆனால் அந்தப் பேச்சு மெய்யென்று எனக்குத் தோன்றவில்லை.''



பேரரசரின் விழிகள் காரானை விழுப் பரையரின் முகத்தை உற்று நோக்கின.

''கொங்கு நாட்டில் ஓடும் ஆன் பொருனையில் வெள்ளம் வந்ததால் கொங்கு நாட்டுப் பயிர்களுக்கு இந்த ஆண்டு பெருத்த சேதம். காவேரியில் அது கலந்தோடுவதால், சோழ நாட்டுக்குச் செழிப்பையும் கொங்கு நாட்டுக்குச் சேதத்தையும் விளைவித்திருக்கிறது. கொங்கு நாட்டின் குடிகளை வருத்தி இறை பெறும் நிலையில் இல்லை சிற்றரசர். ஆகவே சோழப் பேரரசுக்கு ஓலை அனுப்பியிருக்கிறார். தாமதத்தைப் பொறுத்தருளும்படியும் பின்னர் சேர்த்தனுப்புவதாகவும் வேண்டுதல் விடுத்திருக்கிறார்.''

குலசேகரப் பாண்டியரின் நெற்றி சுருங்கியது. குலோத்துங்க சோழர் மாவீரர், விரிந்த மனப்போக்குடையவர். சிற்றரசின் துன்பம் கண்ட பின்னரும் சீறி எழும் வழக்கம் அவரிடம் இருந்ததில்லை. ''வேறு என்ன காரணம் இந்தப் போருக்கு?'' என்று வினவினார் பாண்டியர்.

''என்னுடைய சிற்றறிவுக்கு எட்டிய வரையில் வேறு என்னவோ காரணங்கள் புலப்படுகின்றன'' என்று தமது ஆழ்ந்த அறிவின் செருக்கறுத்துப் பணிவோடு தொடங்கினார் விழுப்பரையர்.

சுந்தர பாண்டியனுடைய முகம் சிவந்தது. சினந்து எதையோ குறுக்கிட்டுக் கூற வந்தவன், விழுப்பரையரின் பணிவு கண்டு அமைதியுற்றான். தலைவனைத் தெய்வமென்று போற்றிய காலம் அது; ஆனால் தெய்வமே பிழைத்தாலும், 'பிழைத்தாய் நீ!' என்று பணிவோடு சுட்டிக் காட்டத் தயங்காத காலம்.

விழுப்பரையர் கூறலானார்:

''வடக்கே கன்னடமும் களிதெலுங்கும் பேசப்படுகிற நாடுகளிலிருந்து தெற்கே குமரி வரையில் பரந்து விரிந்து கிடக்கிற சோழ சாம்ராஜ்யத்துக்கு இப்போது தன்னுடைய வலிமையிலேயே நம்பிக்கை குறையத் தொடங்கியிருக்கிறது. தனது வலிமையைத் தானே நம்புவதற்காகத் தொடங்கப்பட்ட போர் இது.''

''குலோத்துங்கச் சோழரின் ஆட்சியிலா வலிமைக் குறைவு?'' எனக் குறுக்கிட்டார் பாண்டியர். பாண்டியர் புதிதாக விழுப்பரையரிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறவரைப் போன்றுதான் கேட்டாரெனினும், ஏற்கனவே தமது ஒற்றர்கள் வாயிலாக அறிந்ததை உறுதிப்படுத்திக் கொள்ளத்தான் கேட்டார். விழுப்பரையரும் இதை அறிந்தவர்தாம்!

''குலோத்துங்கச் சோழர் தமது காலத்தில் தம்மால் செய்யமுடிந்ததனைத்தையும் செய்துவிட்டார். ஆனால் அவரது புதல்வர் இராஜ இராஜனைப் பற்றிய கவலை அவருக்கு ஏற்படத் தொடங்கிவிட்டது. சோழ நாட்டு இளவரசருக்குச் சக்கரவர்த்திகளின் அருமை தெரியவில்லை. அவருடைய புதல்வராகப் பிறந்தும், அவரிடமே வளர்ந்தும், அவருடைய குண இயல்புகள் பலவற்றின் அருமைகளை உணரத் தவறி விட்டார். மனத்தில் ஒற்றுமையில்லை; குணத்தில் கோழை; இன்ப வாழ்வை விழையும் இயல்பினர் என்றும் தெரிகிறது.''

குலசேகரப் பாண்டியரின் உள்ளம் பெருமிதத்தால் பொங்கியது. சாம்ராஜ்யம் என்ற மாபெரும் மரக் கலத்தின் ஆற்றலை, அதை வழி நடத்திச் செல்லும் தலைவன் ஒருவனுடைய தன்



ஒரு கிளாஸ்

கிஸான்

ஸ்க்வாஷ் அருந்தி
இளைப்பாறுங்கள்

அது சிறந்ததொரு
பழ ரசமாகும்

JWT/KP/2604



சுவை மிக்கது; அலுப்பு நீக்குவது; ஆரோக்கியமானது. தானே கனிந்த கனிகளிலிருந்து தயாரானது. வைட்டமின் சத்து நிறைந்தது.
கிஸான் ஸ்க்வாஷ் ஆரஞ்சு, லெமன், மற்றும் ஆறு ரகங்களில் கிடைக்கிறது.

மற்ற எந்தத்
தயாரிப்பையும் விட
கிஸான் ஸ்க்வாஷ்கள்தான்
இந்தியாவில் அதிகமாக
விற்பனையாகின்றன

கிஸான் ப்ராடக்ட்ஸ் லிமிடெட், பெங்களூர்

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இக்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-2 சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

Silvikrin

சில்விக்ரீன்—கேச ஆரோக்கியத்துக்கான வழி



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது



SP/1/P/7/64

மையைக் கொண்டு ஆராயும் கூர்மதி ஒரு சிலருக்கே உண்டு.

சுந்தர பாண்டியன் கூறினான்: ''மிகப் பெரிய மலைச் சிகரத்தினருகில் வாழக் கொடுத்து வைத்த சிலருக்கு அதன் வலிமையும் உயரமும் தெரிவதில்லை. அப்படித்தான் இராஜாதிராஜன் தனது தந்தையின் ஆற்றலைப் போற்ற மறந்து தன்னையே தாழ்த்தி வருகிறான்.''

பாண்டியர் ஒரு கணம் தம் இரு விழிகளையும் மூடித் திறந்தார். எதிர்கால நம்பிக்கையின் பேரொளிச் சுடர்களாகத் திகழும் இருவரும் தம் அருகிலிருந்தது அவருக்கு எல்லையற்ற மன நிறைவைக் கொடுத்தது. தம்மை ஒரு பெரிய மலை போன்றவர் என்று மதித்து அதைச் சுந்தரபாண்டியன் குறிப்பால் உணர்த்தவும் செய்ததை விட வேறு எதுவுமே அவருக்குப் பெரும் பேறாகத் தோன்றவில்லை.

''அப்படியானால் அந்தக் கோழைப் புதல்வனுக்கு வீரமூட்டுவதற்கென்றே சக்கரவர்த்திகள் போர் தொடுத்திருக்கிறார் என்கிறீர்களா?'' என்று, நேரடியாகத் தெளிவு கோரிக் கேட்டார் குலசேகரப் பாண்டியர்.

''அதுவே மூலகாரணம். மேலும் சோழ நாட்டுப் பெரும் படைகள் இப்போது சோம்பிக் கிடக்கின்றன. இளவரசரும் வலிமையற்றவர் என்ற நிலை ஏற்பட்டால், பிறகு படை பெருக்கியும் பயனில்லை யல்லவா? இளவரசருக்கும் படையினருக்கும் விழிப்பூட்டவே இது நடைபெற்றிருக்கிறது.''

முக்கியமான செய்தியை இன்னும் கூறாமல் தாமதம் செய்கிறாரே என்று துடித்தான் சுந்தர பாண்டியன்.

''கருவூர்ப் போர் எப்படி இருந்தது?'' என்று கேட்டார் பாண்டியர்.

''புலிக் கூட்டமும் யானைக் கூட்டமும் எருதுகளின் மீதும் மான்களின் மீதும் பாய்ந்து அழிப்பதுபோல் இருந்தது. செருக்கெடுத்த வெறிப் போர்!'' என்று குறுக்கிட்ட சுந்தர பாண்டியன், ''போர் இத்துடன் நிற்காது போல் தோன்றுகிறது: இதை ஒரு வெற்றியாகவும் இந்த வெற்றிச் செருக்கை விழாக்கள் நடத்தி மிகைப் படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் திட்டமிட்டிருக்கிறார். அரசே! தூதுவர்கள் நமக்குக் கருவூரிலிருந்து ஓலை கொண்டு வருகிறார்கள்; இன்றையப் பொழுதுக்குள் இங்கு வந்து விடுவார்கள்'' என்று கொதிப்போடு கூறினான்.

பாண்டியர் அதைக் கேட்டு அதிர்ச்சியுறவில்லை.

''குலோத்துங்கச் சோழச் சக்கரவர்த்திகளுக்குப் பாண்டியப் பதியின் அரண்மனைக்கு வந்து, நமது 'மழவராயன்' வீர சிங்காதனத்தில் அமர்ந்து வைகைத் தண்ணீரால் வீராபிஷேகம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் எழுந்திருக்கிறது. வீராபிஷேகம் செய்து கொள்ளும் போதே 'சோழ பாண்டியன்' என்ற பட்டத்தையும் 'திரிபுவன வீரதேவன்' என்ற சிறப்பையும் நாம் அவருக்குச் சூட்ட வேண்டும். இந்தப் பாண்டிய நாட்டின் பெயரையும் மாற்றிச் 'சோழ பாண்டிய மண்டலம்' என்று வைத்து விட வேண்டும். அவருடைய இந்த ஆணைகளை நாமே விரும்பிச் செய்வது போல் மேற்கொண்டுவிட வேண்டும். இவ்வளவுதானே?''

சுந்தர பாண்டியனின் விழிகளும் விழுப்பரையரின் விழிகளும் சந்தித்துக் கொண்டன. செய்திகள் அனைத்தையும் அறிந்திருந்தும் அமைதி குலையாமல் ஆத்திரம் கொள்ளாமல் இவரால் எப்படி இருக்க முடிகிறது என்று நினைத்தான் சுந்தர பாண்டியன்.

பாண்டியர் அடுத்தாற் போல் கூறிய சொற்கள் அவனுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுத்தன.

''ஏன், சக்கரவர்த்திகளுக்கோ வயது முதிர்ந்து விட்டது. தம்முடைய குமாரனுக்குச் சோழப் பேரரசின் ஆதிக்கத்தைச் சுட்டிக் காட்டுவதற்கு அவர் இவ்வாறெல்லாம் செய்ய முனைந்திருக்கிறார். இதில் என்ன தவறு? அவரது விருப்பத்துக்கு இணங்கி அவ்வாறே செய்து விடலாமே!''

இப்போது சுந்தரபாண்டியனின் தலை மட்டிலுமல்ல, விழுப்பரையரின் தலையுமே சேர்ந்து சுழன்றன. பாண்டியரை அவர் கோழை என்று கருதச் சித்தமாக இல்லை. ஆனால், இப்படியும் ஓர் ஆலோசனை அவரிடமிருந்து பிறக்குமென்று அவர் எதிர்பார்க்கவில்லை.

''அரசே!'' என்று கண்களில் நீர் மல்க எழுந்தார் விழுப்பரையர். சுந்தர பாண்டியன் சின்னஞ் சிறு குழந்தை போல் தேம்பித் தேம்பி அழுதுவிடுவான் போலிருந்தது. தாவிச் சென்று பாண்டியரின் கால்கள் இரண்டையும் பற்றிக் கொண்டு, ''அரசே! தங்களது உடைவாளை என் நெஞ்சில் பாய்ச்சிக் கொன்றுவிட்டுச் சோழச் சக்கரவர்த்திகளுக்கு அந்த முடிவினைக் கூறுங்கள்'' என்று கதறினான்.

(தொடரும்)



ஷேக்ஸ்பியர்-வாழ்வும் காலமும்

ஷேக்ஸ்பியர் — இன்று அகில உலகத்து மக்களாலும் போற்றிப் புகழப்படும் ஷேக்ஸ்பியர் — அன்று, அயலானுக்குச் சொந்தமான காட்டில் திருட்டுத்தனமாக மான் வேட்டையாடிய போது கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டார். ஸ்டிராட்போர்டு அருகே சர் தாமஸ் லூசி என்பவருக்கு உரிமையான சார்லகோட் என்ற வனத்தில் அழகிய மான்கள் உண்டு. மான் இறைச்சி மிக்க உயர்ந்த உணவு. ஷேக்ஸ்பியருக்கு மான் வேட்டையில் விருப்பம் — இறைச்சியிலும் தான்! அகப்பட்டுக் கொண்ட ஷேக்ஸ்பியர் மீது வழக்குத் தொடரப்பட்டது. ஆனால் ஷேக்ஸ்பியர் தம் மனைவியையும் மூன்று குழந்தைகளையும் விட்டு விட்டு ஸ்டிராட்போர்டிலிருந்து ஓட்டமெடுத்தார். இது 1585ல். திருமாகவே இளைஞர் ஷேக்ஸ்பியர் அன்று மறைந்தே போனார். அப்போது அவருக்கு இருபத்தியொரு வயது. எங்கே போனார்? என்ன செய்தார்? நாடோடி நடிகர் கூட்டத்தோடு சேர்ந்து நாட்களைக் கழித்திருக்கலாம். ஒரு வேளை லண்டனுக்குச் சென்று அங்கு நடிகராகி உயர்ந்திருக்கலாம். திருட்டுக் குற்ற வழக்குக்குப் பயந்து கொண்டு கிராமத்திலிருந்து ஓடிய ஷேக்ஸ்பியரைப் பற்றி ஏழு வருஷங்களுக்கு எவ்விதமான தகவலும் கிடைக்க வில்லை. இந்த ஏழு வருஷங்களையும் அவரது அக்ஞாதவாசமாகத் தான் இலக்கியகர்த்தாக்கள் கணக்கிடுகிறார்கள்.

ஸ்டிராட்போர்டு கிராமத்தின் மாதா கோவிலிலுள்ள ஜனன மரணக் குறிப்புப் புத்தகத்தின் ஒரு பக்கத்தில் ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டவர்களின் பட்டியலில், "ஜான் ஷேக்ஸ்பியரின் மகனான வில்லியத்திற்கு 1564ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ந் தேதி ஞான ஸ்நானம் செய்விக்கப்பட்டது" என்று எழுதப்பட்ட ஒரு வரி உள்ளது. பொதுவாகக் குழந்தை பிறந்த மூன்றாவது நாள்தான், இந்தச் சடங்கு நிகழ்த்தப்படும். ஆகவே வில்லியம் ஷேக்ஸ்பியர் பிறந்தது ஏப்ரல் 23ந் தேதி என்றாகிறது.

வில்லியத்தின் தகப்பனார் கையுறைகள் செய்யும் தொழிலாளி, விவசாயியும்கூட; விவசாயப் பொருள்களும் செய்து வந்தார். குழந்தை ஷேக்ஸ்பியர் மாடு கறந்தார், ஆடு மேய்த்தார், தயிர் கடைந்து வெண்ணெய் எடுத்தார். தகப்பனாருக்கு உதவியாகக் கையுறை செய்வதற்குத் தோலையும் பதப்படுத்திக் கொடுத்தார். கம்பளிக் கடையிலும் வேலை செய்தார். படிக்க வேண்டும் என்ற பசியும், மேதையாவதற்கான அறிகுறிகளும் உடைய ஒரு பையன், வறுமை காரணமாகப் பள்ளியிலிருந்து நிறுத்தப்பட்டான்.

லார்டு சேம்பர்லின் நாடகக் கம்பெனி பிரசித்திபெற்றது. சிறந்த நடிகர்களைக் கொண்டது. அந்தக் காலத்தில் நடிகர்களை மூன்று வகையாகப் பிரித்திருந்தார்கள். திறமையும் அனுபவமும் பெற்றவர்களை 'ஷேரர்ஸ்'-பங்குதாரர்கள் என்று அழைப்பார்கள். லாபத்தில் ஒரு குறிப்பிட்ட பங்கு இவர்கள் பெற்றார்கள். அடுத்தபடி சம்பளத்துக்கு நடித்த நடிகர்கள். வாரத்துக்கு ஒரு முறை இவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்பட்டது. இவர்களை 'ஹயர்டு மென்' என்று அழைத்தார்கள். மூன்றாவதாக 'பாய்ஸ்' என்ற இளைஞர்கள். குரல் உடையாத பையன்களே இந்தப் பிரிவில் இடம் பெறுவார்கள். அந்தக் காலத்தில் பெண்கள் மேடை மீது தோன்றுவது சட்ட விரோதம். ஆகவே பெண்களின் பாத்திரங்களை இந்தப் பையன்கள் ஏற்று நடிப்பது வழக்கம். இதற்கு மிகச் சிறந்த பயிற்சியும் திறமையும் தேவை. ஷேக்ஸ்பியர் முதலில் இந்தப் 'பாய்ஸ்' என்ற வகையில் சேர்ந்து பிறகு தமது நடிப்புத் திறனால் சம்பளம் வாங்கும் இரண்டாவது பிரிவில் புகழ் பெற்றிருக்கிறார்.

இங்கிலாந்து 1593ம் ஆண்டு பிளேக் என்ற கொள்ளை நோய்க்கொடுமைக்கு உள்ளாயிற்று. நாடக மேடைகள் மூடப்பட்டன. ஜனத் தொகையில் பத்து சதவிகிதம் பேர்கள் கொள்ளை நோயால் மாண்டார்கள். மக்கள் வெளியே வரவே பயந்தார்கள். வேலை இழந்த ஷேக்ஸ்பியருக்கு இந்தப் பிளேக் நோய் ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. நண்பர்கள்கூட அவரைக் காண வருவதில்லை. ஆகவே எழுத்தில் ஊக்கம் காட்டலானார். இந்தக் காலத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு ஏராளமான நாடகங்களை எழுதிக் குவித்திருக்கிறார் ஷேக்ஸ்பியர்.

புதிய நாடகம் எழுதியதற்குரிய பணம், நடிப்புக்காக நாடகக் கம்பெனி தரும் சம்பளம், இவைகளோடு பணக்கார ரசிகர் யாராவது அவ்வப்போது இவரது நடிப்பைப் பாராட்டி வழங்கும் பரிசு எல்லாமாக ஷேக்ஸ்பியரைப் பெரும் பணக்காரராக்கியது. இது மட்டுமா? அரசாங்கத்திலிருந்து அடிக்கடி நாடகக் கம்பெனிகளுக்கு அழைப்புக்கள் வரும், நாடகங்களை அரண்மனை அரங்குகளில் வந்து நடித்துக் காட்டும்படி. இம்மாதிரியான அழைப்புகள் மற்றக் கம்பெனிகளைவிட லார்டு சேம்பர்லின் கம்பெனி நடிகர்களுக்கே அதிகமாகக் கிடைத்தன. இம்மாதிரியான விசேஷ நாடகங்களின் மூலம் நடிகர்களுக்கு ஒரு

நாடகத்துக்குப் பத்து பவுன் விசேஷ வெகுமதியாகக் கிடைக்கும்.


இப்படி ஷேக்ஸ்பியரிடம் பணம் பெருகுவது வருமான வரிக்காரர்களின் கவனத்தைக் கவர்ந்தது. அப்போது ஷேக்ஸ்பியர் பிஷப்ஸ் கேட் என்ற இடத்தில் வசித்து வந்தார். வரி வசூலிப்பவர்கள் அங்கு சென்றபோது இவர்களுக்கு முன்னால் ஷேக்ஸ்பியர் அங்கிருந்து கம்பி நீட்டி விட்டார்! எங்கே போனார்? நதியைக் கடந்து ஸவுத் வார்க் என்ற இடத்துக்குப் போய் விட்டார். மூன்றுண்டுகளுக்குப் பிறகே (1597) அவரது இருப்பிடத்தை அவர்களால் அறிய முடிந்தது.

இதற்கு ஒரு வருஷம் கழித்து ஸஸெக்ஸ் மாகாண வரி வசூலிப்போர் ஷேக்ஸ்பியரை நெருக்கிப் பிடித்து வரி வசூலிக்க முயன்றார்கள். ஆனால் முழு வரியையும் அவர்களால் வசூலிக்க முடியவில்லை. நல்ல வருவாயுடன் இருந்த ஷேக்ஸ்பியர் இப்படி வரி கொடாமல் டிமிக்கி கொடுப்பானேன்?

ஷேக்ஸ்பியர் காலத்தில் நாடக மன்றங்களை நடிகர்கள் வாடகைக்கு எடுத்துத்தான் நடிக்க வேண்டியிருந்தது. நாடகக் கொட்டகைகளோ பெரிய பிரபுக்களின் சொத்தாக இருந்தன. ஷேக்ஸ்பியரின் உள்ளத்தில் ஒரு புரட்சிகரமான எண்ணம் தோன்றியது. 'தமது கம்பெனிக்குச் சொந்தமாக ஒரு நாடக மன்றம் இருந்தால்?' — என்ணத்தை உடனே செயலாக்கத் துணிந்து விட்டார் ஷேக்ஸ்பியர். வரிப் பணம் கொடுக்கச் சக்தியற்றவர்களின் ஜாபிதாவில் அவர் பெயர் இடம் பெற்றது. அதே சமயம் தம்மிடமிருந்த பணத்தையெல்லாம் 'குளோப் தியேட்டர்' என்ற நாடக மன்றத்தை உருவாக்குவதற்குச் செலவிட்டுக் கொண்டிருந்தார். 'ஸவுத் வார்க்' என்னுமிடத்தில் கொட்டகை கட்டுவதற்கான இடம் வாங்கப் பட்டது. அதே சமயத்தில் 'தி தியேட்டர்' என்ற வழக்கமாக நாடகமாடும் கொட்டகையையும் குத்தகைக்கு எடுத்தனர் ஷேக்ஸ்பியரும் அவரது சகாக்களும்.

தங்களுக்கென ஒரு பெரிய புதிய கொட்டகை கட்டும்போது பழைய கொட்டகையைக் குத்தகைக்கு எடுப்பானேன்? அதற்குக் காரணமிருந்தது. 'தியேட்டர்' கொட்டகையின் மரங்களைப் புதிய குளோப் தியேட்டர் கட்டுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளுவதே இந்தக் குத்தகையின் நோக்கம். 'தியேட்டர்' உரிமையாளர்கள் தங்களது கொட்டகையை உபயோகத்துக்குத்தான் குத்தகைக்கு விட்டோமே தவிர அதிலுள்ள சாமான்களை அப்புறப்படுத்திக் கொண்டு போவதற்கல்ல என்று வாதித்தார்கள்.

கத்தி, குத்து வாள், அரிவாள், கோடரி ஆகிய ஆயுதங்களுடன் ஷேக்ஸ்பியரின் சகாக்கள் 'தியேட்டரை'ப் படையெடுத்தார்கள். கடுமையான போராட்டத்துக்குப் பிறகு ஷேக்ஸ்பியரின் ஆட்கள் வெற்றி வீரர்களாகத் 'தியேட்டர்' கொட்டகையின் மரங்களைப் பலவந்தமாகக் குளோப் இடத்துக்குக் கொண்டு வந்து குவித்தார்கள். ஷேக்ஸ்பியரின் காலத்திலேயே இப்படி அடியாட்களைக் கொண்டு காரியத்தைச் சாதிக்கும் பழக்கம் இருந்திருக்கிறது.





அமைதியான நன்னடத்தைக்காகப் பெருந் தொகைக்குப் பாண்டு எழுதி ஜாமீனுகக் கொடுக்க வேண்டும் என்றும் இல்லாவிடில் அரஸ்ட் வாரண்ட் சமர்ப்பிக்கப்படும் என்றும் இந்த நாடகாசிரியருக்கு எச்சரிக்கை செய்யப்பட்டது!

ஷேக்ஸ்பியரின் குளோப் தியேட்டர் எத்தகையது? அந்தக் காலத்தில் லண்டனில் உள்ள மற்ற எல்லாத் தியேட்டர்களையும் விடப் பெரியது. ஏன், இந்தக் காலத்துத் தியேட்டர்களையும் விடப் பெரியதுதான்! மூவாயிரம் ரசிகர்கள் ஒரே சமயத்தில் உட்கார்ந்து பார்க்கக் கூடிய அத்தனை விசாலமானது. பல வசதிகளோடு மூன்று அடுக்குகளைக் கொண்டிருந்தது. பகல் இரண்டு மணிக்கு நாடகம் ஆரம்பமாவது வழக்கம். அரசாங்கத்தின் விசேஷ அழைப்பின் பேரில் நடத்தப்படும் நாடகங்கள்தான் மாலை வேளைகளில் மெழுகுவர்த்திகளின் வெளிச்சத்தில் நடைபெறும். ஆனால் இத்தகைய நாடகங்கள் தியேட்டர்களில் நடைபெறுது. அரண்மனையின் அரங்குகளிலோ அல்லது பெரிய மாளிகையிலோதான் நடைபெறும். இத்தகைய விசேஷ நாடகங்களில் கன்னி ராணி எலிஸபெத் ஈடுபாடு கொண்டதைப் பற்றி அநேக கதைகள் வழங்கப்படுகின்றன. ஒரு சமயம் எலிஸபெத் வேண்டுமென்றே பால்கனியிலிருந்து தனது கையுறையை மேடையில் நழுவ விட்டாளாம். ஷேக்ஸ்பியர் உணர்ச்சிகரமான ஒரு காட்சியில் நடித்துக் கொண்டிருந்த வேளை அது. கையுறையைக் கண்டதும் அவர் தமது பாத்திரத்தை மறந்து அதை எடுத்துத் தன்னிடம் தருவார் என்று எதிர்பார்த்தாள் ராணி. ஆனால் ஷேக்ஸ்பியரோ இதனால் கொஞ்சமும் சலனமடைய வில்லை. மேடையில் விழுந்துள்ள கையுறையைக் குனிந்து எடுப்பதற்கு ஏற்றாற் போலத் தாம் பேசிக் கொண்டிருக்கும் வசனத்தில் புதிய வரிகளைச் சேர்த்துக் கொண்டு, அதுவும் நாடகத்தின் ஒரு வசனம் தான் என்று பார்ப்போர் எண்ணும்படி, கையுறையை எடுத்து ராணியிடம் நீட்டிக் கொண்டே வசனத்தையும் பேசியபடி தொடர்ந்து நடித்துக் கொண்டிருந்தார்; திட்டமிட்டுச் செய்த ஒரு கட்டத்தைப் போல; ஒத்திகைக்கு உட்பட்ட ஒரு காட்சியைப் போல!

எலிஸபெத்துக்குப் பின் பட்டத்துக்கு வந்த முதலாவது ஜேம்ஸ் மன்னர், ஷேக்ஸ்பியரின் நாடகக் குழுவுக்கு 'மன்னரின் நாடகக் குழு' என்ற கௌரவத்தை அளித்தார்.

1608ல் 'பிளாக் பிரியார் தியேட்டர்' என்ற இன்னொரு நாடகக் கொட்டகையை வாங்கிற்று ஷேக்ஸ்பியர் நாடகக் குழு. இது முற்றிலும் மூடப்பட்ட ஒரு கட்டடமாகும். குளோப் தியேட்டரில் பெரும் பகுதி திறந்த வெளிதான். இந்தப் புதிய கொட்டகையில் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் நாடகங்களை நடத்தும் வசதி இருந்தது.

1613ல் குளோப் தியேட்டர் தீயால் நாசமடைந்தது. ஆனாலுமென்ன? பியூரிட்டன்கள் 1642ல் எல்லா நாடகக் கொட்டகைகளையும் மூடும் வரை முப்பது வருஷங்கள் 'கிங்ஸ் மென்' என்று கௌரவிக்கப்பட்ட ஷேக்ஸ்பியரின் நாடகக் குழு பிரபலமாக விளங்கி வந்தது.

ஷேக்ஸ்பியரின் காலத்திலேயே அவருடைய நாடகங்களெல்லாம் புத்தகமாக வெளி வந்தன. ஆனால் அவைகளை அவர் வெளியிட வில்லை. சிறிய பாத்திரங்களை ஏற்று நடித்தவர்கள் நாடகக் கொட்டகையில் குற்றேவல் புரிபவர்கள் ஆகிய யாரோ சிலர், ஷேக்ஸ்பியர் தமது நாடகங்களை அமைக்க ஆரம்பத்தில் எழுதிய குறிப்புக்களையோ ஷேக்ஸ்பியர் மறுமுறை திருத்தி எழுதியபின் தூக்கி எறிந்த முதல் கையெழுத்துப் பிரதிகளையோ திருடிக் கொண்டு வந்து அப்போதுதான் தோன்றியுள்ள அச்சுத் தொழில் அதிபர்களிடம் விற்று அவைகளைப் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். இந்த முதல் வெளியீடுகளில் ஏராளமான தவறுகளும் குழப்பங்களும் காணப்படுகின்றன.

கிங்ஸ் கம்பெனியின் முக்கியஸ்தர்களான இருவர் ஷேக்ஸ்பியர் இறந்த பிறகு அவருடைய நாடகங்களை யெல்லாம் சேகரித்துப் புத்தகமாக வெளியிட்டார்கள். இவர்கள் இப்படி ஒரு காரியம் செய்திருக்காவிடில் இன்றைக்கு உலகம் ஷேக்ஸ்பியரின் அற்புதமான படைப்புக்களைக் கண்டிருக்கவே முடியாது.

இப்போது இந்த முதல் பதிப்பில் 230 பிரதிகளே உலகில் உள்ளன. இன்னும் ஓரிரு பிரதிகள் எங்காவது இருக்கலாம். அது கிடைக்குமாயின் அதன் விலை 50,000 பவுன்கள் வரை போகும். நியூயார்க்கிலே ஒரு பழைய பிரதி உள்ளது. அதன் விலை 2,50,000 டாலர்கள்! அந்தக் காலத்தில் ஷேக்ஸ்பியர் தமது 'ஹாம்லட்', 'மாக்பெத்', 'கிங் லீர்' போன்ற பிரபலமான நாடகங்களுக்கு நூறு டாலர்கள்கூட முழுசாக வாங்கியிருக்க மாட்டார்!

39,000 வரிகள் கொண்ட ஹாம்லெட் நாடகத்தைக் குளோப் தியேட்டரில் மூன்று மணியில் நடித்துக் காட்டினார் ஷேக்ஸ்பியர். தற்காலத்தில் குறைக்கப்படாத அந்த நாடகத்தை நான்கு மணிக்குக் குறைந்து நடிக்க முடியாது. காட்சிகளின் இடம் காலம் இவைகளைப் பற்றிய குறிப்புக்களை யெல்லாம் ஷேக்ஸ்பியர் தமது நாடகங்களில் எழுதவே இல்லை. நீங்கள் பார்க்கும் இன்றைய ஷேக்ஸ்பியர் நாடகங்களில் 'வெனிஸ் நகரில் ஒரு வீதி' என்றோ, 'கானகத்தில் ஒரு நிழல் படிந்த பகுதி' என்றோ குறிப்புக்கள் இருக்குமானால் அவை யெல்லாம் பிற்காலத்திய ஆசிரியர்கள் புகுத்திய குறிப்புக்கள்தான். அங்கம், காட்சி, ஆகியவைகளெல்லாம் கூடப் பிற்காலத்தில் புகுத்தப்பட்டவைதான். படிப்பதற்காக அன்றி நடிப்பதற்காகவே எழுதிய ஷேக்ஸ்பியர் தமது நாடகத்தில் இடம் காலம், காட்சி ஆகிய எதற்குமே முக்கியத்துவம் கொடுத்ததில்லை. நடிப்பு, பாவம் இவைகளுக்குத்தான் அவர் முக்கியத்துவம் கொடுத்திருந்தார்.

ஷேக்ஸ்பியர் நாடகங்களை மட்டும் எழுதவில்லை. சில அற்புதமான கவிதைகளையும் ஆக்கியிருக்கிறார். அந்தப் பாடல்களில் சிலவற்

றில் குறிப்பிட்டுள்ள கருப்புப் பெண் (டார்க் லேடி) யாராக இருக்கும்?

உணர்ச்சிகளுக்கு உருவகம் கொடுக்கும் ஒப்பற்ற நாடகாசிரியரான ஷேக்ஸ்பியரை ஆட்டி வைத்த இந்த அழகி யார்? ஒரு சிலர் ஷேக்ஸ்பியரால் புறக்கணிக்கப்பட்ட ஸ்டிராட் போர்டைச் சேர்ந்த ஆன்வாட்லே என்ற பெண்தான் இவள் என்கிறார்கள்.

வேறு சிலர், ராணியின் தோழியாகிய மேரி பிட்டன் என்பவளே இந்தக் கருப்புப் பெண் என்கிறார்கள். நாடகம் பார்க்க ராணியுடன் அடிக்கடி விஜயம் செய்த மேரி பிட்டனிடம் ஷேக்ஸ்பியர் தமது உள்ளத்தைப் பறி கொடுத்திருக்கலாம்.

இவ்விரண்டு பேர்களில் 'டார்க் லேடி ஆப் தி ஸானெட்ஸ்' யார் என்பது இன்னும் விடுவிக்கப்படாத மர்மமாகவே இருக்கிறது.

ஆனால் ஆன்வாட்லே ஷேக்ஸ்பியரின் வாழ்க்கையில் எத்தகைய புரட்சியை உண்டாக்கியிருக்கிறாள் என்பது ரசமான ஒரு விஷயம்.

வாலிபர் ஷேக்ஸ்பியர் ஸ்டிராட்போர்டில் வாழ்ந்த போது ஆன்வாட்லே என்ற அழகியிடம் மையல் கொண்டார். அவளைத் தம் இதயக் கோயிலிலே வைத்து வழிபட்டார். ஆனால் நிலவு வீசும் இரவுகளிலே இன்பமாகச் சல்லாபமாடி மகிழ ஆன்ஹாத்தவேதான் கிடைத்தாள் ஷேக்ஸ்பியருக்கு.

இதை விதியின் விளையாடல் என்றுதான் சொல்ல வேண்டும். தம் மனத்துக்கிசைந்த மங்கை ஆன்வாட்லேயை மணந்து கொள்ளுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார் ஷேக்ஸ்பியர். தம்முடன் காதல் மொழிகளைப் பேசிக் கருத்தை மயக்கிய காளை, வேறொருத்தியின் கணவனாகப் போகிறான் என்பதை அறிந்த ஹாத்தவே அடியுண்ட பெண் புலியாகி வெட்கத்தை விட்டு அக்கம் பக்கத்தாரிடமெல்லாம் போய் விம்மி விம்மி அழுதாள். தான் வஞ்சிக்கப்பட்டதாகவே ஓலமிட்டாள்.

இந்த அநீதியை நம் கிராமத்திலே நாம் அனுமதிக்கக் கூடாது என்று ஊரே எழுந்தது. நகராட்சி மண்டபத்திலே வந்து கூடியது. துப்பாக்கி முனையில் ஆன்ஹாத்தவேக்கு ஷேக்ஸ்பியரை மணம் செய்து வைத்தது. வில்லியம் என்ன செய்வார்? இவரைவிட அவள் எட்டு வயது பெரியவள். இவர்கள் மணவாழ்வின் ஆரம்பமே அதிர்ச்சி நிறைந்ததாக அமைந்து விட்டது.

இந்தத் திருமணம் நடந்தது இவரது பதினெட்டாவது வயதில். ஒரு பெண்ணுக்கும் இரட்டைக் குழந்தைகளான இரண்டு பிள்ளைகளுக்கும் தாயான பிறகு ஆன்ஹாத்தவே ஷேக்ஸ்பியரின் மனைவியாகப் பெயரளவில் தனது எஞ்சிய நாட்களைக் கழித்து வந்தாள். பலவந்தமாகத் தன்னை மணந்து கொண்ட ஹாத்தவேயிடம் அவருக்கு எப்படி ஈடுபாடு இருக்க முடியும்? ஆன்வாட்லேயே அவரது நெஞ்சத்தில் நீங்காத இடம் பெற்றிருந்தாள்.

ஐம்பத்திரண்டாவது வயதிலே ஷேக்ஸ்பியர் இறக்கும் போது தமது அறுபது வயது மனைவியான ஹாத்தவேக்கு உயிலில் ஒன்றுமே எழுதி வைக்கவில்லை!

உலகப் பிரசித்தி பெற்றவை வில்லியம் ஷேக்ஸ்பியரின் சிருஷ்டிகள். ஆனால் இந்த மகத்தான படைப்புக்களை ஷேக்ஸ்பியர் எழுதவில்லை என்ற வாதமும் நெடு நாட்களாக இருந்து வருகிறது.

இலக்கணப் பள்ளியிலே அரைகுறையாகப் படித்தவர், எலிஸபெத் காலத்து நாகரிகத்தை நன்கு அறியாதவர்; அப்படி இருக்கக் காலத்தால் வெல்ல முடியாத கற்பனைகளை அவரால் எப்படி ஆக்கித் தர முடிந்தது? ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் ஐரோப்பிய மக்கள், மன்னர்களின் பழக்க வழக்கங்கள் அப்படியே தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. ஸ்டிராட்போர்டு நாட்டுப்புறத்துச் சிறுவனோ ஐரோப்பாவுக்குப் போனதே இல்லை!

இந்த நாடகங்களை ஷேக்ஸ்பியர் எழுதவில்லையானால், பின் யார் எழுதியது?

சர் பிரான்சிஸ் பேகன் (1561–1626) என்பவர் எழுதியதாக ஒரு சாராரின் வாதம்.

ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் பேகன் எழுதினார் என்பது உண்மையானால் அவர் தமது பெயரை ஏன் அவைகளில் போட்டுக் கொள்ளவில்லை என்ற வினா எழுகிறதல்லவா? இதற்கும் ஷேக்ஸ்பியரின் விரோதிகள் பதில் தருகிறார்கள். அந்த நாளில் கௌரவமுள்ள ஒரு கனவான் நாடகங்கள் எழுதுவது கேவலமாக மதிக்கப்பட்டதாம். ஆகவே அநேகர் தாங்கள் எழுதிய நாடகங்களை வேறொருவரின் பெயரில் தான் அரங்கேற்றுவது வழக்கமாம். அதன்படி பேகன் தம் நாடகங்களை ஷேக்ஸ்பியரிடம் கொடுத்து அரங்கேற்றியிருக்கிறார் என்பது இவர்களின் வாதம். இப்படி எத்தனை எத்தனையோ காரண காரியங்களைக் காட்டி வாதாடுகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

ஷேக்ஸ்பியரின் சிறந்த நாடகங்களைப் பேகன் ஒருவருக்கு மட்டும் இவர்கள் உரிமையாக்கவில்லை. இப்படி ஐம்பத்தி ஏழு பேர்களை இவரது நாடகங்களின் ஆசிரியர்களாக்கி வாதமிடுகிறார்கள். ஆனால் ஒப்பற்ற நாடக இலக்கியங்களை எழுதியது வில்லியம் ஷேக்ஸ்பியர் என்பது மனித சமுதாயத்தின் இதயத்திலே, என்றும் அழியாதபடி எழுதப்பட்டு விட்டது. இனிமேல் என்றுமே அதை மாற்றி அமைக்க முடியாது.

ஸ்டிராட்போர்டு கிராமத்தின் சின்னஞ் சிறிய மாதா கோயிலிலே ஷேக்ஸ்பியரின் உடல் புதைக்கப்பட்டது. மாதா கோவிலில் புதைக்கும் பெருமையையும் கௌரவத்தையும் ஏன் கொடுத்தார்கள்? சிறந்த அறிவாளி என்பதற்காகவா? இல்லை. பிற்காலத்தில் மனித சமுதாயம் இவரைப் போற்றிப் புகழப் போகிறது என்பதை முன்கூட்டியே அறிந்ததினாலா? இல்லை. பின் ஏன் இத்தகைய மதிப்பு இவருக்கு அந்தக் காலத்தில் அளிக்கப்பட்டது?

இன்று ஆங்கில இலக்கிய வானின் துருவ நட்சத்திரமாக விளங்கும் இவரை அன்று மாதா கோவிலுக்குள் புதைத்துப் பெருமைப் படுத்தியதன் காரணம் இவர் — ஷேக்ஸ்பியர் தாம் பிறந்த ஊருக்குக் கடனாகப் பணம் கொடுத்து உதவினார் என்பதினால்தான்!

ஷேக்ஸ்பியர் தாம் பிறந்த கிராமத்துக்குக் கடனாகப் பணம் கொடுக்காதிருந்திருந்தால் இன்று இவருடைய எலும்புகள் அடையாளம் தெரியாத ஏதோ ஒரு கல்லறையில் யாராலும் மதிக்கப்படாமல் மண்ணோடு மண்ணாகிப் போயிருக்கும்!

தொகுப்பு : கௌசிகன்


நாளொரு மேனியாக... எழிலோங்கச்
செய்வது ரெக்ஸோனு
Rexona
GOOD FOR YOUR SKIN
கொஞ்சி உறவாடி நாளொரு மேனியாக உமது
எழிலுக்குப் பொலிவை ஊட்டி வளர்ப்பது ரெக்ஸோனு.
இதில் வியப்பென்ன? சரும எழிலுக்கான
தைலங்களின் கலவையான 'கேடில்' இருக்கிறது
ரெக்ஸோனுவிலே. தவிரவும், கமகமவென்று புதுமணம்
கமழ்வதனுல், மணமோங்கி மலரும் உங்கள் பொலிவு.
கம்மென்று
புதுமணம்
கமழ்கிறது
கேடில் அடங்கிய ரெக்ஸோனு உங்கள் சருமத்திற்கு உகந்தது.
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு
R.X. 16-140 TM

சில வருஷங்களுக்கு முன் ஆங்கிலப் பத்திரிகைகளில் ரூபன்ஸின் அற்புதமான சித்திரம் ஒன்று, ஒரு பழைய ஆங்கில கௌண்டி வீட்டில் தூசுபடிந்து கிடந்து தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்ட செய்தி வெளியாகியிருந்தது. தம்மிடம் இப்படி ஒரு விலை உயர்ந்த பொக்கிஷம் இருக்கிறதா என்று வியந்த அந்த வீட்டின் சொந்தக்காரர் "இந்தப் படம் நெடுநாட்களாக இங்கேதான் இருந்திருக்கிறது. ஆனால் எனக்கு அது இருப்பதுதான் தெரியவில்லை!" என்று ஆச்சரியப்பட்டாராம்.

ஜேசுதாஸ் என்பவரின் வீட்டுக்கு வந்து, அவர் நண்பர் "உங்கள் புதல்வன் கொல்லிலுள்ள 'பானர்' சித்திரம் தயாரிக்கும் சித்திரக் கடையில் அடிக்கடி வந்து நின்று சித்திரக் கலையில் ஆர்வம் காட்டி வருகிறான். இதோ பாருங்கள் அவன் வரைந்த சித்திரம்!" என்று மூலையிலிருந்த ஒரு படத்தைக் கொண்டுவந்து காண்பித்தார்.



நவீன கலை பாணி...

இளைய பாரதத்தினர்

"இது என் பையன் வரைந்ததா? அவனுக்கு இந்தக் கலையில் ஆர்வம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லையே?" என்று ரூபன்ஸின் சித்திரம் கிடைத்த வீட்டின் சொந்தக்காரரைப்போல வியந்தார் ஜேசுதாஸ்.

"உங்கள் பையனுக்குச் சித்திரக் கலையில் ஈடுபாடு நிறைய இருக்கிறது. அவனைச் சித்திரப்பள்ளியில் சேர்த்துவிடலாம்!" என்று யோசனை கூறினார் அவர் நண்பர்.

"எனக்குச் சித்திரக் கலையைப் பற்றி என்ன தெரியும்? நான் நிழலுக்குக் கூடப் பள்ளியில் ஒதுங்கியது கிடையாது. என் மகனாவது நன்றாகப் படித்து முன்னுக்கு வர வேண்டும் என்று ஆசைப் படுகிறேன். இந்தப் படம் கிறுக்கி எப்படி முன்னுக்கு வரமுடியும்?" என்றார் ஜேசுதாஸ்.

கடைசியில் தம் நண்பரின் வற்புறுத்தலுக்கு இணங்கச் சிறுவன் அந்தோணி தாஸைச் சித்திரப் பள்ளியில் சேர்த்தார் ஜேசுதாஸ். பள்ளியில் சேருவதற்கே அந்தோணி தாஸுக்கு ஒரு பரீட்சை வைத்தனர். நுழைவுப் பரீட்சையிலேயே அவனுக்கு இரட்டைப் பிரமோஷன் கிடைத்தது. 'சித்திரமும் கைப்பழக்கம்' என்ற பழமொழிக்கேற்ப முன்னேறிய அவருக்கு இந்திய சர்க்கார் உபகாரச் சம்பளமும் கிடைத்தது.



சித்திரப் பள்ளியில் பயின்று முடித்த அந்தோணிதாஸ் சிறிது காலம் பம்பாய்க்குச் சென்று எவரெஸ்ட்—விளம்பர ஸ்தாபனத்தில் பணியாற்றினார். பிறகு தாம் கற்ற சித்திரப் பள்ளியிலேயே 1958ம் வருஷம் ஆசிரியப் பணி கிடைத்ததும் அவர் மகிழ்ச்சியுடன் அதை ஏற்றுக்கொண்டார்.

மாணவர்களுக்குச் சித்திரக் கலையைப் போதிப்பதோடு அந்தோணிதாஸ் நிறுத்திவிடவில்லை. நவீனக் கலைப் பாணியில் பல

அவர் படைத்த திருவுருவம்....



சித்திரங்களை வரைந்து பாரிஸில் நடந்த அகில உலகச் சித்திரக் கண்காட்சிக்கும் அனுப்பினார். 1961ம் வருஷம் இவருக்குத் தேசியப் பரிசாகச் சர்க்கார் ஆயிரம் ரூபாய் அளித்தது. தென்னிந்திய சித்திரக்காரர்கள் சங்கம் இவருக்குத் தங்கப் பதக்கம் அளித்துக் கௌரவித்தது.


''உங்களுக்குத் திருமணமாகி விட்டதா?''

''ஓ! காதல் திருமணம். சித்திரப் பள்ளியில் பயின்ற மாணவியை மணந்து கொண்டேன். வேலையில் அமர்ந்த பிறகுதான் எங்கள் திருமணம் நடந்தது.''

''கலைக் காதலாக்கும்!'' என்றேம்.

அந்தோணி தாஸ் 'போர்ட்டிரையிட் பெயிண்டிங்'கில் கெட்டிக்காரர். இவர் சமைத்த கரும்பு ஆராய்ச்சி நிபுணர் திரு டி. எஸ். வேங்கடராமனின் திருவுருவம் கோயமுத்தூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் காட்சியளிக்கிறது. பிகாஸோ மாதிரியில் நவீனக் கலைச் சித்திரங்களையும் நிறைய வரைந்து பம்பாயில் தனிநபர் சித்திரக் கண்காட்சியொன்றை விரைவில் நடத்தவிருக்கிறாராம்.

அந்தோணி தாஸின் சித்திரக் கலை வாழ்க்கை போப்பாண்டவரின் பொன்மொழிக்கு உதாரணமாகத் திகழ்கிறது: ''பெருமையும், அபகீர்த்தியும் எந்த நிலையிலிருந்தும் ஏற்படுவதில்லை. உனது பங்கைச் செவ்வனே செய், அதிலே எல்லாப் பெருமையும் அடங்கி யிருக்கும்!'' — குண்டுமணி





சிறந்த தரத்துடன் சிக்கனமும்
குடும்பத்தினர் அனைவருக்கும் கிடைக்கிறது
எத்தனை சிக்கனமானது! எத்தனை புத்துணர்ச்சி தருவது! இந்தப் பெரிய சைஸ் டால்க்கில் உங்களுக்கு பெயர் பெற்ற கால்கேட்டின் உசிய தரம் கிட்டுகிறது.
எத்தனை நறுமண முடையது! எத்தனை நீடித்திருப்பது! ஸ்நானத்திற்கு பின்- வெளியே செல்லுமுன்- தாராளமாக் உங்கள் உடலில் தூவிக்கொண்டு நளினமாய் விளங்குங்கள்.
எத்தனை சேர்த்தியானது! எத்தனை மிருதுவானது! கால்கேட் ஆல்-பர்ப்பஸ் டால்க்கை குழந்தை விரும்புகிறது. இளஞ்சருமத்திற்கு அது மிகவும் ஏற்றது.
COLGATE
All-Purpose
TALCUM POWDER
கால்கேட்
ஆல்-பர்ப்பஸ் டால்க்
(அபூர்வ மலர்களின் நீடித்திருக்கும் நறுமணங்கொண்டது)



பண்டிட்
டி. கோபாலாச்சார்லுவின்
ஜீவாம்ருதம்
ஆரோக்யத்திற்கும் பலத்திற்கும்
ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிட்.
மதராஸ்-17

ஏன் கடன் பணம் செய்து கெடப்படாதே
— புதுமொழி

* * *

சிரிப்புக்கும் சிந்தனைக்கும், நடப்பதற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு போல் இருக்கிறது. காந்திஜி, வேகமாக நடந்து உலவுவது, உலகப் புகழ் பெற்றது. 'ஹரிஜன்' பத்திரிகைக்குக் கட்டுரைகள் எழுதுவதைப்பற்றி அப்போது தான் அவருக்கு எண்ணங்கள் உற்பத்தியாகும் என்று நினைக்கிறேன். வினோபாஜி அங்கிங்கெனாதபடி எங்கும் நடந்து செல்பவர். அவர் பாத யாத்திரையின் போதுதான் அவருக்கு நாட்டின் அரசியல் விஷயங்களைப் பற்றிய சிந்தனைகள் எழும் போலும். சமீப காலமாக அவர் அரசியல் அபிப்பிராயங்களை ஒரு புது முறையில் வெளியிடுகிறார்.



அவை புகையின்றி, சப்தமின்றி வெளி வரும் துப்பாக்கிக் குண்டுகளைப் போல் பாய்கின்றன.

'பதவி மோகம், பதவிகளில் அட்டை போல ஒட்டிக் கொண்டிருத்தல்' என்றெல்லாம் மற்றவர்கள் கூறுவதை அவர் சென்ற வாரம் மிக அழகாக எடுத்துக் கூறினார்.

''தில்லிக்குச் சென்றவர்கள் திரும்பி வருவதில்லை'' என்றார்.

அவர் வேலூர் சிறையில் இருந்த சமயம் தமிழ் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ள முயற்சி செய்தவரல்லவா? ஒரு வேளை அப்போது அவர் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளைப் படித்திருக்கலாம். அதில் நந்தன்,

''தில்லை வெளியில் கலந்துவிட்டால்-அவர் திரும்பியும் வருவாரோ?''

என்று பாடியதைக் கேட்டிருக்கக் கூடும்.

தில்லை என்பதுதான் தில்லி யென்று வழக்கில் வந்து விட்டதோ வென்றுகூட எண்ணத் தோன்றுகிறதல்லவா ?

* * *

அரசாங்க உத்தியோகங்களிலிருந்து விலகிக் கொண்டவர்கள் 'முன்னாள் கலெக்டர்', 'முன்னாள் எஞ்சினீயர்' என்று தங்களைக் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். மற்றவர்களும் இதே போல் செய்து வந்தால் என்ன? கல்யாணம் செய்து கொண்டு விட்ட பையன், 'முன்னாள் பிரம்மச்சாரி' என்று தன்னைக் கூறிக் கொள்ளலாம். இன்னும் கொஞ்சம் சாமர்த்தியசாலிகள் இப்படியே பெயில் பி.ஏ. வெற்றி பெறாத எம். பி. என்றெல்லாம்கூடத் தங்களைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம்!

இந்த முறையை மேலும் அபிவிருத்தி செய்து ஒருவர் தம்மைப் பற்றிக் குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார். மதுரையில் பெண்கள் பள்ளிக்கூடம் இடிந்து விழுந்ததன் சம்பந்தமாய்த் தினசரிப் பத்திரிகைகளில் பல கடிதங்கள் வெளிவந்தன. அவற்றுள் ஒன்றின் அடியில்,

டி. ஞான ஒளிவு

(முன்னாளாகப் போகும்
ஸ்டேட் ஹவுஸிங்
போர்டு தலைவர்)

என்று இருந்தது.

'ஞான ஒளிவு' என்ற பெயர் அபூர்வமானது. பதினாயிரக்கணக்கான சென்னை நகரவாசிகளுக்கு அந்தப் பெயர் ஸி. ஐ. டி. காலனிகளைத்தான் ஞாபகப்படுத்தும். 'வீடு கட்டுவது சம்பந்தமாக, சட்டப்படிக்கு அப்பீல்கள் செய்து கொள்ளும் உரிமையை ஜனங்கள் துஷ்பிரயோகப் படுத்துகிறார்கள்' என்று அவர் சொல்கிறார்.

''அனுமதியின்றி வீடு கட்டியவர்கள் மேலதிகாரிகளுக்கு அப்பீல் செய்து கொண்டால், அந்த அப்பீல் முடிவாகும் வரை முனிசிபல் கமிஷனர் அவர் மீது வழக்குத் தொடரக் கூடாது, வீட்டை இடிக்கவும் கூடாது என்று விதிகள் இருக்கின்றன....... நான் சென்னை முனிசிபல் கமிஷனராயிருந்த போது, அனுமதியின்றிக் கட்டப்பட்ட 70,80 வீடுகளை இடித்துத் தள்ளி யிருக்கிறேன். ஆனால் அந்த வீட்டின் சொந்தக்காரர்கள், கல்வி அறிவில்லாதவர்கள், அப்பீல் எழுதத் தெரியாதவர்கள்.....''

ஆகவே, 'அப்பீல் ஒழிக!' என்கிறார் கிரகநிக்ரஹராரான, ஞான ஒளிவு. அவர் நிக்ரஹ பாபம் செய்ததற்குப் பிராயச்சித்தமாகத்தான் பதினாயிரக்கணக்கான வீடுகள் நிர்மாணித்து வந்தார் போலும்!

* * *

ஒரு நண்பரும் நானும் பழையகால நாடகங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது அவர் ஒரு ருசிகரமான சம்பவம் சொன்னார்.

சதாரம் நாடகத்தில் வரும் அவனுடைய அசட்டுத் தம்பி அழகு, அரச பதவி ஏற்கிறான். அவன் தலையில் கிரீடத்தை வைக்கிறார்கள். அவன் உடனே அதைக் கழற்றி வைத்து விட்டுத் தான் காலில் அணிந்திருந்த இரண்டு செருப்புக்களையும் தலையில் வைத்துக் கொள்கிறான். ''ஏன் அப்படிச் செய்தீர்கள்?'' என்று மற்றவர்கள் கேட்ட போது, ''அது இத்தனை வருஷ காலமாக என்னைத் தாங்கிக் கொண்டிருந்தது. அதை இனிமேல் தாங்குவது என் கடமை.....'' என்றானாம்!

* * *

''**வை**த்தியப் பரீட்சையில் முதலாவதாகத் தேறியவர்கள் பேராசிரியர்களாகிறார்கள். அடுத்தபடி தேறியவர்கள் சிறந்த வைத்தியர்களாகிறார்கள். மூன்றாம் பட்சமாகத் தேறியவர்களோ மிக அதிகமாகப் பணம் சம்பாதிக்கிறார்கள்.'' —டாக்டர் பெக்

இரண்டு வாரங்களுக்கு முன்னர் காலமான அமெரிக்க இராணுவ வீரர் ஜெனரல் டக்ளஸ் மக்ஆர்தர் விரும்பியபடி மட்டும் காரியங்கள் நடந்திருந்தால்.....? அந்த மனிதர் எப்படிப் பட்டவர், அவர் என்ன விரும்பினார்?

அவர் ஓர் அமெரிக்க சேனாதிபதியின் பிள்ளை. படிப்பில் கெட்டிக்காரர். பரீட்சைகளில் 96.97-இதற்குக் குறைவாக மார்க்குகள் வாங்கி அறியார். வாலிபரா யிருந்தபோதே பல பொறுப் புள்ள பெரிய இராணுவப் பதவி களிலிருந்திருக்கிறார்.



விஜோபா

அவருக்கு நல்ல ஞாபக சக்தி யுண்டு. பேச ஆரம்பித்தால் பேசிக் கொண்டே இருப்பார். ஒரு சமயம் அவரது சகாவான ஜெனரல் ஐஸன்ஹோவர் அவ ரைப் பார்க்க வந்திருந்தபோது சேர்ந்தாற்போல் முக்கால் மணி நேரம் அவரே பேசிக் கொண்டு போனார். ஐஸன்ஹோவர் பொறுமை யிழந்து குறுக்கிட்டு நாலு வார்த் தைகள் சொல்லி வைத்தார். மக் ஆர்தர் பதி லுக்கு இரண்டு வார்த்தைகள் கூறிப் பேச்சை முடித்து அவரை அனுப்பி விட்டார்!

தான் என்ற அகம்பாவமே உருவெடுத்து வந்தவர். ஆண்டவன் ஒருவன்தான் தனக்கு மேலிருப்பவன் என்று எண்ணுபவர். போனால் போகிறதென்று அமெரிக்க ஜனாதிபதியின் அதி காரத்தை ஓரளவு ஒப்புக் கொண்டார். கூடிய வரை மேலதிகாரிக்குக் கீழ்ப் படியாமல்நடந்து கொள்வதை ஒரு கலையாகப் பயின்றவர். அமெரிக்க ஜனாதிபதியுடனும், அரசாங்கத்துட னும் எப்போதும் தகராறுதான்.

சென்ற யுத்தத்தில் ஜப்பான் சரண் அடைந்த போது, அவர் ஐ. நா.வின் பிரதி நிதியாக அந்தத் தேசத்தை நிர்வகிக்கும் சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டார்.



மக்ஆர்தர்

அவர், ஜப்பானிய மக்களை யும், அவர்கள் சக்கரவர்த்தி யான ஹிரோஹிட்டோவை யும் ஜனநாயக மனப்பான்மை யுள்ளவர்களாகச் செய்வதற் காகக் கடவுளால் அனுப்பப் பட்ட இரக்ஷகர் என்று தம்மைக் கருதிக் கொண்டார்; ஜனநாயகத்தைப் பலவந்த மாகத் திணித்தார்.

ஆனால், அவரே ஒரு சக்கர வர்த்தி போலாகி விட்டார். ஹிரோஹிட்டோ வருஷம் இருமுறை அவரை வந்து பார்த்து விட்டுப்போக வேண் டும்! அவர் யாருடனுமே அதிகம் பழகுவதில்லை. போட்டி காலை வரும் திருடர்கள், அயல் நாட்டு ராஜ தூதர்கள் முத லியவர்கள் அவர் தரிசனம் பெறுவதற்காக வருஷக் கணக்கில் காத்திருக்க வேண் டும். அவர் தமது மாளிகையிலிருந்து காரி யாலயத்துக்குச் சென்று திரும்புவதைத் தவிர வேறெங்கும் செல்லவில்லை: அவர் ஜப்பானி லிருந்த ஐந்து வருஷகாலத்திலும் தம்நகரான டோக்கியோவை விட்டு வெளியூரு நகரங் களுக்குச் சென்றதே இல்லை. அந்தக்காலத்தில் ஒரு முறை கூட அமெரிக்கா சென்றதில்லை.

அவரைத் தருவிக்க அமெரிக்க ஜனாதிபதி என்னென்னவோ செய்து பார்த்தும், மக்ஆர்தர் போகவில்லை. இறுதியில்ஜனாதிபதி தமது காரியதரிசியை அனுப்பும் படி ஆயிற்று. ஏன் ஒரு சமயம் ஜனாதிபதி ட்ரூமன் தாமே போய் ஜப்பானுக்குப் பக்கத்தில் உள்ள வேக்பீல்ட் தீவில் சந்தித்து விட்டு வந்தார். இவரை எப்படித் தீர்த் துக் கட்டுவது என்பது அமெரிக்க அரசாங்கத்துக்குப் பெரிய பிரச்னையாகப் போய் விட்டது.

கொரியா யுத்தம் வந்தது. சீனர்கள் வடகொரியப் படையில் கலந்து கொண்டு தென் கொரி யாவில் முன்னேறி வந்தனர். கடைசியில் ஐ.நா. சர்வதேசப் படையும், வட கொரியப் படையும் 38வது கோட்டு எல்லை யைக் கடந்து செல்லக் கூடாது என்று ஐக்கிய நாடுகள் சபை ஒரு சமரச ஏற்பாட்டைச் செய்தது.


ஆனால் ஜெனரல் மக்ஆர்தர், சீனக் கம்யூ னிஸ்டுகளை அப்போதே ஒழிக்கா விட்டால் ஆபத்து என்றும், ஆகவே கடுமையான யுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் பிரசாரம் செய்தார். அவர் சாதாரணமாகத் தமது யோசனைகளைப் பற்றி ஜனாதிபதிக்குத் தெரிவித்துக் கொண்டிருப்பதில்லை. பத் திரிகைகளுக்கு அறிக்கைகள் அனுப்பி விடு வார். ஆனால் இந்தப் பிரசாரம் அவருக்கு ஆபத்தாய் முடிந்தது.

'மக்ஆர்தர் ஐ. நா.வின் கொள்கைக்கு விரோதமாக நடந்து கொள்கிறார்' என்று கூறி ஜனாதிபதி ட்ரூமன் அவரைப் பதவியிலிருந்து 'டிஸ்மிஸ்' செய்து விட்டார். அத்துடன் அவரது அரசியல் வாழ்க்கை முடிந்து போயிற்று. அவர் பிறகு 'ரெமிங்டன் கம்பெனி'யின் தலைவரானார்!

மக்ஆர்தர் யோசனைப்படி கம்யூனிஸ்ட்கள் தாக்கப்பட்டிருந்தால், சீனாவில் கம்யூ னிஸ்ட் அரசாங்கம் வலுப் பட்டிராது. திபெத் சுதந்திரம் இழந்திராது. சீன சைன்யத் தின் இந்திய எல்லைப் படை யெடுப்பு நிகழ்ந்திராது!

ஜெனரல் மக்ஆர்தர் அவ ரது தாயாருக்குச் செல்லப் பிள்ளை. அவன் ஒரு பெண்ணைப் பார்த்து, "இவளைக் கலியா ணம்செய்துகொள்" என்றுள். வாய் திறவாமல் விவாகம் செய்து கொண்டு விட்டார். வணங்காமுடியான அவர் இப் படிச் செய்தது ஒரு விந்தையல்லவா?

எக்கோணத்திலும் சரி



இதோ உங்களுக்குக்

கூடுதலான பாதுகாப்பு

அளிக்கக்கூடிய டயர்

இந்த டிரெட் அமைப்பு, மோட்டாரோட்டிகளுக்கு மிகவும் அதிகமான பாதுகாப்பளிப்பதற்கெனப் பல வருடங்களாக சோதனைத்தலங்களிலும் ஓட்டப் பந்தயப் பாதைகளிலும் ஆராய்ந்து சோதிக்கப் பட்டதாகும். ஆயிரக்கணக்கான கோணங்கள் ரஸ்தாவைக் கவ்விப் பிடிப்பதால், சுலபமாக வண்டியை ஓட்டுவதற்கு உதவுவதுடன் நீங்கள் ஓட்டத் தொடங்கும்போதும் நிறுத்தும்போதும் இவை சிறந்த இழுப்புத் தன்மையை அளிக்கின்றன. பயர்ஸ்டோனை வாங்கும்போது நீங்கள் எதைப்பெறுகிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

Firestone

பயர்ஸ்டோன்

நியூ டிலக்ஸ் சாம்பியன் டயர்

பயர்ஸ்டோன் தரத்துக்கும் உழைப்புக்கும் உங்கள் சின்னம்

நீண்ட கால அனுபவத்தினால்
தயாரிக்கப்பட்டது...

TRAYONS

ட்ரேயான்ஸ் ரேயான் நூல்கள்

இந்தியாவில் முதல் முதலாக சிறந்த ரசாயன முறையில் தயாரிக்கப்பட்ட உன்னத நூல் "ட்ரேயான்ஸ்" ரேயான் நூல்கள் விலை மலிவு, நீண்ட கால உழைப்பு, பகட்டான உடைகளுக்கு ஏற்றது.

"ட்ரேயான்ஸ்" ரேயான் நூல்கள்
100, 120, 150, 300 டினியர்களில்
தயாரிக்கப்படுகின்றன.

ஸ்டாக்கிஸ்டுகள்

ரேயான் டிரேடர்ஸ் பிரைவேட் லிமிடெட்

61 செம்புதாஸ் தெரு சென்னை 1
போன் 21641 தந்தி CELYARN

கிளைகள்

68/416 மெயின் ரோடு செவ்வாய்ப்பேட்டை சேலம்
போன் 3253 தந்தி CELYARN

114/A தெற்கு மாசி வீதி மதுரை
போன் 2598 தந்தி CELYARN

இந்தியா லைப் பில்டிங் திருச்சிரோடு கோயமுத்தூர்
போன் 4435 தந்தி RAYONS

அறிவுக் கனலே, அருட் புனலே!

அமெரிக்காவில் ஆன்மிகம் உயிர் பெற்று விடும், பாரதத்தின் பெருமை வேரோடி விடும் என்ற நம்பிக்கை ஸ்வாமிஜிக்கு ஏற்படலாயிற்று. இனி இதைவிட முக்கியமான காரியத்தைச் செய்தாக வேண்டும் என்று ஸ்வாமிஜிக்கு 'அரிப்பு' உண்டாயிற்று — அதாவது, இந்தியாவை அடிமைப்படுத்தி வைத்துள்ள இங்கிலாந்துக்கே தாம் சென்று, அங்கு ஹிந்து தர்மத்தின் சிறப்பை நிலைநாட்ட வேண்டும் என்று அந்தத் தேச பக்த ஞானி விரும்பினார்.

ஸ்தாபன ரீதியில் அமெரிக்காவில் சநாதன தர்மப் பிரசாரத்தை அமைத்து விட்டு, ஸ்வாமிஜி விடைகொள்ள விரும்பினார். தம்முடைய ஞாபகார்த்தமாகத் தமக்குப் பேரன்பு காண்பித்தவர்களுக்குப் பரிசுப் பொருள்கள் வழங்கினார் ஸ்வாமிஜி. இதற்காக வென்றே கேத்ரி மகாராஜா அவருக்குப் பல உயர்ந்த பொருட்களை அனுப்பி வைத்தார். தாம் முன்பே உபயோகித்து வந்த கைத்தடி, போர்வை, பெட்டி இவற்றுடன் புதிதாக வந்த காச்மீரச் சால்வை, ரத்தின கம்பளம், மஸ்லின், பட்டு ஆடைகள், நூதன வேலைப்பாடமைந்த பேழைகள் ஆகியவற்றை ஈகைக் குணத்தில் சிறந்த ஸ்வாமிஜி அமெரிக்கர்களுக்கு வழங்கினார். ''என்னிடமுள்ள எந்தப் பொருளை யார் விரும்பினாலும் அப்போதே அது அவருடையதாகி விடுகிறது'' என்று மலர்ச்சியுடன் கூறியபடி தம்மிடமுள்ள எல்லாப் பண்டங்களையும் பரிசு வழங்கினார். ருத்திராக்ஷ மாலைகளும், தர்ப்பை ஆசனங்களும் தருவித்து அவற்றை அமெரிக்கச் சீடர்களுக்கு அளித்தார். ஆசனத்திருந்து, ருத்திராக்ஷமணிந்து தியானம் புரிந்த அந்த அமெரிக்கர்களை எண்ணினாலே அற்புதம் கலந்த ஓர் இன்பம் ஏற்படும்.

ஸ்வாமிஜி அமெரிக்காவில் ஸ்தாபனம் அமைத்து விட்டுப் புறப்பட விருக்கிறார் என்று அறிந்த இந்தியச் சீடர் சிலர் ஸ்தாபனம் என்று ஏற்பட்டால் அதில் ஊழல்களும் பல வந்து சேர்ந்து விடும் என்று பயந்தனர். அவர்களுக்கு ஸ்வாமிஜி, 'நான் மனிதர்களின் தனித் தன்மையையே போற்றுபவன்: ஸ்தாபனம் என்ற வெளி அமைப்பு மூலம் சிஷ்யர்களின் தனித் தன்மைகளை யெல்லாம் சாலை உருளை போல நெரித்துச் சமன்படுத்த நான் விரும்பவில்லை' என்று தெரிவித்தார்: என்றாலும் ஸ்தூலமான ஒரு ஸ்தாபனம் விலக்க முடியாத தேவையாகும் என்பதை ஸ்வாமிஜி விளக்கினார். 'ஸ்தாபன அமைப்பில் குறைபாடுகள் உண்டு. ஆனால் அதுஇன்றி நடைமுறை உலகில் வலுவான பிரசாரம் எதுவும் செய்ய முடியாது' என்று எழுதினார்.

'பராசக்தியான மாயையே நரேனுக்கு அருகிலே வரவொண்ணாது தள்ளி நிற்கிறாள்' என்று குருமகாராஜ் சொல்லியிருக்க, இன்று ஸ்தாபனம் அமைப்பதற்காகப் பரபரத்த விவேகானந்தரோவெனில் மாயையின் வலையில் தாம் விழுந்ததால்தான் இப்படி ஓயாமல் வேலை செய்கிறோமோ என்று எண்ணினார். 'என் தலையில் கடவுள் விதித்த பெரிய கர்மத்தை நான் கழித்துக் கொள்கிறேன். சீக்கிரமே அவன் என்னை விடுவிப்பான் என்று நம்புகிறேன்' என்று எழுதினார். 'என்னுடைய பழங் கந்தலுக்காகவும், முண்டனம் செய்த தலைக்காகவும், மரத்தடித் தூக்கத்துக்காகவும், பிச்சை உணவுக்காகவும் ஏங்குகிறேன்' என்று விம்மினார்:

இந்த ஏக்கத்தினால்தான் போலும், நியூயார்க்கில் சண்டமாருதமாகப் பிரசாரம் புரிந்த ஸ்வாமிஜி ஜூன் மாதத்திலிருந்து அமைதியைத் தீவிரமாகத் தேடினார். இந்தச் சரியான சந்தர்ப்பத்தில் மிஸ் டட்சர் என்ற சிஷ்யை தௌஸண்ட் ஐலண்ட் பார்க் (ஆயிரம் தீவுப் பூங்கா) என்ற பரம ரம்யமான இடத்துக்கு வருமாறு ஸ்வாமிஜிக்கு அழைப்பு அனுப்பினாள். அவரும் அழைப்பை ஏற்றார்.

ஸ்வாமிஜியின் ஜீவிதம் என்ற தருவில் மற்றொரு ரஸம் செறிந்த கனி பழுக்கப் போகிறது!

தட்சிணேசுவரத்திலும், காசிப்பூரிலும் பத்துப் பதினொரு சிஷ்ய மணிகளுடன் பரலோக ஆனந்தக்கலையை நில உலகில் நிலவச் செய்தார் பரமஹம்ஸ தேவர். அதேபோல ஸ்வாமிஜியும் ஒரு பன்னிரண்டு பேருடன் பரம சுகம் அநுபவிக்க தௌஸண்ட் ஐலண்ட் பார்க்கை உற்ற இடமாகக் கருதினார். இயேசுநாதருக்குப் பன்னிரண்டு உத்தம சீடர்கள் வாய்த்தாற்போல் ஸ்வாமிஜியுடன் பன்னிரண்டு சீடர்கள் அந்த இடத்தில் தங்கியிருந்து ஓர் அற்புத உலகை உருவாக்கினார்கள்.

ஸெயின்ட் லாரென்ஸ் நதியிலுள்ள ஆயிரத்தெழுநூறு தீவுகளில் ஒன்றின் மேற்கு மூலையில் அமைந்தது ஆயிரம் தீவுப் பூங்கா. இயற்கையன்னை தன்னை போகமாகச் சிங்காரித்துக்கொண்டு காட்சி தந்த அழகுத் தேக்கம் அது.

இங்குதான் ஊருக்கு அருகிலிருந்தும், தோப்பு ஒன்றுக்குள் ஒளிந்து கொண்டிருந்தது குமாரி டட்சரின் 'குடில்'. பாறை ஒன்றின் மீதமர்ந்து, அமெரிக்காவின் கிளேடன் நகரையும், கனடாவின் கடற்கரையையும் கம்பீரமாகப் பார்த்துக்கொண்டிருக்கும் அந்தக் குடில். அதன் உச்சாணி அறை மனிதர்களில் உயர்ந்த விவேகானந்தருக்கு ஒதுக்கப்பட்டது. அங்கிருந்து ஸெயின்ட் லாரென்ஸ் நதியில் சூரியாஸ்தமனமாவதைக் காண்பது நெஞ்சை அள்ளுகிற காட்சியாகும். அஸ்தமனத்துக்குப் பின் மதியம் உதயமாகித் தன் பிரதிபிம்பத்தை ஸெயின்ட் லாரன்ஸ் நதியில் கண்டுகொள்கிற காட்சியை வர்ணிக்க வார்த்தை கிடையாது.

இந்தச் சௌந்தரியத் தீவில்தான் 'உலகை மறந்தவர்களாக — உலகத்தால் மறக்கப்பட்டவர்களாக' ஸ்வாமிஜியும், சீடர்களும் அத்யாத்ம வாழ்க்கை தொடங்கினர்.

அத்யாத்ம வாழ்க்கையின் அடர்ந்த ஆனந்தங்களைப் பெறும்போதே, குழந்தைகளுடையதைப் போன்ற கள்ளமற்ற குதூகலங்களையும் அவர்கள் அநுபவித்தனர்.

எப்படிப் பகவான் கிருஷ்ணன் விளையாடிக் கொண்டே தத்துவ உபதேசம் புரிந்தானோ, எப்படிப் பகவான் ராமகிருஷ்ணர் சிரித்துச் சிரித்தே — சிரிக்க வைத்தே — சித்தத்தைத் தித்திக்க வைத்தாரோ, அவ்வாறே ஸ்வாமி விவேகாநந்தரும் தமது மனோகரமான மதுர நடவடிக்கையில் போதனையைக் குழைத்துத் தந்தார்.

அமெரிக்காவில் இப்படி ஓர் ஆத்மிகப் பண்ணை எழும்பியவுடன் அதனை ஆயிரம் தீவுப் பூங்கா மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. டட்சர் குடிலுக்கு வழி கேட்ட ஒருவரிடம் ஊரார் ஒருவர் சொன்னாராம்: ''அதோ அந்த மலைக்கு மேலேதான் சில விசித்திரப் பிரகிருதிகள் வசிக்கின்றன'' என்று. அந்த விசித்திரமான பிரகிருதிகளின் ஆத்ம சம்பத்துத்தான் அமெரிக்காவையே காத்தது.

ஸ்வாமிஜி ஆயிரம் தீவுப் பூங்காவில் ஒரு மடம் ஸ்தாபிக்கப் போகிறார் என்றே சிஷ்யர்கள் நினைத்தனர். ஆனால் அவரோ அந்தக் காலத்தில் ஸ்தாபனம்பற்றி எண்ணவில்லை.

''எங்களுக்கு ஸ்தாபனம் எதுவும் இல்லை. அதனை எழுப்பவும் நாங்கள் விரும்பவில்லை. ஒவ்வொருவரும், அவரோ, அவளோ விரும்பியதைச் சுதந்திரமாகப் போதிக்கலாம். அந்தரங்க எழுச்சி உள்ள ஒருவரால் மக்கள் நிச்சயமாகக் கவரப்படுவார்கள். தனி மனிதர்கள் பெற்றுள்ள தனித் தன்மையே எனது குறிக்கோள். தனி மனிதர்களைப் பயிலுவிப்பதை விட வேறு அபிலாஷை எனக்கில்லை. எனக்குத் தெரிந்தது வெகு சொற்பம். அச் சொற்பத்தைத் தங்கு தடை இல்லாமல் போதிக்கிறேன். எனக்கு ஏதேனும் தெரியாதென்றால் அப்போது என் அறியாமையை வெளிப்பட ஒப்புக்கொள்கிறேன். நான் ஒரு துறவி. ஆனபடியால் நான் என்னை இந்த உலகில் ஒரு பணியாளாக எண்ணிக் கொள்கிறேனே அன்றி பரமாசாரியனாக அல்ல'' என்று சீடரொருவருக்கு எழுதினார் ஸ்வாமிஜி.

பிற்காலத்தில் பல மடங்களை ஸ்தாபித்த அவர் இப்படி எழுதியது முரணாகாதா எனத் தோன்றலாம். முரண் ஏதுமில்லை. யாருக்கு உபதேசிக்கிறார்களோ அவர்களுடைய மனப் பக்குவத்துக்கு ஏற்பவே மகான்களின் மன நிலையில் கருத்துக்கள் தோன்றும்.

ஆயிரம்தீவுப் பூங்காவில் கூடிய இந்த அன்புக் குடும்பத்தினர் பிறர் உதவியின்றித் தாங்களாகவே சகல காரியங்களையும் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று முதலில் முடிவு செய்திருந்தார்கள். ஸ்வாமிஜியும் மற்றவர்களோடு சேர்ந்து எடுபிடிக் காரியங்கள் எல்லாம் செய்வார். அவர்களில் யாருக்குமே வீட்டு வேலைகள் செய்து பழக்கம் கிடையாது. எல்லாக் கற்றுக்குட்டிகளுமாகச் சேர்ந்துகொண்டு செய்யும் அமர்க்களம் சொல்லி முடியாது. பாத்திரம் கழுவுவது போன்ற வேலைகளை ஏதோ ஒருவாறு செய்ய முடிந்தது. சமையல்? ரொட்டித் துண்டுகளைக் கூட நறுக்கத் தெரியாமல் ரொட்டித் துண்டைத் தவிர, பலகை, கைவிரல் உள்பட மற்ற எல்லாவற்றையும் நறுக்கிக் கொண்டார்கள். எதையும் சரியாகச் செய்ய வராமல் ஆத்திரம் ஆத்திரமாக வரும். சிஷ்யர்களுக்குச் சகிப்புத்தன்மை ஏற்படவேண்டுமென்றே ஸ்வாமிஜி இப்படி ஏற்பாடு செய்தாரோ என்னவோ?

ஸ்வாமிஜி பரபரப்புடன் எல்லா வேலைகளுக்கும் முன் நிற்பார். முப்பத்திரண்டே வயதான ஸ்வாமிஜி—அவரது வயதை நினைவுபடுத்திக் கொள்ளும் போதெல்லாம் அவரது அளப்பரும் செயல்களும் உடனுக்குடன் மனத்தில் தோன்றி, ஓர் ஆச்சரிய உணர்வை ஏற்படுத்துகிறதல்லவா?—மற்ற எல்லோருக்கும் ஒரு தாய் போலப் பொறுமையுடனும், மென்மையுடனும் விளங்கினார்.

''இன்றைக்கு நானே சமைக்கிறேனே!'' என்பார் ஸ்வாமிஜி.

உடனே ''ஹா! எங்களைக் கடவுள் காப்பாராக!'' என்பார் லாண்ட்ஸ்பெர்க்.

அவருக்கு அதில் பழைய அநுபவம் உண்டே! நியூயார்க்கில் ஸ்வாமிஜி பாகம் பண்ணுவதுண்டு. அதற்கு வீட்டில் உள்ள சகல பாத்திரங்களையும் வாரிப் போட்டுக் கொண்டுவிடுவார். அவற்றையெல்லாம் யார் கழுவி வைப்பது? அதோடு ஸ்வாமிஜி வெகு நேர்த்தியாகச் சமைப்பார்; எனினும் காரத்தை மிகவும் தூக்கலாகப் போட்டு விடுவார்.

'காரமாக இருந்தால் என்ன? ஆனப்பட்ட விவேகாநந்தர் எனக்காக உணவு சமைப்பாராகில், அதை உண்பது தவிர எனக்கென்ன காரியம்?' என்கிறாள் ஸ்ரீமதி ஃபங்க்.

சாப்பாட்டு சமயத்தில் ஸ்வாமிஜி வெள்ளைக் குட்டை ஒன்றைக் கழுத்தில் கட்டித் தொங்க விட்டுக் கொண்டு, மேஜை அருகே நின்றபடி, போஜனசாலைப் பரிசாரகர்போலவே 'சாப்பாடு தயார்' என்று கூவி அழைப்பார்.

உண்ணும் போது இன்னும் பல வேடிக்கைகள் நிகழும்.

டாக்டர் ரைட் அடிக்கடி, ''ஏன் ஸ்வாமிஜி தாங்கள் சொல்வதெல்லாம் இதுதானே: 'நானே பிரம்மம்' என்பதுதானே?'' என்று கேட்பார். ''ஆமாம், டோகி! நீங்களேதான் பிரம்மம்'' என்று டாக்டரை 'டோகி'யாக்கிச் செல்லமாகச் சொல்வார் ஸ்வாமிஜி. டாக்டர் ரைட் உணவு மேஜைக்கு வரும் போது ''இதோ பிரம்மம் வருகிறது, பராக்'' என்று கட்டியம் கூறுவார் ஸ்வாமிஜி.

சிஷ்யர்களின் நடவடிக்கைகளை அப்படியே விகடம் செய்து காட்டுவார். யாரையும் புண்படுத்தாமல் பண்படுத்தும் நகைச் சுவையில் பரமஹம்ஸ தேவர் போலவே விளங்கினார் ஸ்வாமிஜி.

சிஷ்யர்களின் வெளிநடத்தைகளை மட்டுமின்றி உள்ளத்துச் சிந்தனைகளை அறிவதிலும் தமது குருவுக்கு நிகராகவே இருந்தார் ஸ்ரீமத் விவேகாநந்தர்.

ஆயிரம் தீவுப் பூங்காவில் சீடர்கள் எல்லாம் ஒன்று கூடி, ஸ்வாமிஜி அவர்களுக்கு மந்திரோபதேசம் செய்ய உத்தேசித்தபோது அவர்களின் அந்தரங்க எண்ணங்களில் புகுந்து பரீட்சை செய்தார்.

''நீங்கள் எல்லாரும் உபதேசம் பெறத் தயாரா யிருக்கிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்'' என்றவர் பிறகு லஜ்ஜையுடன், ''எனக்கு ஒரு சக்தி உள்ளது. அதை நான் மிகக் குறைவாகத்தான் பயன்படுத்துகிறேன். இப்போது பயன்படுத்தச் சந்தர்ப்பம் நேர்ந்துள்ளது. நீங்கள் அநுமதி அளித்தீர்களானால் உங்களுடைய உள்ளங்களை நான் படித்துப் பார்த்து அதன் பின் நாளைக் காலை உபதேசமளிப்பேன்'' என்றார். தூய்மை தவிர வேறு எதுவும் உள்ளத்தில் இல்லாத அந்தச் சீடர்கள் பரீட்சைக்கு மகிழ்ச்சியுடன் இசைந்தார்கள். ஸ்வாமிஜியும் அவர்களுடைய மனத்தைக் குடைந்து பார்த்துத் திருப்தி கொண்டார். மறுநாள் உபதேசமும் அளித்தார்.

இவ்வாறு தாம் பிறர் மனங்களுள் பிரவேசிப்பதும், கால வெள்ளத்தினூட் புகுந்து எதிர் காலத்தில் நடக்கப் போவதைச் சொல்வதும் எப்படி என்று ஸ்வாமிஜி விளக்கி யிருக்கிறார். அது அவருக்கு மிகவும் எளிய காரியமாகவே இருந்தது.

எங்கும் விரிந்து பரந்த நிர்மலமான நீல ஆகாயத்தை முதலில் அவர் நினைப்பார். இந்த வானவெளியை நோக்கிச் சித்தத்தை ஒருமுகப்படுத்தினால் தாம் யாரை அறிய விரும்புகிறாரோ அவரைப் பற்றி அங்கு காட்சிகள் தோன்ற ஆரம்பிக்குமாம். இந்தக் காட்சிகளை அறிவினால் விளக்கிக் கொள்வாராம் ஸ்வாமிஜி. இவற்றைக் கொண்டு அவர் தமது சிஷ்யர்கள் செல்லப் போகிற இடங்கள், அவர்கள் வசிக்கப்போகிற இல்லங்கள் முதலியவற்றைக் கூட ஒரு விவரம் விடாமல் வர்ணித்திருக்கிறார்.

ஸ்வாமிஜியின் யோக சக்தியை விளக்கும் இன்னொரு விவரத்தையும் இங்கு கூறலாம்.

ஸ்வாமிஜி அமெரிக்காவுக்கு வந்ததிலிருந்து சுமார் இரண்டாண்டுகளாகத் தினந்தோறும் — சில சமயங்களில் ஒரே தினத்தில் ஒரு முறைக்கு மேலும் — உரைகள் நிகழ்த்தி வந்ததால் ஒரே விஷயத்தையே அவர் திரும்பத் திரும்பச் சொல்ல நேர்ந்திருக்கிறது. என்றாலும் அவரது உரைகளில் ஒவ்வொன்றிலும் புதுப் புதுக் கருத்துக்கள் பிரகாசித்துக் கொண்டே தான் இருந்தன. இத்தனை எண்ணங்கள் அவருக்கு எங்கிருந்து உதயமாயிற்று?

ஸ்வாமிஜியே பல முறை பயந்ததுண்டாம் ''இப்படி ஒரே ஊரில் பல பிரசங்கங்கள் செய்ய ஒப்புக்கொண்டேனே! அப்படிப் புதிது புதிதாக என்ன பேசிவிட முடியும்?'' என்று. இதே நினைவில் படுக்கப் போவாராம்.

அப்போதுதான் அவருடைய யோக சக்தி வெளிப்படும்.

நள்ளிரவில் நல்லமைதியில் ஏதோ ஒரு குரல் அவர் இதுவரை மொழிந்திராத புதுக் கருத்துக்களை, புதிய வாக்குத் தொடர்களில் மொழியத் தொடங்கும். சில சமயத்தில் இக் குரல் தொலைவிலிருந்து கேட்கும். பிறகு மெல்ல மெல்ல அருகில் வரும். வேறு சில சமயங்களில் இரு குரல்கள் அவர் முன் பல பொருள்கள் பற்றி வாதப் பிரதி வாதம் செய்யும். இவற்றிலிருந்து ஸ்வாமிஜியின் மறுநாள் உரைக்குக் கருத்துக் கிடைக்கும்!

இது அவரது மனப் பிரமை என எண்ணி விடாதீர்கள்! இந்தக் குரல்கள் அவரது அறைக்கு வெளியே படுத்திருப்பவர்களுக்கும் கேட்டதுண்டு. ''ஸ்வாமிஜி, நேற்று இரவு நீங்கள் யாருடன் வாதம் செய்துகொண்டிருந்தீர்கள்?'' என்று மறுநாள் அவரை அவர்கள் வினவுவார்கள்.

இதில் அற்புதம் எதுவும் இல்லை என்றும், தமக்குப் பிரபோதம் மானுட சரீர உருவில் கிட்டிற்று என்றும் ஸ்வாமிஜி கூறுவார்.



ஆயிரம் தீவுப் பூங்காவில் ஆனந்த ஆச்ரமம் அமைந்துக் கொண்டவர்களால் நீண்ட காலம் தங்கள் காரியங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ள முடியவில்லை. வெளி மனிதர் ஒருவரை உதவியாளாக அமர்த்திக்கொண்டனர்.

தினமும் காலை வேளையில் பகவத் கீதை, உபநிஷதம், பாதராயண சூத்திரம் இப்படி ஆத்ம கிரந்தங்களில் போதனை நடத்துவார் ஸ்வாமிஜி.

நாரதரின் பக்தி சூத்திரங்களையும் ஸ்வாமிஜி அவ்வப்போது போதிப்பதுண்டு.

குருமஹராஜ் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றியும், அவரைத் தாம் அடைந்தது பற்றியும், அவர் தம்மைக் குற்றம் களைந்து கோதாட்டிய தேனான வரலாற்றைப் பற்றியும் நிறையச் சொன்னார் ஸ்வாமிஜி.

சீடர்களுக்கு மந்திர உபதேசம் நடைபெற்றது. எளிமையும், அழகும் நிறைந்த முறையில் ஒருநாள் அதிகாலையில் அது நிகழ்ந்தது. சிறிய வெளியொன்றில் அக்னி வளர்க்கப்பட்டது. புஷ்பாஞ்சலி செலுத்தி மந்திரோபதேசம் பெற்றனர், அந்த அற்புதம் நிறைந்த அமெரிக்க சிஷ்யர்கள் — பாரதத்தின் படித்த மேதைகள், 'மந்திரமுமாச்சு, க்ஷுமுமாச்சு' என்று கெக்கலி கொட்டிய சமயத்தில்.

மந்திர உபதேசத்துக்குப் பின் பிரசங்க உபதேசமும் தொடங்கியது. அப்புறம் ஏழு வாரங்களுக்கு அமிருத தாரைதான்! ஸ்வாமிஜி தமது வாழ்நாளில் ஆயிரம் தீவுப் பூங்காவில் தான் தலைசிறந்த நாட்களைச் செலவிட்டதாகக் கூறியுள்ளார். தம்முடைய பணி பாய்வதற்கு ஒரு வாய்க்காலைத் தாம் கண்டது அப்போதே என்று கூறியுள்ளார்.

ஸ்வாமிஜியை மையமாக வைத்து ஓர் அரை வட்டமாகச் சீடர்கள் தினந்தோறும் அமர்ந்து கொள்வார்கள். இன்றைக்கு ஆத்ம சாம்ராஜ்யத்தின் எந்த அழகிய மணிக் கதவம் தாழ் திறக்குமோ என்று ஆவல் மீதூற அமர்வார்கள். அப்படியே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ரமணீயமான பாதை வழியாக அந்த அகண்டானந்தத் திருநாட்டை நெருங்கத்தான் செய்தார்கள். 'அவர் தெய்வத்தின் திரு அவதாரம் இல்லையா? ஜீவன் தான் இழந்த சாம்ராஜ்யத்தை மீண்டும் பெறும் வரையில் அதனை விடாமல் இழுத்து வசப்படுத்தும் தெய்வத்தின் திரு அவதாரம் அல்லவா அவர்?' என்று கேட்கிறாள் சகோதரி கிறிஸ்டைன்.

பிற்பகலில் சிஷ்யர்களுடன் மலைச்சாரல்களில் இறங்கி நதிப் படுகையை ஒட்டிச் செல்வார் ஸ்வாமிஜி. புல்தரையில் எல்லோரும் அமர்ந்து கொண்டு அவரது உரையாடலின் அமுதை மாந்துவார்கள். ஒரு பட்சி, ஒரு புஷ்பம், அல்லது ஒரு பூச்சிகூட அவரின் இதய அடிவாரத்தைக் கிளறிவிட்டு விடும். அங்கிருந்து சுந்தர மயமான எண்ணங்களும், சொற்களும் பீறிட்டுப் பெருக்கிடத் தொடங்கும். பகலெல்லாம் தேய்ந்து தாரா கணங்களும் தாராபதியும் தலைநீட்டும் வரையில் ஸ்வாமிஜியின் உபதேசம் நீடித்த நாட்களும் உண்டு. சில சமயங்களில் தாரகைகளும், தாராபதியும் நீண்டவானில் ஒரு பாதியைக் கடக்கும் வரைகூட பிரசங்கமாரி



திருட்டுக் குற்றம் சாட்டப்பட்ட தம் கட்சிக்காரிக்காக வழக்கறிஞர் உருக்கமாக நீதிபதிகள் முன்னும் ஜூரிகள் முன்னும் வாதாடிக் கொண்டிருந்தார். முக்கியமான கட்டங்களில் தான் சங்கேதமாக மேஜையில் முஷ்டியினால் குத்தும்போது அந்தக் குற்றவாளி யுவதி குமுறி அழுது ஜூரர்களின் கருணையைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்க்க வேண்டும் என்று அந்த வழக்கறிஞர் முன்கூட்டியே தம் கட்சிக்காரிக்குச் சொல்லி வைத்திருந்தார். அந்த யுவதியும் அப்படியே அவ்வப்போது உணர்ச்சிவசப்பட்டு வந்தாள்.

ஒரு கட்டத்தில் ஒரு சட்ட நுணுக்கத்தை விளக்கும் வேளையில் அந்த வழக்கறிஞர், ஆவேசத்தோடு மறதியாக மேஜையை முஷ்டியால் குத்தினார். அவ்வளவுதான்; கூண்டில் நின்ற குற்றவாளி சுலபமாகவே விம்மி அழுதாள். சட்ட நுணுக்கத்தை விவரிக்கும்போது திடீரென்று அவள் சம்பந்தமில்லாமல் அழுதது நீதிபதிக்கு வியப்பாக இருந்தது. அவளைப் பார்த்து 'இப்போது ஏன் அழுதாய்?' என்றும் கேட்டு விட்டார்.


'யுவர் ஆனர்! என்னுடைய வக்கீல் எப்போதெல்லாம் மேஜையில் குத்துகிறாரோ அப்போதெல்லாம் நான் கண்ணீர் விடவேண்டும் என்ற ஏற்பாடு' என்று பளிச்சென்று பதிலளித்து வக்கீலைக் காலை வாரி விட்டு விட்டாள் அந்தப் பெண்.

சிரிப்பொலி அடங்கும் வரை அந்த வழக்கறிஞர் முகத்தில் எந்தவிதச் சலனமும் இல்லாமல் காத்திருந்தார். பிறகு நிதானமாக உணர்ச்சி நிரம்பிய குரலில், ''கனம் நீதிபதி அவர்களே! ஜூரர்களே! இப்படி அசட்டுத்தனமாகவும் அப்பாவித்தனமாகவும் பேசும் ஒரு பெண்ணுக்கு அத்தனை பெரிய வியாபார ஸ்தாபனத்தில் பட்டப் பகலில் பலபேர்கள் முன்னிலையில் திருடச் சாமர்த்தியமும் திறமையும் இருக்குமா? நீங்களே முடிவு செய்யுங்கள்'' என்று சொல்லி உட்கார்ந்து விட்டார்.

வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது; அவள் குற்றவாளி அல்ல என்று ஜூரர்கள் சொல்லி விட்டார்கள்!

— கோ; க;





நீடிக்கும். கால, தேச, வர்த்தமானங்களை அப்போது யார் கண்டபடி?

'பிரபோத பிரசங்கங்கள்' (Inspired Talks) என்ற பொருத்தமான பெயரில் ஸ்வாமிஜியின் ஆயிரம் தீவுப் பூங்கா உரைகளைத் தொகுத்தளித்துள்ள குமாரி வால்டோவுக்கு நாம் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறோம்.

அவரைத் தேடி, அவர் தங்களை அங்கீகரிப்பாரா என ஏங்கி ஏங்கி டெட்ராய்ட்டிலிருந்து நீண்ட பயணம் செய்து அவரை வந்தடைந்த ஸ்ரீமதி ஃபங்கும், குமாரி கிறிஸ்டைனும் அவரைக் கண்டவுடன், "இயேசு நாதன் இந்த மண்ணுலகில் இருந்தாரானால் அவரிடம் எத்தகைய உணர்வுகளுடன் வந்திருப்போமோ அப்படி உங்களிடம் வந்திருக்கிறோம்" என்று பக்தி அலைகளால் மொத்துண்டு கூறினார்கள். உடனே ஸ்வாமிஜி, "ஆஹா, எனக்கு மட்டும் கிறிஸ்துநாதரைப் போல் உங்களை இப்போதே முக்தி நிலைக் கனுப்பும் ஆற்றல் இருந்தால்?" என்று நாத் தழுதழுக்கக் கூறினார்.

ஒரு நாள் ஸ்வாமிஜி சீதாதேவியின் கற்பைப் பற்றிப் பேசி வரும்போது, அவரைக் கண்டதும் மேல்நாட்டுப் பெண்களில் சாமானியமானவர்கள் என்ன 'எண்ணுவர்' என்ற எண்ணம் ஸ்ரீமதி ஃபங்க்குக்கு எழுந்தது. இதை எப்படியோ புரிந்து கொண்ட ஸ்வாமிஜி தமது விசாலமான நயனங்களால் அவளை சாந்தமாகப் பார்த்தார். "என்னை இந்த உலகத்தின் அதிரூப சௌந்தரியவதி ஒருத்தி தவறான முறையில் பார்த்தாலும்கூட உடனே அவள் பச்சைத் தவளையாக மாறிவிடுவாள்" என்றார். அத்தகைய பிரம்மச்சரியம் அவரிடம் இருந்தது!

தமது சிஷ்யர்கள் யாவரையும் பிரம்மசரிய விரதம் காக்குமாறு பணித்தார் ஸ்வாமிஜி. அதோடு மாதாம் ஜுரயினை அபயாநந்தா என்ற பெயரிலும், லியோன் லான்ஸ்பெர்க்கைக் கிருபாநந்தா என்ற பெயரிலும் துறவிகளாக்கினார்.

ஆகஸ்டு ஏழாம் தேதி. அன்று ஸ்வாமிஜி ஃபங்க்கையும், கிறிஸ்டைனையும் தம்முடன் உலவ அழைத்துச் சென்றார். அரை மைல் தொலைவில் உள்ள ஒரு மலையின் உச்சியை அடைந்தனர். வனப்பாங்கான பகுதி அது. மோனத்தில் ஆழ்ந்திருந்தது அந்த வனம். தாழ்ந்த கிளைகளுடன் கூடிய ஒரு மரத்தைத் தேர்ந்தெடுத்தார் ஸ்வாமிஜி. அதனடியே மூவரும் அமர்ந்தனர். வழக்கம்போல் ஸ்வாமிஜி உபதேசிப்பார் என்றே அவர்கள் எதிர்பார்த்தனர். அவரோ, 'இன்று நாம் தியானம் செய்யப் போகிறோம். போதி விருக்ஷத்தடியே புத்தர் இருந்தாற்போல் இருக்கப் போகிறோம்' என்றார். உடனேயே அவரது உடல் வெண்கல விக்கிரகம் போல அசைவற்று இறுகிவிட்டது.

மேகங்கள் சூழ்ந்தன. இருள் பரவி வந்தது. சில்லென்று காற்று வீசலாயிற்று.

கனமழையும் பொழியத் தொடங்கியது.

வெண்கல விக்கிரகமாகவே வீற்றிருந்தார் விவேகாநந்தர்.

ஃபங்க் தனது குடையை அவருக்குப் பிடித்தாள்.

தியானம் சிறிதும் முறிவில்லாமல் நடைபெற்றது.

மற்ற சிஷ்யர்கள் மழைக் கோட்டும், குடைகளுமாக வந்தனர்.

அந்த அமளியில்தான் ஸ்வாமிஜி கண் திறந்தார்.

எல்லோரையும் நினைவாகப் பார்த்தார்— தியானம் கலைக்கப்பட்டு விட்டதே என்று தான் வருத்தம்.

"மீண்டும் நான் கல்கத்தாவின் கன மழையில் இருந்தேன்" என்றார்.

முன்பொரு நாள் உதரமும், உள்ளமும் பசிக்க, வாடி வதங்கிக் கல்கத்தா சாலையில் மயக்கமுற்று விழுந்த அவர் பின்பு மழையில் தெப்பமாக நனைந்து விழிப்புற்றதும், அன்பு மயமான கடவுள் துன்பத்தைப் படைத்தது ஏன் என்பதற்கு அப்போது விடை கண்டதும் நினைவில் இருக்கிறதல்லவா?

ஏப்ரில் ஏழாந் தேதியாகிய அன்றைக்கே ஸ்வாமிஜி ஆயிரம் தீவுப் பூங்காவின் அந்தப் பேரின்ப சுகவாழ்வை சமாப்தி செய்துவிட்டு நீராவிக் கப்பலில் கிளேடனுக்குப் பயணமாகிவிட்டார் — அங்கிருந்து நியூயார்க் செல்லும் உத்தேசத்துடன்; நியூயார்க்கிலிருந்து விரைவிலேயே இங்கிலாந்து செல்லும் உத்தேசத்துடன்.

நதியின் திருப்பத்தில் கப்பல் வளைந்து வளைந்து செல்லும்வரை சிஷ்யர்கள் யாவரும் அவரை உள்ளம் குவிந்து நோக்கிக் கொண்டிருந்தார்கள். குழந்தையைப் போல ஆனந்தமாக அவர் தமது தொப்பியை ஆட்டி ஆட்டி அவர்களிடம் பிரியா விடை பெற்றார்.

ஸ்வாமிஜி ஆயிரம் தீவுப் பூங்காவில் எத்தகைய உன்னத நிலையில் இருந்தார் என்பதை அப்போது அவர் இயற்றிய "சந்நியாசியின் கீதம்" (The Song of the Sannyasin) விளக்குகிறது. அதில் சில அடிகள் :

தங்கமே ஆயினும் தாமிரம் ஆயினும்
தளைகள் யாவையும் தகர்த்திடுவாய்
தடைகள் யாவையும் தவிர்த்திடுவாய்
அன்பு – விரோதம்; நல்லது – அல்லது
துவந்தங்கள் யாவுடன் துவந்தம்செய்வாய்
பணியப் பெற்றாலும் அணையப் பெற்றாலும்
அடிமை அடிமையே என உணர்வாய்
பொன் விலங்காயினும் பொல்லாததுஎன்று
புறந்தள்ளித் தீரனாய்ப் புறப்படுவாய்,
சாந்த சந்நியாசியாய்த் திகழ்ந்திடுவாய்-நீ
சொல்லுக: ஓம் தத்ஸத்
அணிசெய்தாலும் அடித்து உதைத்தாலும்
அசையாமல் அலையாமல் அகத்தே நிற்பாய்;
வந்தனை செய்வானே வந்திக்கப்படுவானும்
நிந்தனை செய்வானே நிந்திக்கப்படுவானும்
நிந்தனைசெய்திதைத் தெளிந்துவிட்டால் பின்

வந்தனைதான் ஏது? நிந்தனைதான் ஏது?
புரிந்துகொண்டே நீர, புறப்படுவாய்!
சாந்த சந்நியாசியாய்த் திகழ்ந்திடுவாய் – நீ
சொல்லுக: ஓம் தத்ஸத்

சாந்த சந்நியாசி ஒருவர் உலகில் இருந்து கொண்டே உலகியலைப் புறந்தள்ளித் தீரனாய் வாழ்வதெப்படி என்பதற்கு ஸ்வாமிஜியின் வாழ்க்கையே சான்று. உலக மக்களோடு இசைந்தாற் போலவே அவர் அமெரிக்காவில் வாழ்ந்தபோது நிகழ்ந்த வேசான சம்பவங்களில் சிலவற்றை இங்கு பார்க்கலாம்.

ஓயாமல் உன்னதத் தத்துவங்களை எடுத்துரைத்த பின் ஸ்வாமிஜி, ''பிதற்றிப் போகிறேன்'' என்று ஆரம்பித்து சந்தோஷிப்பார்; சந்தோஷப்படுத்துவார். 'பஞ்ச்' போன்ற நகைச்சுவை ஏடுகளைப் படித்துக் கண்ணில் ஜலம் வருகிறவரை விழுந்து விழுந்து சிரிப்பார். பிரவாகமாகப் பேச்சைப் பொழிந்து விட்டு, அது முடிந்த பின் ''நல்ல வேளை, கடவுள் புண்ணியத்தில் ஓய்ந்ததே'' என்று சொல்லிச் சிரிப்பார்.

அமெரிக்கர்களின் ஹாஸ்யக் கதைகளை மிகவும் ரசித்துக் கேட்டு அவற்றில் சிலவற்றைத் தாமும் திரும்பத் திரும்பக் கூறுவார்.

அவற்றில் ஒன்று:

பழங்குடிகள் வாழுமிடம் ஒன்றுக்குக் கிறிஸ்துவப் பாதிரி ஒருவர் மத மாற்றம் செய்யச் சென்றாராம். அவர்களின் தலைவன் அவருக்கு முன்பே ஒரு பாதிரி வந்ததாகச் சொன்னானாம். 'அவர் எப்படி இருந்தார்?' என்று கேட்டாராம் புதுப் பாதிரியார். 'எப்படியா? வெகு நன்றாக இருந்தார். தித்தி....ப்பாக இருந்தார்' என்றானாம் அந்த நரமாமிச பட்சிணி. புதுப் பாதிரியாருக்கு எப்படி இருந்திருக்கும்?

ஸ்வாமிஜி ஓர் அமெரிக்கர் வீட்டில் தங்கியிருந்தபோது அந்த வீட்டுச் சமையற்காரப் பெண்ணிடம் செவ்விந்தியன் ஒருவன் நேசம் கொண்டான். அவள் அவனை மணக்க மறுத்துவிட்டாள். உடனே அவன் தன் தலையில் இறகுகளைப் பொருத்திக் கொண்டு, தைலம் சிகையிலிருந்து முகமெல்லாம் வழியத் தன்னைச் 'சிங்காரித்து'க்கொண்டு அந்த வீட்டு வாசலில் வந்தமர்ந்து கொண்டு சத்தியாக்கிரகம் செய்யலானான். அந்தச் சமயத்தில் அவ்வூர்ச் சித்திரசாலை யொன்றில் ஸ்வாமிஜியின் 'ஆயில் பெயிண்டிங்' படம் தயாராகி வந்தது. அதைப் பார்வையிட ஸ்வாமிஜியும், வீட்டுக்குரியவரும் சென்றார்கள். சித்திரத்திலிருந்த விவேகானந்தரின் கன்னங்களில் ஆயில்பெயிண்ட் வழிந்து கொண்டிருந்தது. ''ஆஹா, சாமியார் சமையற்காரியைக் கல்யாணம் செய்து கொள்ளத் தயாராகிறார்!'' என்று கூவினார் ஸ்வாமிஜி.

அமெரிக்க நண்பர்களுக்குச் செல்லப் பெயரிட்டு அழைப்பதில் அவருக்கு ஒரு சந்தோஷம். தமக்கு மிகவும் நெருக்கமான அமெரிக்க நண்பர்கள் வீட்டில் உண்ணும் போது ஸ்பூனை உபயோகிக்காமல் விரலாலேயே எடுத்துச் சாப்பிடுவார். அது அவர்களுக்கு அதிசயமாகவும், சற்றே அருவருப்பாகவும் கூட இருக்கும். ஆனால் ஸ்வாமிஜியோ 'அப்படிச் சாப்பிட்டால்தான் ருசி இருக்கிறது' என்பார். ஸ்வாதீனமாகப் பல சிநேகிதர்களின் அடுக்களைக்குத் தாமே சென்று தமக்கு வேண்டிய உணவு வகைகளைச் சமைத்துக் கொள்வார். சென்னையில் அவருக்குக் கிடைத்திருந்த அன்பு மயமான சிஷ்யர்கள் அனுப்பியிருந்த 'சட்னி'யை மறவாமல் போட்டுக் கொண்டு உண்பார். காரம் பற்றி எரிகிற உணவுகளைச் சாப்பிட்டுத் தமது உடல் அவஸ்தைப்பட்டாலும் ''இதமாக இருக்கிறது'' என்பார். அதோடு காரமே சேர்க்காத அமெரிக்கர்களும் அவற்றைச் சாப்பிடுமாறு செய்து அவர்களின் கண்ணில் நீரை வரவழைத்து விடுவார்!

ஸ்வாமிஜி அடிக்கடி கழுத்துப் பட்டையையும் கால் பூட்ஸையும் உதறி எறிந்துவிட்டு விச்ராந்தியாக நூல்களைப் படிப்பார். புத்தகங்களை அட்டையிலிருந்து அட்டைவரை படிக்கும் அவர் செய்தித் தாள்களை மட்டும் பொறுமையாகப் படிக்க மாட்டார். தலைப்புக்களை மட்டுமே பார்த்துப் பக்கங்களைப் புரட்டிவிடுவார்.

அநாவசியமான மரியாதை முறைகளைப் பின்பற்ற மாட்டார். சில சமயங்களில் சிறு விஷயங்களில் கூடத் தாம் சொன்னதே நடக்க வேண்டுமென்று மகா 'அடம்' பிடிப்பார். 'வெண்கலக் கடையில் யானை புகுந்தாற்போல்' என்று நாம் சொல்கிறோம். 'பீங்கான் கடையில் காளை புகுந்தாற்போல்' என்றுஇதையே ஆங்கிலத்தில் சொல்வார்கள். ஸ்வாமிஜி தமது வீட்டில் இப்படித்தான் 'லூட்டி' அடித்தார் என்கிறாள் ஒருத்தி.

இப்படிப் பட்டவரே அமெரிக்கப் பழக்க வழக்கங்களைக் குழந்தை போலக் கேட்டறிந்து பின்பற்றுவதும் உண்டு. 'மாடியில் ஏறும்போது பெண்களை முன்னால் செல்ல அனுமதிக்க வேண்டுமா, நாமே முன்னால் செல்லலாமா?' என்பது போன்ற விஷயங்களைக் கூடக் கேட்டறிவார். தாம் அமெரிக்க வழக்கங்களை அறியாமல் ஏதாவது தப்புச் செய்தால் பொருட்படுத்தாமல் இருக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்வார்.

வேடிக்கை விநோதமாகப் பொழுதைக் கழிக்கும்போதே அவர் திடீரென ஒரு சொற்றொடரால் கேட்பவர்களுடைய இதயத்தை உலுக்கிய சந்தர்ப்பங்களும் பல உண்டு. ஸ்வாமிஜியுடன் வாதம் புரிந்த ஒருவர் அதன் பின் மூன்று நாட்களுக்குப் படுக்கையை விட்டே எழுந்திருக்க முடியாதபடி கிடந்தார் என்று ஓர் அமெரிக்க சிஷ்யர் எழுதியிருக்கிறார்.

புயல்காற்று (Cyclone) என்றே ஸ்வாமிஜிக்கு அமெரிக்கா பெயர் சூட்டிற்று. அகத்தில் அமைதி கூட்டிய விநோதப் புயல்காற்று அது. அமெரிக்க மக்களின் மனதிலிருந்த தூசி தும்புகளை யெல்லாம் அடித்துத் தள்ளி விட்டது அந்தச் சண்டமாருதம். தமது பணியைத் தொடரத் தங்கமான சீடர்களையும் தயாரித்துவிட்ட அந்தப் புயல் இங்கிலாந்துக்குச் செல்ல உத்தேசித்தது. **(தொடரும்)**


SARMA
ASTROLOGER

நான் ஒரு...

— விமலா ரமணி



சாவதற்குள் ஓர் ஆசை..... அதாவது என் கணவர் என்னைப் பெயர் சொல்லி அழகாகக் கூப்பிட மாட்டாரா என்று? 'விமலா'— எவ்வளவு அழகான பெயராகப் பார்த்து என் பெற்றோர்கள் அந்தக் காலத்திலேயே வைத்திருக்கிறார்கள்? இந்த நாகரிக உலகில் நேற்று மணம் புரிந்து கொண்டவர்கள் எவ்வளவு அன்பாக ஒருவர் மற்றொருவர் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டுக் கொள்கிறார்கள்! கல்யாணமாகி இந்த எட்டு வருடங்களில் இந்த நாகரிக உலகில் ('விமலா' — என்று என் பெயர் அவ்வளவு கர்நாடகமாகவா இருக்கிறது?) என் பெயரை ஒரு முறை, ஒரே ஒரு முறையாவது வாய் திறந்து கூப்பிட்டிருப்பாரா ?

எனக்குப் பத்து வயது மூத்தவளாக ஓர் அக்கா இருக்கிறாள். அது அந்தக் காலம் ! என் அத்திம்பேர் என் அக்காவைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டதில்லை! இருந்தாலும் காலா காலத்தில் 'லலிதா' என்ற பெயரில் ஒரு பெண் பிறந்தது! அதாவது பெண்ணுக்கு லலிதா என்று பெயரிட்டார்கள் ! அதுவே இரட்டை ஜென்மம் எடுத்தது. அதாவது பெரிய லலிதா-சின்ன லலிதா! அதட்டி 'லலிதா' என்று கூப்பிட்டால் அக்கா ஓடுவாள்! அன்புடன் அழைத்தால் மகள் ஓடுவாள்! ஒரு சமயம் தன் தர்மபத்தினி பெயருக்கு அர்ச்சனை செய்விக்க அத்திம்பேர் நினைத்தார். நக்ஷத்திரம், பூரம் என்றுதான் சொன்னார் அத்திம்பேர். சாஸ்திரிகள் சங்கல்பம் செய்ய ஆரம்பித்து விட்டார்! பூர நக்ஷத்திரே..... லலிதா நாம்ய....

அத்திம்பேர் தலையில் அடித்துக் கொண்டார் ! என்ன செய்வது? அப்பெயர் அவ்வளவு தூரம் பிரபலம் அடைந்திருக்கிறது !

நிற்க, அவராவது மகள் பேரோ, பாட்டி பேரோ ஒரு மனிதப் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார் !

என் கணவர்.......?

ஒரு நாள் பூரி என்பதற்கு வாய் தவறி 'ப்பூரி' என்று சொல்லி விட்டேன்! சில நாட்கள் என் பெயர் 'ப்பூரி'யாக இருந்தது! என்றோ ஆரஞ்சு கேட்டேன்! அந்த வாரம் முழுவதும் ஆரஞ்சுதான்! ஏதோ அர்த்தமில்லாமல் முணுமுணுப்பார்! அல்லது அதட்டுவார் ! அதுதான் என் பெயர்! அதற்கு 'ஏன்' என்று கேட்டுப் பழகி விட்டது எனக்கு!

மகள் ரூபா பிறந்து மூன்று வருடங்கள் ஆகின்றன. அந்தப் பெயரையாவது சொல்லிக் கூப்பிடுகிறாரா! ஊஹூம்!

''ரூப்! உன் அசட்டு அம்மா எங்கே?''

அசட்டு அப்பாவின் கேள்வி இது!

நிற்க, நான் என்னுள் ஒரு தீர்மானம் செய்தேன்! ஏப்ரல் முதல் தேதி வருகிறது!

கண்டிப்பாய் இந்த வருடமாவது இவரை ஏப்ரல் முட்டாள் ஆக்க வேண்டும்! அத்துடன் அவர் என் பெயர் சொல்லி, வாய் விட்டுக் கதறித் துடிப்பதைப் பார்க்க வேண்டும்! ஒரு கல்லில் இரண்டு மாங்காய்! என்னுள் தீர்மான வித்து வெகு பலமாக ஊன்றியது.

மார்ச் முப்பத்தியோராம் தேதி இரவு நாடகத்தின் முதல் காட்சி அரங்கேறியது.

அவரை வலுச் சண்டைக்கு இழுத்தேன். ஒரு சிறு 'பொறி' போதும்! தீயாகத் தகிப்பார் ! அவர் குணம் நான் அறியாததா?

அவர் மூக்குக் கண்ணாடிக் 'பிரேமை'க் குறை சொன்னால் போதும்! மூக்குக்கு மேல் கோபம் வந்து விடும் ! சண்டை பாரதச் சண்டையாக முற்றியது. பாவம் குழந்தை, எங்கள் சண்டையைப் பார்த்து நடுநடுங்கி தலையணையைக் கட்டிக் கொண்டு உறங்கி விட்டாள்! கண்ணீர் விட்டுக் கதறி அழுது கொண்டிருந்தேன்! நடிப்பு அழுகைஅல்லவா? சிரிப்புத்

தான் வந்தது! நடிப்போ சிரிப்போ அவர் திரும்பிப் பார்த்தால்தானே!

இருக்கட்டும். காலையில் தெரியும்!

காலை ஐந்து மணி. பால்காரன் கத்தினான். நான் மெள்ள எழுந்தேன். பாலை வாங்கியவள் காகிதத்தை எடுத்தேன். காண்போர் கலங்கக் கடிதம் உருவாகி விட்டது! காப்பி மேஜை மீது கடிதத்தை வைத்தேன்!

தற்கொலை செய்து கொள்பவன் கிணற்றில் தானே விழ வேண்டும்! கொல்லைக் கதவைத் திறந்து வைத்தேன். சப்தமிடாமல் கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொண்டேன்!

'பாழும் தூக்கமே அவரைவிட்டு விலகேன்!' நான் கொசுக்கடியைப் பொறுத்துக் கொண்டு கட்டிலுக்கு அடியில் முடங்கிக் கிடந்தேன்!

மணி ஏழாகி விட்டது!

அப்பாடா! இதோ வந்து விட்டார்! சோம்பல் முறிக்கிறார்! இதோ..... இதோ...

கடிதத்தை எடுக்கிறார்! பரபரப்புடன் எதற்காகக் கொல்லைப்புறம் போகிறார்! "ஐயோ! இதென்ன! திறந்த கொல்லைக் கதவு வழியாகத் திருடன் வந்து விட்டானே! நகைப் பெட்டி திறந்து கிடக்கிறதே!"

என் கணவர்! என் கணவரா கதறுகிறார்?

ஐயோ! நான் கொல்லைக் கதவைத் திறந்து வைத்தது எத்தனை முட்டாள்தனம்? என்னைத் திருடன் முட்டாளாக்கி விட்டானா?

நான் பரபரப்புடன் ஒளிந்த இடத்தை விட்டு எழுந்து ஓடோடி வந்தேன்.

ஹாலில்......? சிரித்தபடி சோபாவில் அமர்ந்திருப்பது யார்? என் கணவரா?

திருடனும் இல்லை! நகைப் பெட்டியும் உடைபட்டுக் கிடக்கவில்லை!

"வருக! வருக! ஏப்ரல் முட்டாள் அவர்களே! வருக! வருக! தாங்கள் ஐந்து மணியிலிருந்து நடந்து கொண்டது அனைத்தும் கண்டு வருகிறோம்! தாங்கள் கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொண்டு அவஸ்தைப்பட்டதையும் கண்டு மனம் குளிர்ந்தோம்!"

நான் திகைத்து நின்றேன்! வழக்கம் போல் ஏப்ரல் முதல் தேதி என்னைப் பார்த்துப் பரிதாபமாய்ச் சிரித்தது!

ஷேக்ஸ்பியரை அறிவீர்களா?

நீங்கள் படித்துப் பட்டம் பெற்றவராக இருந்தால் அநேகமாக எல்லாக் கேள்விகளுக்குமே சரியான விடை தெரிந்திருக்க வேண்டும்; எஸ். எஸ். எல். ஸி. தேறியவரா யிருந்தால் குறைந்தபட்சம் ஐம்பது சதவீதம் கேள்விகளுக்காவது சரியான விடை கொடுக்க வேண்டும்; அந்த அளவுக்குப் படித்திராதவர்கள்கூட இரண்டு மூன்று கேள்விகளுக்கேனும் தப்பில்லாமல் பதில் சொல்ல முடியும். இல்லையேல் உடனடியாக நீங்கள் லைப்ரரிக்குக் கிளம்புவது நலம்!

1\. கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களை யார் எந்த நாடகத்தில் கூறுகிறார்கள்? (அ) "மனைவியை அன்பினால் கொல்லுவதற்கு இது ஒரு வழி!" (ஆ) "தீப்பந்தங்கள் பிரகாசமாக எரிய இவளல்லவோ கற்றுக் கொடுக்கிறாள்!" (இ) "உன்னுடைய கூர்மையான பற்களால் உயிர் என்னும் இந்தச் சிக்கலான முடிச்சை உடனடியாக அவிழ்த்து விடு!" (ஈ) "நீதி வழங்க ஒரு டேனியலே வந்திருக்கிறான்!"

2\. சரியானபடி ஜோடி சேர்க்கவும் (அ) காதரின் — லைஸாண்டர் (ஆ) மிராண்டா — டெமிட்ரியஸ் (இ) ஹெலினா — பெர்டினண்ட் (ஈ) ஆர்லாண்டோ — ரோஸலிண்ட் (உ) ஹெர்மியா — பெட்ருஷியோ (ஊ) போர்ஷியா — பஸானியோ.

3\. இந்தக் கதா பாத்திரங்கள் எந்த எந்த நாடகங்களில் வருகின்றனர்? (அ) ஏரியல் (ஆ) பாட்டம் (இ) டச்ஸ்டோன் (ஈ) பக் (உ) மூன்று சூனியக்காரிகள்.

4\. அடியிற் கண்ட வாக்கியங்கள் சரியா தவறா? தவறானால் திருத்தவும். (அ) அன்டோனியோவை ஷைலக்கிடமிருந்து காப்பாற்ற ஆண் வேஷம் அணிந்து வரும் போர்ஷியா, சைத்தான் கூடத் தனக்கு அவசியமான போது வேதம் படிக்கும் என்கிறாள். (ஆ) புருடஸ் நீ கூடவா? அப்படியானால் ஸீஸர் (இறந்து) விழ வேண்டியதுதான்! என்று ஜூலியஸ் ஸீஸர் வருத்தத்துடன் கூறுகிறான். (இ) "ஒரு குதிரை! ஒரு குதிரை! ஒரு குதிரைக்காக என் சாம்ராஜ்யம்!" — ஓரிடத்தில் ஹாம்லெட் இவ்வாறு சொல்கிறான்.

விடைகள்: 1. (அ) பெட்ருஷியோ : 'டேமிங் ஆப் தி ஷ்ரு' (ஆ) ரோமியோ— ரோமியோ அண்டு ஜூலியட் (இ) கிளியோபாட்ரா விஷப் பாம்பினிடம் கூறுவது — ஆன்டொனி அண்டு கிளியோபாட்ரா (ஈ) ஷைலாக் — மெர்ச்சண்ட் ஆப் வெனிஸ்.

2\. (அ) காதரின் — பெட்ருஷியோ (ஆ) மிராண்டா — பெர்டினண்ட் (இ) ஹெலினா — டெமிட்ரியஸ் (ஈ) ஜோடி சரியே. (உ) ஹெர்மியா — லைஸாண்டர் (ஊ) ஜோடி சரியே.

3\. (அ) டெம்பஸ்ட் (ஆ). (ஈ) மிட்ஸம்மர் நைட்ஸ் டிரீம் (இ) ஆஸ் யூ லைக் இட் (உ) மாக்பெத்.

4\. (அ) தவறு. இது அன்டோனியோ பெஸ்ஸானியோவிடம் ஷைலக்கைப் பற்றிக் கூறுவது. (ஆ) சரி. (இ) தவறு. இது மூன்றாவது ரிச்சர்டு அரசன் கூறுவது.





உங்கள்
இருமல்
விரைவில்
அகலும்

தொண்டை
மற்றும்
மார்பு உபாதை
களுக்கு உகந்த

பெப்ஸ்

வில்லைகளை உட்கொள்ளுங்கள்.

பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, குணம ளிக்கும் ஆவிபோன்ற அதன் சத்து வலியைக் குறைக்கவும், தொண்டைப் புண், இருமல் மற்றும் ஜலதோஷத்திற்கும் காரணமான கிருமிகளைக் கொல்ல உதவுவதுமான வேலையைச் செய்வதை உணருங்கள். உடனடி இதமளிக்கிறது பெப்ஸ்.



கெடுதி விளைவிக்கும்
மருந்துகள் எதுவும்
இதில் கிடையாது.

குழந்தைகளுக்கும்
பயமின்றி
அளிக்கலாம்.

ப்ராங்கைடிஸ்
தொண்டைப் புண்,
மண்டைநீர், அடைப்பு
ஜலதோஷம் மற்றும்
இருமலுக்கு உடனடி
இதமளிக்கிறது.

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

ஸி. இ. ஃபுல்ஃபோர்ட் (இந்தியா) பிரை. லிட்.

சென்னை ராஜ்யத்திற்கு பூரண வினியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ் மோதி & கம்பெனி, சென்னை - 1



வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி
90 நாட்களில் தமிழ் மூலம் ஆங்கிலம் தானே இலக்கணமாகப் படிக்க, பேச, எழுத, சுலபமாகக் கற்க, பெரிய புத்தகம். விலை தபால் செலவோடு ரூ. 6-25.

ஜுகவரியம் (குடிசைத் தொழில்)
சோப், இங்கி, பத்தி, ஸ்னோ போன்ற 206 புதுத் தொழில்கள் அடங்கியது. விலை ரூ. 4-00 வி. பி. 0-85

தமிழ் ஹிந்தி ஃபோதினி
தமிழ் மூலம் சுலபமாக ஹிந்தி படிக்க பேச, எழுத, கற்க முடியும்.
விலை. ரூ. 2-50 வி. பி. 0-85.

குடும்ப இலகு வைத்தியம்
பச்சிலை மூலிகைகள் கொண்டு ஆரோக்கியம், பலம்பெற வழிகாட்டும்.
விலை ரூ. 2-50. வி. பி. ரூ. 1-00.

மாட்டு வாகடம் (பசு வைத்தியம்)
கால்நடைகளின் நோய்களைப் போக்கும்.
விலை ரூ. 2. வி. பி. ரூ. 0-85.

வாணி. புக் டிப்போ (K)

3, மலையப் பெருமாள் தெரு, ரூம் நெ. 5
சென்னை - 1

பருக்கள் மறைந்து விடுகின்றன

சருமம் மிருதுவாகவும் மழமழப்பாகவும் ஆகிவிடுகிறது

நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தால் முகப்பருக்கள் எல்லாம் மறைந்து விடுகின்றன. இன்றிரவு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகியுங்கள். உங்கள் சருமம் மிருதுவாகவும் வழவழப்பாகவும் மாசு மறுவின்றியும் ஆவதைக் காண்பீர்கள். நிக்ஸோடெர்ம் (Nixoderm) சருமத்தின் மீது ஏற்படும் முகப்பருக்கள் கட்டிகள் செந்நிறத் தழும்புகள் மேலாகப் பரவும் படை, படர்தாமரை வெடிப்புகள் முதலிய உபாதைகளுக்குக் காரணமான கிருமிகளையும், பூச்சிகளையும் அழிக்க விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சருமத்தின் மெல்லிய துவாரங்களில் இருக்கும் பூச்சிகளையும், கிருமிகளையும் அழித்தாலன்றி உங்கள் சரும உபாதைகள் விலகா. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். முகப்பருக்களை மறையச் செய்து சருமத்தை மிருதுவாகவும் வழவழப்பாகவும் இருக்கச் செய்யும் என்ற பூரண நம்பிக்கையுடன் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள்.

குண்டு மல்லிகை

அரு. ராமநாதன்

''அன்புள்ள பிச்சுமணி,

உன் கடிதம் முழுவதையும் படித்தேன். அதைப் படித்ததும் உன் மீது கோபப்படுவதா, அல்லது உனக்காக வருத்தப்படுவதா என்பது எனக்குப் புரியவில்லை. நீ என்னென்னவெல்லாமோ மிகவும் துணிச்சலாக எழுதியிருக்கிறாய்! ஆனால் அதையெல்லாம் என் மனத்தைப் புண்படுத்துவதற்காக நீ எழுதியிருக்க மாட்டாய் என்பது மட்டும் எனக்கு நிச்சயமாகத் தெரிகிறது. ஆனால் பிச்சுமணி, நம்முடைய அன்புக்கு நீ வேறு விதமான அர்த்தம் கற்பித்துக் கொள்ளக் கூடாது என்று ஏற்கனவே உன்னிடம் சொல்லியிருக்கிறேன். அதைத்தான் நான் திருப்பித் திருப்பிச் சொல்லும்படி நீ செய்கிறாய். நீ என் மீது எந்த விதமான எண்ணமும் கொள்ளக் கூடாது! அது நடக்கவே நடக்காது! ஆகவே நீ உன் மனத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். என்னை நீ மறந்தேயாக வேண்டும். என்னைப் பற்றி நீ என்னவென்னவோ வெல்லாம் கற்பனைகள் செய்து எழுதியிருக்கிறாய். தேவதைக் கதைகளைக் கேட்டு விட்டுத் தூங்கும் குழந்தைகளின் அர்த்தமற்ற கனவுகள் போலவே அவையெல்லாம் எனக்குத் தோன்றுகின்றன. நீ சாதாரணப் பையனல்ல என்று எழுதியிருக்கிறாய். அப்படியே இருக்கட்டும். இனிமேல் உன்னை அப்படி நான் பாவிக்க மாட்டேன். ஆனால் கலியாணம் என்ற பேச்சுக்கே என் வாழ்க்கையில் இடமில்லை என்பதை நீ தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

''இப்படி நான் எழுதுவதிலிருந்து நான் வேறு யாரையாவது காதலிக்கிறேனோ என்று நீ நினைக்கலாம். பிச்சுமணி, உன் நேர்மையான உள்ளத்தை மதித்து என் சம்பந்தப்பட்ட சில ரகசியங்களை உன்னிடம் தெளிவாகவே சொல்லிவிட விரும்புகிறேன். அவற்றை நீ படித்ததும் என் மனநிலையை உணர்ந்து வேறு வேலை உன் மனம் முற்றிலும் மாறி விடலாம். இனியும் என் உள்ளத்தை உன்னிடம் மூடி மறைக்கப் போவதில்லை. பிச்சுமணி, நான் ஒருவரைக் காதலித்தேன். மனப்பூர்வமாகக் காதலித்தேன். என் வாழ்க்கைக்கு வழிகாட்டக் கூடிய தெய்வமென்றே அவரைப் போற்றி மிகவும் ஆனந்தப்பட்டேன்.......''

இந்த இடத்தில் கடிதத்தைப் படிப்பதை நிறுத்தி விட்டுப் பிச்சுமணி வெடவெடவென்று நடுங்கினான். டாக்டர் ஜகந்நாதனைக் காதலிப்பதாக உமா எழுதியிருப்பாளோ என்ற பீதியில் நிறைந்தான். பிறகு ஒரு நிமிஷம் கழித்து ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு ஏதோ பூதத்தை எதிர் பார்ப்பவன் போல் உமாவின் கடிதத்தைத் தொடர்ந்து படிக்கலானான்.

''ஆனால் பிச்சுமணி, நான் பிறந்த நேரத்தில் கிரக நிலைகள் சரியில்லாததால் என் வாழ்க்கையில் பெருத்த ஏமாற்றத்தையும் துயரத்தையும் அநுபவிக்க வேண்டும் என்ற தலைவிதி இருந்திருக்கிறது. என் ஜாதகத்தில் ஏதோ தோஷமாம். எனக்கு இருபத்தைந்து வயதுக்குள் கல்யாணம் நடந்தால் எனக்கு மாங்கல்ய பலம் இராதாம். மாப்பிள்ளைக்கு ஏதாவது பிராணபத்து ஏற்படுமாம். என் ஜாதகத்தைப் பார்த்த ஜோதிடர்களெல்லாம் அப்படித்தான் ஒரு முகமாகச் சொன்னார்கள். ஆனால் இருபத்தைந்து வயது வரை ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொடுக்காமல் கன்னியாகவே வீட்டில் வைத்திருக்க என் பாட்டியும் என் அப்பாவும் விரும்ப வில்லை. என் ஜாதகத்தைக் கணித்தபோது நான் பிறந்த நேரம் சரியாகக் கணிக்கப்படாமல் இருந்திருக்கலாம் என்று அவர்கள் தங்கள் மனத்தைத் தேற்றிக் கொண்டார்கள். மேலும் என் ஜாதக தோஷத்திற்கு, ஏதேதோ பரிகாரங்கள் செய்து விட்டு எனக்கு வரன்கள் தேட ஆரம்பித்தார்கள். ஜாதகப் பொருத்தம் பார்க்க நேர்ந்தால் என்னை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று என் அப்பா நினைத்து என் ஜாதகத்தைக் கேட்டவர்களிடமெல்லாம் ஜாதகம் தொலைந்து போய் விட்டதென்றே

சொல்லிக் கொண்டு வந்தார். ஜாதகம் பாராமலே கலியாணம் செய்துகொள்ள யாராவது முற்போக்காளர் கிடைக்க மாட்டாரா என்றும், என் அப்பா தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தார். கடைசியில் ஜாதகம் சம்பிரதாயங்களில் நம்பிக்கையில்லாத ஒரு முற்போக்கான பெரிய குடும்பத்தைச் சேர்ந்த வரன் ஒன்று எனக்கு நிச்சயமாயிற்று. அவர் எங்களுக்கு ஏதோ தூரத்து உறவினர் தானும். அவர் பெங்களூரில் ஒரு பெரிய வியாபாரக் கம்பெனியில் மானேஜராக வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு மாதம் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் சம்பளத்தோடு தனிப்பட்ட முறையில் நிறைய வருமானம் கிடைத்து வந்தது. அவருடைய போட்டோவைப் பார்த்த போது எடுப்பான தோற்றத்துடன் மிகவும் அழகாகவே இருந்தார். அத்தகையவர் மாப்பிள்ளையாகக் கிடைப்பதென்றால் நான் பெரிய அதிர்ஷ்டக்காரிதான் என்று என் அப்பாவும் பாட்டியும் ஆனந்தப்பட்டார்கள். நானும் அப்படித்தான் நினைத்துப் பெருமையால் பூரித்தேன். அவரை நேரில் பாராமலேயே அவர் மீது காதலும் கொண்டு விட்டேன். அது மானசீகக் காதல்தான் என்றாலும் அது மனப்பூர்வமான காதலாகவே வளர்ந்து விட்டது.

''காதலென்பது ஒரு மின்னலைப் போன்றது. அது எந்தச் சமயம் தோன்றும் என்று சொல்ல முடியாது. ஆனால் ஒரு சமயம் அந்த மின்னல் வெட்டு




தோன்றி விட்டால் பெண்ணின் இருதயத்தில் அது கல்வெட்டுப் போல் பதிந்து விடுகிறது. அது போல்தான் அவர் மீது நான் கொண்ட காதலும் என் இதயத்தில் ஆழமாகப் பதிந்தது. அவருக்கும் எனக்கும் சீக்கிரத்தில் கலியாணத்தை முடித்து விட வேண்டும் என்று அவருடைய பெற்றோர்கள் அவசரப்படுத்தினார்கள். என் அப்பாவும் கூட அவசரப்பட்டார். ஆனால் அவர்தான் ஏதோ வியாபார வேலைகளைக் காட்டிக் கலியாணத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தார். அவருக்கு என் போட்டோவைப் பார்த்ததும் என்னை மிகவும் பிடித்துப் போய் விட்டது என்று நான் கேள்விப் பட்டிருந்ததால், பொறுப்பை முன் விட்டுத்தான் கலியாணத் தேதியைத் தள்ளிவைத்து வருகிறார் என்று நினைத்து அவர் மீது இன்னும் மதிப்பும் பற்றுதலும் கொண்டேன்.


"கடைசியில் எங்கள் விவாக முகூர்த்தத்துக்கு ஒரு நன்னாள் நிச்சயிக்கப்பட்டுத் திருமணப் பத்திரிகைகளும் அச்சடிக்கப்பட்டன. திருமண நாள் நெருங்க நெருங்க எனக்கு அவரைப் பற்றிய ஆவல்களும், ஆனந்தக் கனவுகளும் அதிகரித்தன. அவரைக் கல்யாணம் செய்து கொண்டு, அவரோடு தனிக் குடித்தனம் நடத்துவதாகவும், எப்படியெப்படியெல்லாமோ அவரோடு வாழ்வதாகவும் நான் என்னென்னவெல்லாமோ கற்பனை செய்து மகிழ்ந்தேன். அக்கற்பனைகளையெல்லாம் இப்போது நினைத்துக் கொண்டாலும் ஒரு பெரிய தனி வாழ்க்கையே அனுபவித்து வாழ்ந்து விட்டது போலிருக்கிறது.


"இந்த நிலையில் மாப்பிள்ளையைப் பற்றி அப்பாவுக்கு ஏதோ சந்தேகம் தட்ட ஆரம்பித்தது. மாப்பிள்ளையின் பெற்றோர்கள் தங்கள் ஒரே புத்திரனுக்குச் சீக்கிரம் கலியாணத்தை முடித்து விட வேண்டுமென்று ஏன் அவசரப்பட்டார்கள்? எத்தனையோ பெரிய இடத்துப் பெண்களெல்லாம் பெரும் பணத்துடன் போட்டி போட்டுக் கொண்டு வரக் கூடிய தகுதி அந்தப் பிள்ளைக்கு இருந்தும் ஜாதகம்கூடப் பார்க்காமல் என்னை அவருக்குக் கட்டி வைத்துவிட ஏன் பதற்றப்படுகிறார்கள்? கலியாணத் தேதியை மாப்பிள்ளை ஏன் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தார்? அவரைக் கடைசியில் அவருடைய பெற்றோர்கள் ஏன் கட்டாயப்படுத்தி இந்தக் கலியாணத் தேதியை நிச்சயித்தார்கள்? இவ்விதக் கேள்விகளெல்லாம் என் அப்பாவைப் பெரிதும் குழப்பின. மேலும் நிலைமை மோசமாகும் விதமாக அந்த மாப்பிள்ளையைப் பற்றித் திடீரென ஒரு செய்தியும் வந்தது. அவர் பெங்களூர் கம்பெனியில் பார்த்து வந்த வேலையை விட்டு விட்டாராம். அவரால் எந்த வேலையுமே செய்ய முடியவில்லையாம். அது ஏன் என்பது முதலில் எனக்குப் புரியவில்லை. பிற்பாடுதான் ஒரு நாள் அது எனக்குப் புரிந்தது. அதிலிருந்து அவரைப் பற்றிப் பல விஷயங்களையும் தெரிந்து கொண்டேன். அவருக்குப் பெங்களூரில் எப்படியோ குடிப் பழக்கம் ஏற்பட்டு விட்டது. எதனால் அந்தப் பழக்கத்தை மேற்கொண்டார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவர் ஒரு குடிவெறியர் என்பது மட்டும் எனக்கு நிச்சயமாகத் தெரியும். இப்படி எழுதுவதனால் அவரைப் பற்றி என்ன நினைப்பாயோ? ஆனால் அவர் கெட்டவர் அல்ல! குடிப் பழக்கம் என்னும் ஒரு பலவீனத்தைத் தவிர மற்ற விஷயங்களில் அவர் மிகவும் நல்லவர். என் மீது அவர் அளவிலாத அன்பே வைத்திருந்தார். என் விஷயத்தில் நல்லவராக நடந்து கொள்ளவே எப்போதும் முயன்றிருக்கிறார்."


இதைப் படித்ததும் பிச்சமணி தன் கீழுதட்டைப் பற்களால் அழுத்திக் கடித்துக் கொண்டு கடிதத்தைத் தொடர்ந்து படிக்கலானான்.

"பிச்சமணி, தன்னடக்கத்தை ஒருபோதும் இழக்கக் கூடாது என்று உன்னிடம் ஒரு முறை எச்சரித்திருக்கிறேன். அது உனக்கு ஞாபகம் இருக்கும். அப்படி உனக்கு ஏன் எச்சரித்தேன் தெரியுமா? தன்னடக்கத்தை இழந்ததின் மூலம் ஒரு நல்ல மனிதரின் வாழ்க்கை எப்படிச் சர்வநாசம் அடைந்தது என்பதை நான் அனுபவ பூர்வமாகத் தெரிந்து கொண்டிருக்கிறேன்! அவர் வெளிப் பார்வைக்கு நல்ல மனோதிடம் வாய்ந்தவர் போல் காணப்பட்டாலும், குடிப் பழக்கம் இன்னும் வலுவாக அவரை ஆட்கொண்டிருந்தது. அந்தப் பழக்கத்தை எதிர்த்து அவர் எவ்வளவுதான் போராடினாலும் அவரால் அதிலிருந்து மீளவே முடியவில்லை. மது போதையென்னும் சைத்தானுக்கு அடிமைப்படும் போது அவர் தன்னடக்கம், தன்னியல்பு, சுயமரியாதை, சுய அறிவு அனைத்தையுமே இழந்து விடுவார். போதை வெறியில் அவர் மிருகத்தை விட மோசமான நிலையை அடைந்து விடுவார். அப்போது அவர்









என்னென்ன செய்கிறார் என்பது அவருக்கே தெரியாது. சில சமயங்களில் மிகவும் மூர்க்கத்தனமாகவும் நடந்து கொள்வார். அதையெல்லாம் வர்ணிக்கவே முடியாது. ஆனால் போதை தெளிந்து அந்தச் சைத்தான் அவரை விட்டு விலகியதும் அவர் மிகவும் மனம் வருந்தித் தம்மீதே கசப்புற்று விம்மி விம்மி அழுவார். தற்கொலை செய்து கொண்டு விடலாம் என்றும் துடிப்பார். தன்னடக்கத்தை இழந்ததால் ஏற்பட்ட விளைவு தான் அது! ஆனால், அவரைப் பற்றி இத்தனை விஷயங்களையும் கேள்விப்பட்ட பிறகும்கூட என் மனம் அவரை வெறுக்கவில்லை.



''என்னங்க இது? நம்ம கம்பெனி போனஸ் விஷயம் சும்மா இழுத்துக்கிட்டே போவுதே!''

''ஹூம்! நம்ம கம்பெனியே ரப்பர் கம்பெனியாச்சே ...அப்படித்தான் நீண்டுகிட்டே போவும்!!''

அவரை எப்படியும் திருத்தி எனக்குச் சரியான வாழ்க்கைத் துணைவராக மாற்றி விடலாம் என்றே நம்பினேன். அவர் மீது நான் கொண்டிருந்த காதலால் அவரோடு, இந்த உலகத்தின் எந்த மூலைக்கும், எந்த நரகத்துக்கும் கூடப் போகத் தயாராக இருந்தேன்!

''இந்த நிலையில் எங்கள் திருமண நாள் வந்தது. அவருடைய பெற்றோர்கள் தங்கள் ஒரே பிள்ளையின் கல்யாணத்தை அதிவிமரிசையாகக் கொண்டாட வேண்டும் என்று திட்டமிட்டு, பெரும் பணம் செலவழித்து அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்திருந்தனர். பாண்டு வாத்தியம், ஸ்பெஷல் நாதஸ்வரம், சங்கீதக் கச்சேரிகள், வாண வேடிக்கைகள் பிரமாதமான ஊர்வலம், ஆயிரக்கணக்கானவர்களுக்கு விருந்து முதலான ஏற்பாடுகளெல்லாம் ஏக அமர்க்களமாக நடந்து கொண்டிருந்தன. என் உறவினர்களும் சம்பந்திப் புறத்துத் திரளான பந்து ஜனங்களும் கல்யாணவீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். மணப் பெண்ணுக்காக மாப்பிள்ளை வாங்கி வைத்திருந்த நகைகள் துணிமணிகளெல்லாம் எனக்கு அணிவிக்கப் பட்டன. தாலி கட்டிக் கொள்வதற்காக என்னை மண மேடைக்கு அழைத்துச் செல்லும் நேரம் வந்தது. அந்த நேரத்தில்...... அந்த நேரத்தில்.....

''மாப்பிள்ளையைக் காணவில்லை! அவர் எங்கோ ஓடிப் போய் விட்டதாகப் பேச்சுக்கள் கிளம்பின. உடனே கல்யாண வீடு துக்க வீடாக மாறியது. விருந்துசாப்பிட்டுக்கொண்டிருந்தவர்களெல்லாம் பாதிச் சாப்பாட்டிலேயே எழுந்து விட்டார்கள். ஆளுக்கொரு விதமாகப் பேசவும் ஆரம்பித்தார்கள். மாப்பிள்ளையின் பெற்றோர்கள் என் முகத்தைப் பார்த்தே, 'புண்ணியவதி! தாலி கட்டுவதற்குள்ளேயே புருஷனை ஓட்டி விட்டாள்' என்று திட்டினார்கள். என் தகப்பனாரோ என் ஜாதகத்தைச் சபித்தார். கல்யாணப் பந்தலின் அலங்காரங்கள், மாவிலைத் தோரணங்கள் முதலானவை யெல்லாம் என்னைப் பார்த்துச் சிரித்தன. நான் அன்று முழுதும் அழுது கொண்டிருந்தேன். அடுத்த நாளும் அழுதேன். அப்போது பாட்டிதான் எனக்காகப் பரிந்துகொண்டு வந்து ஆறுதல் சொன்னாள். 'நல்ல வேளை, தாலி கட்டுவதற்குள் பிள்ளையாண்டான் போய் விட்டான். வேறொரு வரன் பார்க்கலாம்' என்று பாட்டி சொல்லி அமைதி யடைந்தாள். நானும்கூட அமைதியடைந்தேன்.

''ஆனால் நான் அடைந்த அமைதி வேறு! அந்தக் கல்யாண விவகாரத்தோடு என் வாழ்க்கை முடிந்து விட்டதென்ற அமைதிதான் அது! அதன் பிறகு அந்த மாப்பிள்ளை என்னவானார் என்பது இன்று வரை யாருக்கும் சரியாகத் தெரியவேயில்லை. அவர் எங்கோ வெளி நாட்டுக்கு ஓடித் தலை மறைவாகி விட்டார் என்று சிலர் சொன்னார்கள். அவர் எங்கோ காலமாகி விட்டதாக வேறு சிலர் சொன்னார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் அவர் என் மனத்தில் வாழ்ந்து கொண்டேயிருக்கிறார்.

''என் இதயத்தில் ஒரே ஒருவருக்குத்தான் இடமளிக்க வேண்டும் என்று நினைந்திருந்த நான் அவருக்கு என் இருதயத்தையே அர்ப்பணித்து விட்டேன். இனி உனக்கோ வேறு யாருக்குமோ எந்த இருதயத்தை நான் அளிக்க முடியும்? மேலும் பெண்ணொருத்தி தன் முதற் காதலை ஒரு போதும் மறப்பதேயில்லை. அப்படியிருக்கும் போது அவள் வாழ்க்கையில் இரண்டாவது காதல் எப்படி ஏற்பட முடியும்? என் பாட்டியோ என்னை மறுபடியும் மணக் கோலத்தில்

காணலாம் எனக் கனவு கண்டு கொண்டிருக்கிறாள். அதை நான் மறுத்துப் பேசுவதில்லை என்றாலும், மறுபடியும் நான் மணக் கோலம் பூணப் போவதே யில்லை. அதை நினைத்துப் பார்க்கவும் நான் விரும்பவில்லை.

''பிச்சுமணி! என் காதலையும் கல்யாணத்தையும் பற்றிய துயரச் சரித்திரம் முழுவதையும் ஆரம்பம் முதல் கடைசி வரையில் சொல்லி விட்டேன். காதலின் ஏமாற்றத்தினால் ஏற்பட்ட துயரம் — தன் காதலுக்குரிய தெய்வம் தெருப் புழுதியில் விட்டெறியப்பட்டதைக் கண்டதால் ஏற்பட்ட துயரம் இதற்கிணையான வேதனையும் விரக்தியும் இந்த உலகத்தில் வேறு ஏதேனும் உண்டா? கிடையவே கிடையாது! இனி என் வாழ்க்கையில் காதலுக்கு இடமே கிடையாது! என் காதல் உணர்ச்சி யெல்லாம் எப்படி மின்னலைப் போல் தோன்றி மின்னலைப்போல எப்படி மடிந்து என்னை விட்டு அறவே மறைந்து விட்டது என்பதை உனக்கு உணர்த்துவதற்காகவே இவ்வளவையும் எழுதினேன். இப்படிப்பட்டவளிடம் நீ எந்த இருதயத்தையோ, காதலின் எந்தச் சுவாரசியத்தையோ காண முடியுமா? என் வாழ்க்கை ஒரு பாலைவனத்துக்குச் சமானம்! அதில் தோன்றுவதெல்லாம் வெறும் கானல் நீர்தான்! அதை உண்மையான தடாகம் என்று நம்பி நாடி அலையக் கூடாது! பசும் சோலையாக விளங்க வேண்டிய உன் வாழ்க்கையை என் பொருட்டுப் பாலைவனமாக்கிக் கொள்ளக் கூடாது! என் மீது நீ ஏதாவது எண்ணம் கொண்டிருந்தால் அது பெரும் தவறு என்பதை நீ உணர வேண்டும். உன்னுடைய அந்த எண்ணத்துக்காக நான் பெரிதும் வருந்துகிறேனே தவிர, உன் மீது ஏனோ என்னால் கோபப்பட முடியவில்லை. இன்னும் சொல்லப் போனால் உன் மீது எனக்கு அளவில்லாத பரிதாபமும் உண்டாகிறது. உன்னை நினைக்கும்போது என் கண்கள் கலங்குகின்றன. அதனால் உன் நன்மையையும், உன் மீதுள்ள ஏதோ ஓர் அன்பையும் உத்தேசித்தே சொல்கிறேன். என் மீது நீ கொண்டிருக்கும் ஆசையை, அது காதலென்றாலும் சரி, வெறும் மனப் பிரமை யென்றாலும் சரி! உடனே மறந்து விடு! அதை எப்படியும் நீ மறந்தேதான் ஆக வேண்டும். உனக்கு எந்த விதத்திலும் நான் ஏற்றவள் அல்ல! உன்னைவிட வயதில் நான் மூத்தவள்! உலக அனுபவங்களில் — முதிர்ந்தவள். ஏற்கனவே ஒருவரைக் காதலித்து என் வாழ்க்கையைப் பாலைவனமாக்கிக் கொண்டிருப்பவள். என்னுடைய அமைதியான இயல்பைப் பார்த்து நீ பெரிதும் போற்றுகிறாயே, அது வெறும் மயான அமைதிதான்! உன்னைவிட வயதில் குறைந்த ஒருத்தியை, இதற்கு முன் வேறு யாரையும் காதலித்திராத புத்திளம் பெண்ணொருத்தியைத்தான் நீ இருமணம் செய்து கொள்ள வேண்டும். உனக்கேற்ற பெண்ணொருத்தியின் இருதயத்தில் நீ முதலாவதாக இடம் பெற்று அந்த இருதயம் முழுவதையும் நீயே கவ்களித்துக் கொண்டு, அவளுக்குக் கணவனாகி வாழ்க்கையின் ஆனந்தங்களை யெல்லாம் அனுபவிக்க வேண்டும். உன்னுடைய அந்த வாழ்க்கையை நான் என் இரு கண்களாலும் காண வேண்டும்.

இதுதான் எப்போதும் என் பிரார்த்தனையாக இருக்கும்!

இப்படிக்கு,
உமா.''

(தொடரும்)


ஆஹா...கோலினாஸ்
Kolynos
புதியது-தூயது...
களிப்பில் மலரும் புன்னகை...அது கோலினாஸ் தரும் புன்னகை



தனி வழி

ஆர். சூடாமணி

காட்சி 1

[கிராமச் சூழ்நிலையில் எளிமையான ஓட்டுவீடு. சிறிய கூடத்தில் பதினைந்து வயதான சந்துருவும் அவன் தாயார் லக்ஷ்மியும் இருக்கிறார்கள்]

சந்துரு: (சட்டைக் கையால் முகத்தைத் துடைத்துக்கொண்டவாறே): ச்ச்...! அப்பாடா, என்ன வெய்யில், என்ன வேர்வை! பட்டணத்தை விட அதிகம். தாங்கவே முடியவில்லை.

லக்ஷ்மி: முடியாமல் என்னடா சந்துரு? நாமெல்லாம் என்ன சீமையிலா பிறந்து வளர்ந்தவர்கள்?

சந்துரு: இப்படிச் சொல்லிக்கொண்டே இருங்கள். எவ்வளவு மோசமான நிலையானாலும் பொறுத்துக் கொண்டே இருந்தால் அப்புறம் முன்னேறுவது எப்படி?

லக்ஷ்மி: நாம் ஏழை என்பது தெரிந்தது தானே?

சந்துரு (எரிச்சலுடன்): தெரிந்தது தான்; அம்மா தெரிந்ததுதான்.

லக்ஷ்மி: ஏழையாயிருப்பது பாவமா?

சந்துரு: ஏழையாயிருப்பது பாவமில்லை. ஏழ்மையையே ஒப்புக்கொண்டு திருப்தியாக இருக்கிறீர்கள் பார் நீயும் அப்பாவும், அதுதான் பாவம். சேச்சே, அப்பாவுக்கு வாழ்க்கையிலே ஒரு லட்சியமே இல்லை.

[மூர்த்தி வருகிறார். களைத்த மெலிந்த உருவம். வயதை மீறிய முதுமை. முகத்தில் மந்தகாசம்.]

மூர்த்தி: என்ன லெக்சர் அடித்துக் கொண்டிருக்கிறான் பையன்?

லக்ஷ்மி: உங்களுக்கு வாழ்க்கையில் லட்சியமே கிடையாதாம்.

மூர்த்தி: ஏண்டா, அப்படியா?

சந்துரு: போங்கப்பா. நான் சொன்னால் நீங்கள் கேட்கப் போகிறீர்களா என்ன? நீங்கள் பெரிய பட்டணத்தில் நல்ல அந்தஸ்துடன் ஒரு சிறந்த கல்லூரித் தலைவராகவோ ஆராய்ச்சி நிபுணராகவோ மதிப்புடன் வாழ்ந்திருக்க வேண்டிய அறிவாளி என்று எனக்குத் தோன்றுகிறது.

மூர்த்தி: இப்போது வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டு ஏதோ ஒரு கிராம மூலையில் பள்ளிக்கூட வாத்தியாராகத் தேய்ந்து கொண்டிருக்கிறேன் என்கிறாயா? (சிரித்துக் கொண்டே..) என்ன இன்றைக்கு இந்தப் பேச்செல்லாம் கிளம்புகிறது?

லக்ஷ்மி: பாவம், சந்துரு வளருகிற வயசில்லையா?

மூர்த்தி: எதுதான் வளருகிற வயசில்லை லக்ஷ்மி? உலகத்தில் கடைசி மூச்சு இருக்கும் வரை வளருகிற வயசுதான். முன்னேற்றத்துக்கு அடிப்படைத் தத்துவமே அதுதான்.

சந்துரு: இந்தத் தத்துவத்தைப் பற்றி நீங்கள் சொல்வது தான் ஆச்சரியமாக இருக்கிறது.

மூர்த்தி: ஏன், நான் முன்னேறவில்லை என்று சொல்கிறாயா?

சந்துரு: நான் சொல்ல என்ன இருக்கிறது? உங்களுக்கு வயசு நாற்பத்தைந்து ஆகிறது. இன்னும் அரை வயிற்றுக் கஞ்சி குடிக்கும் சம்பாத்தியம்தான். இது முன்னேற்றமென்று உங்களுக்குத் தோன்றுகிறதா?

மூர்த்தி (ஒரு நாற்காலியில் சென்று அமர்ந்து கம்பீரக் குரலில்): நான் வயிறாகவும் கஞ்சியாகவுமே வாழ்ந்து முடித்துவிட விரும்பவில்லை சந்துரு. அந்த ஆட்சேபம்தான் என் முன்னேற்றம்.

சந்துரு (பல்லைக் கடித்து): அப்படியென்று நீங்கள் நினைக்கிறீர்கள்....

மூர்த்தி: ஒவ்வொரு மனிதனுக்கும் அளவுகோல் அவனுடைய நினைப்புத்தானே?

[கிட்டு வருகிறான். சந்துருவின் பள்ளித் தோழன். சம வயதுடையவன்.]

கிட்டு: சந்துரு!

சந்துரு: யார்! கிட்டுவா! வா வா. எங்கே வந்தாய் மெட்ராஸிலிருந்து திடீரென்று?

கிட்டு: இங்கே ஊரில் ஒரு கல்யாணம். எல்லோருமாய் வந்தோம். இது உன் ஊரானதால் உன்னைப் பார்க்கலாமே என்று நானும் வந்தேன்.

சந்துரு: ரொம்ப சந்தோஷம். இவர்கள் என் அப்பா, அம்மா.

கிட்டு: வணக்கம். (கும்பிடுகிறான்)

மூர்த்தி: நன்றாய் இரப்பா. உன் பெயரைச் சந்துரு அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறான். சென்னையில் பள்ளிக்கூடத்திலே நீயும் அவனுடைய சிநேகிதன் இல்லையா?

கிட்டு: ஆமாம் ஸார். அந்தச் சிநேகிதம் காரணமாகத்தான் உங்களிடம் ஒன்று கேட்கலாமென்று வந்தேன்.

மூர்த்தி: என்ன?

கிட்டு: நாளைக்கு நான் பட்டணத்துக்குத் திரும்பிப் போகிறேன். அதற்கடுத்த நாள் நாங்களெல்லாம் சீஸனுக்கு ஊட்டிக்குப்போகிறோம். இப்போது லீவுதானே? சந்துருவை வர அனுமதித்தீர்களானால் எனக்கு ரொம்பவும் சந்தோஷமாக இருக்கும்.

மூர்த்தி: ஊட்டிக்கா?

கிட்டு: ஆமாம் ஸார். என் சித்தப்பாகூட அங்கே வருகிறார். எல்லாரும் பெரியவர்கள். எனக்குத் தகுந்த ஜோடி யாருமில்லை. சந்துரு வந்தால் நாங்கள் இரண்டுபேரும் ஜாலியாகப் பொழுது போக்குவோம்.

[சந்துரு ஆவலாகத் தந்தையின் முகத்தைப் பார்க்கிறான்.]

மூர்த்தி (அவனை ஓரக்கண்ணால் பார்த்தபடி): இந்த ஒரு வருஷம் உன்னோடு அவன் ஊட்டிக்கு வந்துவிட்டால் அடுத்த வருஷம் என்னப்பா செய்வான்? (சிரித்து) அப்புறம் அவனுக்கு வெய்யிலைத் தாங்குவது இன்னும் கஷ்டமாகி விடாதா?

சந்துரு (கோபமாக): போங்கப்பா நீங்கள் எப்போதும் இப்படித்தான்.

கிட்டு: தயவுசெய்து ஸார், எனக்காக அவனை அனுப்புங்களேன். ப்ளீஸ்!

மூர்த்தி: அவனையே கேள் அப்பா. அவன் வருவதானால் எனக்கென்ன ஆட்சேபம்?

சந்துரு: கரும்பு தின்னக் கூலியா வேணும் எனக்கு?

[கிட்டுவும் சந்துருவும் வெளியேறுகிறார்கள்.]

காட்சி 2

[உதகையில் ஹோட்டல் அறை. கணப்பின் அருகில் சிறும்புழுள்ள நார் ஜமக்காளத்தின்மீது சோபாவில் சந்துருவும் கிட்டுவும் கம்பளி ஆடைகள் அணிந்து உட்கார்ந்திருக்கிறார்கள்.]

சந்துரு: அப்பப்பா! என்ன குளிர்டா இது. வெடவெடவென்று நடுக்கித் தள்ளுகிறது. உனக்குத் தெரியவில்லையா?

கிட்டு: வருஷா வருஷம்தான் இங்கே வருகிறேனடா! பழகிப் போய்விட்டது.

சந்துரு: இயற்கைக் காட்சிகளெல்லாம் இங்கே எத்தனை அழகு! மலைகளும் மரங்களும், அந்த யூகலிப்டஸ் மரங்களின் காற்றிலேயே அதன் வாசனை வீசுகிறதேடா.

[ஜன்னலின் கண்ணாடிக் கதவுகள் வழியே வெளியே பார்க்கிறான். சிறிது நேரம் மௌனம் நிலவுகிறது.]

சந்துரு: டே, கிட்டு, உன் சித்தப்பாவை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறதடா. அவரும் வாத்தியார் தொழிலில்தான் இருக்கிறார். ஆனால் என் அப்பா மாதிரியா? பம்பாயில் பெரிய கல்லூரி புரொபஸர். ஹூம்! எதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா?

கிட்டு: அவர் உன்னைப் பற்றியும் உன் அப்பாவைப் பற்றியும் நேற்று என்னிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்.

சந்துரு: ஐயையோ! எங்கேயாவது என் அப்பா ஒரு குக்கிராமத்திலே அசட்டு ஆரம்ப வாத்தியார் என்று சொல்லி வைக்காதேடா அவரிடம்! அப்புறம் என்னைக்கூட அவர் வெறுத்து விடுவார்.

சிதம்பரம் (வந்துகொண்டே): உன்னை எதற்காகப்பா வெறுக்க வேண்டும்?

[சிதம்பரம் சுமார் நாற்பத்தைந்து வயதுள்ளவர். உயரமான திடகாத்திர உருவம். கம்பளித் துணியில் நிஜாரும் கோட்டும் அணிந்திருக்கிறார்.]

சந்துரு (திடுக்கிட்டவனாய்ச் சட்டென்று திரும்பி): மன்னிக்கணும். நீங்கள் வந்ததை நான் கவனிக்கவில்லை.

சிதம்பரம்: உன் அப்பாவால் உன்னையும் வெறுத்துவிடுவேனென்று சொன்னாயே...

கிட்டு: அவன் தெரியாமல் சொல்லி விட்டான் சித்தப்பா.

சிதம்பரம்: இருந்தாலும் இந்தப் பண்பில்லாத பேச்சு மூர்த்தியின் மகன் வாயிலிருந்து வரக்கூடியதில்லை. (ஒரு சோபாவில் சென்று அமர்கிறார்.)

சந்துரு: நீங்கள் பேசுவதைப் பார்த்தால் என் அப்பாவை உங்களுக்கு நன்றாகத் தெரியும்போலிருக்கிறதே ஸார்!



சிதம்பரம்: அது போகட்டும். சந்துரு: இப்போது மூர்த்தி எப்படி இருக்கிறான் சொல்லு.

சந்துரு: அவர் சௌக்கியமாகத்தான் இருக்கிறார்.

சிதம்: முன்பு இருந்த தொப்பை இன்னும் பெரிதாயிருக்குமே! நாங்களெல்லாம் அவனை அதற்காக ஒரேயடியாகப் பரிகாசம் செய்வோம்.

சந்துரு: தொப்பையாவது! ஏன் அப்பா ரொம்பவும் மெலிந்த உடலுள்ளவராயிற்றே?

சிதம்பரம் (அதிர்ச்சியுடன்) என்ன?

சந்துரு: ஆமாம் ஸார். எனக்கு நினைவு தெரிந்ததிலிருந்து அப்பா பூஞ்சையான உடலோடுதான் இருக்கிறார். உடம்பில் சதையே கிடையாது.

சிதம்: ஓ! (யோசனையில் ஆழ்ந்தவராய்) ம், இன்னும் சொல்லப்பா மேலே.

சந்துரு: இன்னும் என்ன ஸார்? நிமிர்ந்து நிற்கவே முடியாதவர் போல் முதுகில் கூனல் வந்துவிட்டது. அவ்வப்போது உடம்பு தள்ளாடி உட்கார்ந்து விடுவார்.

சிதம்பரம் (துயரத்துடன்): மூர்த்தியா?

சந்துரு: பின்னே என்ன? ஒரு உதவாக்கரை வேலையிலேயே ஆயுளையும் அறிவையும் வீணடித்தால் உடம்பு மட்டும் நன்றாயிருக்குமா? உடம்பே தொலைந்தது.

சிதம்பரம்: உடம்பு தொலைந்ததா அல்லது வேறெந்தப் பொருளுக்காவது விலையாகப் போயிருக்கிறதா?

சந்துரு: அப்படி உடம்பையே விலையாகக் கொடுத்து என்ன பிரமாதமான பொருளை அவர் அடைந்து விட்டாராம்? அடைந்ததெல்லாம் தலையில் நரை, முகத்தில் சுருக்கம், உடலில் பலவீனம்...

சிதம்பரம்: கண்களில் நெஞ்சின் பிரகாசம் அது இருக்குமோ ஒரு வேளை? (நாற்காலியில் முன்னால் சாய்ந்து கழுத்தை உயர்த்தி உன்னிப்பாக) அது இருக்கிறதா சந்துரு? நீ அதைத் தேடினாயா?

சந்துரு: ஸார், நீங்களும்தான் இருக்கிறீர்கள். ஆசிரியத் துறையில் மேல் நிலையில் இருக்கிறீர்கள். பம்பாய் மாதிரி ஒரு பட்டணத்தில் எத்தனையோ நன்றாய் இருக்கலாம். கிணற்றுத் தவளையாக ஒரு குக்கிராமத்தில் விழுந்து கிடந்தால் — அப்படி விழுந்து கிடப்பதையே சுவர்க்கமென்று ஏற்றுக்கொண்டு விட்டால் — அப்புறம் விமோசனம் ஏது?

சிதம்பரம்: உனக்கு அப்படி இருப்பதில் இஷ்டமில்லை என்று தெரிகிறது.

சந்துரு (தீவிரமாய்): ஒரு நாளும் இல்லை.

சிதம்பரம்: மேலே என்ன செய்யப்போவதாக உத்தேசம்?

சந்துரு: எனக்குப் படிக்க வேண்டுமென்று ஆசை. முன்னுக்கு வரவேண்டுமென்று ஆசை. ஆனால் அதிருஷ்டம் எப்படியோ?

கிட்டு: சித்தப்பா, சந்துரு படிப்பில் ரொம்பக் கெட்டிக்காரன். ஏதாவது ஸ்காலர்ஷிப்புக்கு வழிசெய்ய முயலுங்களேன் அவனுக்கு.

சிதம்பரம்: மூர்த்தியே பட்டணத்துக்கு வந்துவிட்டால்?

சந்துரு (ஆவலுடன்): அப்படிச் செய்ய முடியுமா ஸார்?

சிதம்பரம்: ...ம்? நீ திரும்பிப் போகும் போதே நானும் உன் ஊருக்கு வருகிறேன், சந்துரு.

சந்துரு: அந்தச் சேற்றுக்குட்டைக்கா? உங்களால் ஒருநாள் கூடச் சகிக்க முடியாது.

சிதம்பரம்: அப்படிச் சொல்லாதேயப்பா! (சிரித்து) சேற்றிலேதான் செந்தாமரை இருக்குமென்று சொல்கிறார்கள் இல்லையா?

காட்சி 3

[மூர்த்தியின் வீட்டு வாசல் திண்ணையில் அவரும் அவர் மனைவி லக்ஷ்மியும் உட்கார்ந்திருக்கிறார்கள்].

லக்ஷ்மி: (உற்சாகமாக) என்னங்க, அதோ சந்துரு வந்து விட்டான்.

மூர்த்தி: பையன் மூன்றே வாரங்களில் எவ்வளவு நன்றாய் ஆகிவிட்டான்!

லக்ஷ்மி: அவனோடு இன்னும் யாரோ வருகிறாரே?

[சிதம்பரமும் சந்துருவும் வருகிறார்கள். அருகில் வந்ததும் சிதம்பரம் அப்படியே நின்று விடுகிறார். அவரும் மூர்த்தியும் சற்று நேரம் அசைவற்று நிற்கிறார்கள்.]

சிதம்பரம் (உணர்ச்சியினால் மெலிந்த குரலில்): ஆமாம், கண்களில் நெஞ்சின் பிரகாசம்! நான் நினைத்தது சரிதான்.

மூர்த்தி (புன்னகையுடன் எழுந்து சிதம்பரத்தின் கைகளை ஆர்வத்துடன் பற்றிக் கொண்டு): வா, சிதம்பரம் வா! எத்தனை வருஷங்களாயிற்று உன்னைப் பார்த்து!

சிதம்பரம் (அன்புடன்): ஊட்டியிலே உன் மகன் மூலம் நீ இப்போது இங்கே இருப்பதைத் தெரிந்து கொண்டேன் மூர்த்தி!

சந்துரு (படபடப்புடன்): அப்பா, இந்தப் பெரிய புரொபஸர் உங்களுடைய பாலிய நண்பராமே! கேட்டபோது எனக்கு ரொம்பப் பெருமையா யிருந்தது.

[இருவரும் தோள்மேல் கைபோட்டவாறு திண்ணையில் அமர்கிறார்கள். லக்ஷ்மி ஒதுங்கி நிற்கிறாள்.]

மூர்த்தி: நீ எப்படி இருக்கிறாய் சிதம்பரம். குடும்பம் உண்டா? இப்போது நீ எங்கே இருக்கிறாய்?

சிதம்: பம்பாயில். குடும்பம், சௌக்கியம் எதற்கும் குறைவில்லை.

மூர்த்தி: அப்படியா? ரொம்ப சந்தோஷம்.

சிதம்: உன் நினைவு மட்டும் எனக்கு எப்போதும் உண்டு மூர்த்தி. நீ எப்படி இருக்கிறாய், என்ன செய்கிறாய், இதை யெல்லாம் அறிய ஆவல்.

மூர்த்தி (சாந்தமாக): இப்போது தெரிந்து கொண்டாயல்லவா?

சிதம்பரம் (ஆவேசத்துடன் தலைநிமிர்ந்து): ஆம், கண்ணுக்கெதிரே இருக்கும் எறும்புக் கூட்டைத் தெரிந்து கொண்டேன். என் பழைய சிநேகிதன் வெறும் சக்கையாய் நிற்கும் அநியாயத்தைத் தெரிந்து கொண்டேன். நான் ஒன்று சொல்கிறேன். கோபப் படாமல் கேட்பாயா மூர்த்தி?

மூர்த்தி: கோபமென்ன? சொல்லு.

சிதம்பரம்: என் அண்ணா இருக்கிறாரல்லவா, கிட்டுவின் தகப்பனார்? அவரும் கல்வியில் நாட்டமுள்ள இன்னும் சில தனவான்


தண்ணீர் கிடைக்காத
போது தன் தாகத்தைத்
தணித்துக் கொள்ள, தன் திமிலில்
தண்ணீரை சேகரித்து வைத்துக் கொள்ளும்
ஒட்டகம், உள்ளுணர்ச்சியால் தூண்டப்பட்டு
சேமித்து வைப்பதற்கு ஓர் உதாரணம்
ஒரு ஒட்டகம், நாளைய தேவைக்கு சேமித்து வைக்கும்போது,
உங்கள் எதிர்காலத்திற்கு நீங்கள் சேமிக்க வேண்டாமா?
உங்களால் முடியாதா?
உங்களால் முடியும். நீங்கள் சேமித்துத்தான் ஆகவேண்டும்.
உங்கள் மனைவி மக்களுக்காக இன்றே சேமியுங்கள்.
சேமிப்பது ஊசியின் காதில் ஒட்டகத்தை நுழைப்பதுபோல் முடியாததல்ல.
நீங்கள் நினைப்பதைவிட எளிது சேமிப்பது.
கனரா பாங்கைக் கலந்து சேமிக்க இன்றே திட்டமிடுங்கள்
காலதாமதம் செய்யாதீர்கள்.
கனரா பாங்க் லிமிடெட்
(ஸ்தாபிதம்: 1906)
பதிவுக் காரியாலயம்: மங்களூர் • நிர்வாகக் காரியாலயம்: பெங்களூர்.
டிபாசிட்டுகள் ரூ. 72 கோடிக்குமேல்
239 கிளைகள் • உலகமுழுதும் பிரதிநிதிகள்.
பாங்கின் அலுவலகக் கட்டிடம்
தென்னாட்டின் தலைசிறந்த பாங்க்
உங்களுக்குத் தெரியுமா? எங்கள் அன்னியூட்டி சர்டிபிகேட்டுகள்
உங்களுக்கு அநேக நன்மைகளை அளிக்கின்றன.
உங்களுக்கு அருகில் இருக்கும் எங்கள் கிளையில் விசாரியுங்கள்

களும் சென்னையில் ஒரு விஞ்ஞான இன்ஸ்டிடியூட்டை நிர்வாகம் செய்ய விரும்புகிறார்கள். கால் பங்கு சர்க்கார் உதவி, முக்கால் பங்கு பிரைவேட்தான். அங்கே நீ வந்து அந்தப் புதிய இன்ஸ்டிடியூட்டில் ஓர் ஆசிரியராய் வேலை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

சந்துரு (பதற்றத்துடன் தந்தையின் அருகில் ஓடி வந்து): அப்பா, அப்பா! கேட்டீர்களா? சென்னையிலாம்!

சிதம்பரம்: சீக்கிரமே மேலுக்கு வந்து விடலாம். உன் விஞ்ஞான டிகிரி வீணாகக் கூடாது மூர்த்தி. நல்ல சம்பளம், செல்வாக்கு, கௌரவம் எல்லாம் உண்டு.

சந்துரு (ஆர்வம் மிஞ்ச): அப்பா! என்னப்பா பேசாமல் இருக்கிறீர்கள். அரிய வாய்ப்பு! சரியென்று சொல்லுங்களப்பா!

சிதம்பரம் (கெஞ்சலாக): பதில் சொல், மூர்த்தி.

மூர்த்தி: இதற்கு நான் என்ன பதில் சொல்வேனென்று நினைக்கிறாய்?

சிதம்: எனக்குத் தெரியவில்லை.

மூர்த்தி (அமைதியாய்): இல்லை, சிதம்பரம், உனக்குத் தெரிகிறது.

சிதம்பரம் (பதற்றமாக, வேகத்துடன்): மூர்த்தி, நன்றாய் யோசித்துப் பார். நானும் இங்கே விசாரித்தேன். இந்தக் கிராமத்துக்கு ஒரே பள்ளிக்கூடம். பதினைந்து வருஷங்களுக்கு முன் நீ வந்த போது அது எப்படி இருந்ததோ அதே நிலைமையில்தான் இன்னும் இருக்கிறது. கொஞ்சம்கூட முன்னேறவில்லை. உன் தியாக மெல்லாம் வீணாயிற்று.

மூர்த்தி (அவரை நேரே பார்த்து): தியாகம் என்ற பெரிய வார்த்தையை ஏன் போடுகிறாய் சிதம்பரம்? நான் தியாகம் செய்ய வேண்டு மென்னும் வீர மனப் பான்மையோடு இங்கே வரவில்லை. என் சொந்தத் திருப்திக்காகத்தான் வந்தேன். என் மனசு காட்டிய வழியைத் தொடர்ந்து கொண்டு வந்தேன். இதில் உணர்ச்சிவசப்பட ஒன்றுமே இல்லை.

சந்துரு: போதுமப்பா. இதோ எதிரே பாருங்கள். உங்கள் சிநேகிதர். இரண்டு பேருக்கும் ஒரே வயசு. ஒரே தொழில். ஆனால் அவர் இப்போது அந்தஸ்தும் செல்வாக்கும் மிகுந்த ஒரு பெரிய கல்லூரிப் பேராசிரியர். நீங்கள்....... (ஒரு கணம் தயங்கி விட்டு) நீங்கள் ஒரு குக்கிராமத்து ஏழை வாத்தியார்.

சிதம்பரம் (அமைதியாக): சந்துரு, முன்பு என் இடத்துக்குச் சிபாரிசு செய்யப்பட்டவர் தான் உன் அப்பா. பெரிய நகரங்களில் உயர்ந்த பதவி வகிக்கும் பொன்னான வாய்ப்பை அவர் உதறி விட்டு இந்தக் கிராமத்து மக்களுடைய அறிவை வளர்க்க வேண்டும் என்னும் ஆசையினாலே இங்கே வந்து விட்டார். அப்புறம்தான் நான் அவர் இடத்தில் லெக்சரராகி இப்போது இந்த நிலையில் இருக்கிறேன்.

சந்துரு (வியப்புடன்): என்ன?

சிதம்பரம்: ஆமாமப்பா. நீ மதித்துக் கௌரவிக்கும் என் தற்போதைய அந்தஸ்து உன் அப்பா வேண்டா மென்று ஒதுக்கித் தள்ளிய பிச்சைதான். இப்போது சொல்லு யார் ஏழை?

சந்துரு: அப்பா! நிஜமாவா?

மூர்த்தி: சிதம்பரம், பதினைந்து வருஷங்களுக்கு முன்பே வேண்டாமென்று உதறிய செழிப்பு இந்த வயதேறிய காலத்திலா என்னை மயக்கப் போகிறது?

சந்துரு (அதிர்ச்சியுடன்): அதாவது, நீங்கள் அந்த இன்ஸ்டிடியூட் வேலையை ஒப்புக் கொள்ள வில்லை என்று அர்த்தமா அப்பா?

மூர்த்தி: ஆமாம். பட்டணத்துக்குப் பல பேர் இருக்கிறார்கள். நான் இங்கே உழைக்கத் தான் விரும்புகிறேன்.

சிதம்பரம் (அவரையே உற்றுப் பார்த்து, மங்கும் கண்களைச் சட்டென்று இமைத்துச் சரி செய்து கொண்டு மெல்லிய குரலில்) ஒரு விதத்தில்...... ஒரு விதத்தில் மூர்த்தி, நீ ஒப்புக் கொண்டிருந்தால் எனக்கு ஆச்சரியமாயிருந்திருக்கும். ஆனாலும்..... இந்தமெலிந்த உடம்பு, வயதுக்கு மீறிய முதுமை....

மூர்த்தி: உடம்பை மீறி உலகத்திலே ஒன்றுமே இல்லையா சிதம்பரம்?

சிதம்: இருக்கிறது, மூர்த்தி, இருக்கிறது. உன் மன நிறைவு எனக்குப் புரிகிறது. ஆனாலும் நீ செய்ய முனைந்த நல்ல காரியத்துக்குப் பலனை ஒன்றும் அனுபவிக்க வில்லையே!

மூர்த்தி: நல்லதுக்குப் பலன் அந்த நல்லதேதான் சிதம்பரம். (அமைதியாக; தனக்கே சொல்லிக் கொள்வது போல்) உலகத்தில் தீமையும் சுயநலமும் மலிந்திருக்கும் போது ஒரு மனசிலே ஒரு நல்ல எண்ணம் வந்தநாலும் அதை விடப் பெரிய பாக்கியமோ சலுகையோ வேறென்ன இருக்கிறது? அதற்கப்புறமும் நாம் அதற்கு உலகப் போக்கான பலனையே தேடினால் அது குழந்தைத்தனம். தெய்வமே பிரத்தியட்சமான பிறகு அதனிடம் வரம் வேண்டுவது மாதிரி.

சிதம்: உன் மகன் வேறு வழி தேடுகிறான் அவனுக்காவது நான் ஒன்று செய்யலாமா?

சந்துரு: என்ன ஸார், அது?

சிதம்: உன்னை என்னோடு அழைத்துப் போகிறேன் சந்துரு. ஸ்காலர்ஷிப் கிடைக்காவிட்டாலும் என் சொந்தச் செலவில் மேலே படிக்க வைக்கிறேன். (கெஞ்சும்குரலில்) உன் சம்மதம் கிடைக்குமா மூர்த்தி? உன்னால் நான் அடைந்துள்ள அந்தஸ்துக்கு இதை என் நன்றியாய் என் மனத் திருப்திக்காக செய்ய விரும்புகிறேன். பணம் எனக்கு ஒரு பொருட்டல்ல.

மூர்த்தி: சந்துரு, உன் இஷ்டமென்ன?

சந்துரு (ஒரு கணம் சங்கடத்துடன் தயங்கிப் பிறகு தலை நிமிர்ந்து தீர்மானமாக) நான் போகிறேனப்பா!

மூர்த்தி: உன் ஆசையை நிறைவேற்றிக் கொள்ள உனக்கு உரிமை இருக்கிறது சந்துரு. உன் வாய்ப்பைத் தடுக்கவோ ஆட்சேபிக்கவோ எனக்கு என்ன உரிமை?

சந்துரு: தாங்ஸ் அப்பா! ரொம்ப தாங்ஸ்.

சிதம்: மூர்த்தி! (நண்பரின் கைகளைப் பற்றிக் கொண்டு) அவன் சாதனையை நோக்கிப் போகிறான். நீயோ சாதனையை அடைந்து விட்டாய். உன்னை மனமார வாழ்த்துகிறேன். (திரை)

என் அப்பா நல்லவர்! அவர் மீது எனக்கு உயிர். சின்னவனாக இருக்கும்போது அவரைப் பார்த்துக் கொண்டிருப்பதிலேயே பொழுது போக்குவேன். அவர் கையில் ஒரு அழகான வாக்கிங் ஸ்டிக் வைத்திருப்பார். பளபளவென்று அது பளபளக்கும். அழகிய அமைதி. அதனையின் முனையில் அழகாக சாத்தி வைத்திருப்பார். ஏதோ விளக்கின் ஒளி அதில் ஒளிவதைப் போல் மிக அழகாக மிளிர்ந்திருக்கும்.

அவர் வீட்டுக்கு வரும் போது நான் வாயில் வராந்தாவில் காத்திருப்பேன். அப்பா எனக்கு ஏதாவது வாங்கி வந்திருப்பார். ஒரு சமயம் பெட்டியில் பந்து. ஒரு சமயம் மோட்டார், அல்லது தைத்தசட்டை பொம்மை. சாவி கொடுத்தால் ஓடும் கார். இப்படி ஏதாவது வாங்கி வருவார். சில சமயம் சின்ன சின்ன புத்தகங்களும் வாங்கி வந்திருப்பார். இலைகளைப் போல பொம்மைகளைப் போட்டுக் கொண்டிருப்பேன். இடையிடையே கதவின் அருகில் நின்று உள்ளே நோக்குவேன். அங்கே அப்பா சிரித்துக் கொண்டிருப்பார். அவர் கண்கள் பளபளத்துக் கொண்டிருக்கும். அம்மா ஏதாவது சொல்லிவிடுவாள். அம்மா சொன்னது புரியாமல் நான் நிற்பேன். அப்பா சிரித்து விடுவார். எங்க அம்மா வுக்கும் சிரிப்பு பூவைப் போல மலர்ந்து வரும்.

எப்போதாவது உள்ளே இருந்து எனக்கு அழைப்பு வரும். "பேபி, வா!"

நான் துள்ளி எழுந்து ஓடுவேன். அப்பா என் கைகளைப் பிடித்துக் கொள்வார். "பேபி, பையனே! சந்திரனைப் பிடிக்க வேண்டாமா பையனே?" என்பார். நான் தலையை அப்படி இப்படி ஆட்டி விட்டுக் குதிப்பேன். அதற்குள் அம்மா, நான் சந்திரனைப் பார்க்கவில்லை என்று வெளியே பார்ப்பதைப் போலக் கவனத்தோடு கூறி உடனே சிரித்து விடுவாள்.

"அப்படி என்னடா பார்க்கிறாய்? ராஜா!" என்று அப்பா மெல்லமாக என் தலையை தட்டுவார். நான் அவர் கைகளிலிருந்து திமிறி ஓடுவேன்.

சொல்ல மறந்து விட்டேனே! எங்க அப்பா இரவு ஒன்பது மணிக்கு மேல்தான் வீட்டுக்கு வருவார். அவருக்கு ஆபீஸில் நிறைய வேலை என்பார். இரவுகளில் இப்படித் தான் வருவார். காலையில் நான் எழுந்திருக்கும் முன்பே வீட்டை விட்டுப் போயிருப்பார்.

அப்பாவைப் பார்ப்பதற்கு நான் இரவில் பொட்டு பொட்டென்று விழித்திருப்பேன்.

காலையில் பள்ளிக்கூடம் போகும் போது வெளியே நின்று தெருவில் கம்பீரமான வீதியை பார்த்து ஒரு சந்தோஷம் கொண்டிருக்கும். கடை வீதியில் எங்க அப்பாவின் காரைக் கண்டுபிடித்து விடுவேன். "அதோ அப்பாவோட கார்" என்று கத்தி விடுவேன். அப்பாவின் முகம் முழுவதும் வெளிச்சம் படர்ந்துவிடும்.

சில நாட்களில் அம்மா அப்பாவிடம், "உங்களுக்கு வீடு தானே! வீட்டுலேயே தங்கவிடுங்கள்!" என்பாள். அப்பா மௌனமாகவே இருப்பார். அப்பாவுக்கு என்ன அப்படி வேலையோ? ஓய்வு ஒழிச்சலில்லாத வேலை! லீவு நாட்களில் கூட ஆபீஸ் வேலையாகப் போய்விடுவார்.

அப்பாவைப் பற்றிய கவலை மனதில் இருந்து கொண்டே என்று நான் அம்மாவிடம் கேட்டுக் கொண்டிருந்தேன். ஒரு நாள் தைரியமாக அவரிடம், "அப்பா! நீங்கள் ஏன் பகலில் வீட்டில் தங்குவதே இல்லை...?" என்று கேட்டு விட்டேன்.

ஒரு வார்த்தை சொல்லாமல் அப்பாவை, அம்மா ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள். "உங்க பிள்ளை கேட்பதற்கு பதில் சொல்லுங்கள்! என்னிடம் போட்டு அடிக்கக் கூடாதுங்க!" என்றாள் அவள்.



என் அப்பா

ஸ்ரீவேணுகோபாலன்

அப்பா பதில் பேசவில்லை. அப்படியே இமைபார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

அதற்குள் அம்மா எங்கேயோ திரும்புவது மாதிரி திரும்பி விட்டுத் தன் கண்களைத் துடைத்துக் கொள்வதைக் கண்டேன்.

எனக்கு இது ஆச்சரியமாகவே இருந்திருக்கிறது. அம்மாவின் இந்தச் செய்கையை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

ஒரு நாள் இரவு! அப்பா வருவதற்கு இரவு பத்து மணியாகி விட்டது. ஒரு பை நிறைய பழங்களை வாங்கி வந்திருந்தார். அம்மா உட்கார்ந்தவாறே அவரை வரவேற்றாள். அவளால் சில நாட்களாக எழுந்திருக்க முடியவில்லை. நாற்காலியிலேயே கைகளையும், கால்களையும் துவளவிட்டு உட்கார்ந்திருக்கிறாள்.

நான் ஓடிப் போய் அப்பாவைக் கட்டிக்கொண்டேன். "அப்பா! என்னை வெளியே அழைத்துக் கொண்டு போ அப்பா!" என்றேன் கொஞ்சலாக. அப்பா பதில் பேசவில்லை.

"அவன்தான் தினந் தினம் ஆசையோடு கேட்கிறான். கொஞ்சம் வெளியிலே அழைத்துக் கொண்டு போய் வந்தால்தான் என்ன?" என்றாள் அம்மா.

அப்பா மௌனமாக இருந்தார்.

"நீ ஏன்டா அவரை வீணாகத் தொந்தரவுபடுத்துகிறாய்? பேசாமல் இரு!" அம்மா இரைந்து விட்டாள். இதற்குள் அப்பா எழுந்து விட்டார்.

"வாடா, மணி! வெளியிலே போய்விட்டு வரலாம்."

நான் துள்ளி எழுந்தேன். அப்பா என் கைகளைப் பற்றிக்கொண்டார்.



அம்மா எங்களை ஆச்சரியத்தோடு பார்த்தாள்.

நாங்கள் புறப்பட்டோம். விதிகள் வெறித்து விட்டன. கடைகளை மூடி விட்டார்கள். தெருவில் இருள் திட்டுத் திட்டாக விழுந்திருந்தது.

நான் சினிமா விளம்பரங்களையெல்லாம் பார்த்தவாறே நடந்து கொண்டிருந்தேன். எனக்கு இந்த வர்ண நோட்டீசுகளைக் கண்டாலே ஒரு தனி இன்பம்.

'டக்' என்று எதிலோ இடித்துக் கொண்டு நின்று விட்டேன். பக்கவாட்டில் பார்த்து நடந்ததில் விளக்குக் கம்பத்தின் மீது மோதியிருக்கிறேன். நெற்றியில் வலி கண்டது. தடவிவிட்டுக் கொண்டேன். அப்பா என்னைப் பார்த்தார்.

"ஏன்டா, தொந்தரவு! தெருவிலே பார்த்து நடக்க வேண்டாமடா?" என்று கூறியவாறு அப்பா என் கையைப் பிடித்து இழுத்தார். அவர் பிடித்த பிடியில் என் கையில் வலி கண்டு விட்டது. அப்பா என்னைக் கரகரவென்று வேகமாக இழுத்துச் சென்றார்.

நல்லவர்

ஒரு தெருவில் திரும்பி விட்டோம். எதிரே வரும் கும்பல் ஒன்றைக் கண்டு அப்பா உடன் திகைத்து நின்ருர். பிறகு, ''இங்கேயே இருடா மணி!'' என்று கூறிவிட்டுப் பரபரப்புடன் அருகில் உள்ள சந்தில் நுழைந்து மறைந்து விட்டார்.

நான் வியப்போடு நின்று விட்டேன். சிறிது நேரத்தில் அந்தக் கும்பல் என்னைக் கடந்து சென்று விட்டது. இரண்டு மூன்று குழந்தைகள், ஒரு பெரிய பெண்மணி, ஒரு வயோதிகத் தம்பதிகள் இவ்வளவுதான்!

அவர்கள் போன பிறகு அப்பா சந்திலிருந்து மீண்டும் வந்தார். என் கைகளைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தார். அவர் கைகள் பதறிக் கொண்டிருந்தன.

ஊர்ப் பகுதிகளைக் கடந்த பின் ஒரு திறந்த வெளிக்கு வந்தோம். அங்கே ஒரு பாலத்தின் கைப்பிடிச் சுவர் மீது அமர்ந்து கொண்டோம்.

எங்கும் அரவம் ஒடுங்கி விட்டது. என் கண்கள் தூக்கத்தில் செருகிவிட்டன. நாங்கள் வீட்டுக்குப் புறப்பட்டோம். நான் இப்போது அப்பாவின் கைகளை விட்டு விட்டு நடந்து கொண்டிருந்தேன்.! வீட்டில் உள்ள 'அப்பா' தானு இவர்?

அம்மா கதவைத் திறந்தாள். நான் உள்ளே சென்றதும் படுக்கையில் தாவிப் படுத்து உறங்க ஆரம்பித்து விட்டேன்.

இதற்குப் பின் அநேக நாட்களில் அம்மாவின் வற்புறுத்தலின் பேரில் நான் அப்பாவுடன் வெளியே போக வேண்டி வந்தது. ஆனுல் எனக்கு இதில் சுவாரசியமே இல்லை. இம்மாதிரி நடைகளில் அப்பாவின் போக்கே எனக்குப் பிடிபடாததாக இருக்கும். எனக்கு இதெல்லாம் பழக்கமாகி விட்டது.

ஒரு நாள் அப்பா வர வெகு நாழிகையாகிவிட்டது. எனக்குக் கண்கள் சுழுவிட்டு விட்டன. படுக்கையில் படுத்துவிட்டேன். ஆனுல் சிறிது நேரத்தில் காலடி ஓசைகள் என்னைக் கலைத்து விட்டன. உறக்கம் தெளிவுற்றுச் செவிகள் கூர்மையாகி விட்டன. அப்பாதான் வந்திருந்தார்.

''ஏன் உங்களுக்கு நாழிகை?''

''நாழிகையாகி விட்டது.''

''ஏனென்றுதான் கேட்கிறேன்!''

''அதற்கெல்லாம் காரணம் உனக்குச் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா?''

இதற்கு மேல் உரையாடல் நடக்கவில்லை. நான் கண்களை மூடிக் கொண்டே தூங்குவது போல் பாசாங்கு செய்தேன். சிறிது நேரமாகியிருக்கும். விசிப்பின் ஒலி அறையுள் கேட்டது.

''அழாதே, காமு! அழாதே!''

''விடுங்கள்! என் கையை விடுங்கள்!''

''பைத்தியக்காரப் பெண்ணாக இருக்கிருயே! நான் இப்போது என்ன சொல்லி விட்டேன்! நீ இப்படி அழுகிருய்?''

அம்மா தேம்புவது கேட்டது.

''உங்களுக்கென்ன? என்னை ஒரு பொருட்டாக நீங்கள் மதித்தால்தானே? எப்படியும் நான் ஒரு அநாதைதானே! எங்கே மதிக்கப் போகிறீர்கள்?''

மீண்டும் அழுகை! அப்பாவின் சமாதானப் பேச்சுக்கள்! அம்மாவின் விம்மல்கள் அடங்க வெகு நேரமாயிற்று.

மறுநாள் காலை! நான் வராந்தாவிலேயே வளைய வந்து கொண்டிருந்தேன்! அம்மாவின் முகத்தைப் பார்க்க எனக்குக் கஷ்டமாக இருந்தது. இரவு முழுவதும் அவள் அழுதிருக்க வேண்டும்!

மேலே இருப்புக் கொள்ளவில்லை. படிகளில் இறங்கிக் கீழே வருகிறேன். கீழே உள்ள பகுதியில் ஒரு குடித்தனம். என்னைப் போல் அவர்கள் வீட்டில் மூன்று பிள்ளைகள். எல்லோரும் விளையாடுகிருர்கள். நான் வராந்தாவில் தயங்கி நிற்கிறேன். மூவரும் என்னை மூன்று விதமாய்ப் பார்க்கிருர்கள். நான் வெலவெலத்துப் போய் நிற்கிறேன். அவர்களது பார்வை என் உள் மனத்தைச் சற்று வருத்துகிறது. இதற்குள் அவர்களது தாயார் அங்கே வருகிருள். என்னை ஒரு தரம் விழித்துப் பார்க்கிருள்.

''வாங்கோடா, உள்ளே!'' என்று தன் பிள்ளைகளை இழுத்துக் கொண்டு உள்ளே போகிருள். நான் திரும்பி மாடிக்கு வந்து விடுகிறேன். எனக்கு என் அம்மா மீதே வெறுப்பு ஏற்படுகிறது. கீழே இறங்கிப் போய் அம்மா யாருடனும் பழகுவதில்லை. எவருடனும் மறந்து போய்க்கூடப் பேசுவதில்லை. இதனுல் அவர் வீட்டார் என்னவோ ஒருமாதிரி பார்க்கிருர்கள்! அம்மாவைக் கூடத்தான் அப்படிப் பார்க்கிருர்கள்!

இடையே ஓரிரு நாட்கள் அப்பா வீட்டுக்கு வராமலிருந்தார். பிறகு ஒரு வாரமாக அவர் வீட்டுக்கே வரவில்லை. அம்மாவின் கண்கள் நீராகி வடிகின்றன.

ஒரு நாள் காலை நான் அம்மா அருகில் தைரியமாகச் செல்கிறேன். அம்மா என்னை உற்றுப் பார்த்தாள்.

''அம்மா! அப்பா ஏன் வீட்டுக்கு வருவதில்லை?''

''வருவதில்லை!''

''அவர் அப்போ எங்கே சாப்பிடுவார்? எங்கே படுத்துக் கொள்வார்?''

அம்மா என்னை ஏற இறங்கப் பார்த்தாள். ஒரு கணத்தில் அவள் முகத்தில் அழுகைக் குறிகள் தோன்றி மறைந்து விட்டன. நான் உடன் தலையைக் கீழே கவிழ்த்துக் கொண்டேன். பிறகு வராந்தாவை நோக்கி மெல்ல நடக்க ஆரம்பித்தேன்.

''மணி!''

நான் நின்று திரும்பினேன்.

''இங்கே வாயேன்!'' அம்மா புன்னகையாக மலர்ந்திருந்தாள்.

''உனக்குத் தெரியுமோ செய்தி?''

''என்ன செய்தி?''

''உனக்கு ஒரு தம்பி பிறக்கப்போருன்!''

நான் சிரித்தேன். எனக்கு விளையாடுவதற்குத் துணையாக யாரோ வரப்போகிருர்கள் என்ற நினைவு உள்ளத்தில் துள்ளி எழுந்தது!

அப்பா வீட்டுக்கு வந்து ரொம்ப நாட்களாகிவிட்டன. அம்மாவுக்குத் தள்ளாமை அதிகமாகி விட்டது.

பருவங்கள் மாறுகின்றன! பனிக்காலமாகிவிட்டது. இரவு ஏழாகிவிட்டால் சன்னல்களை 'அடைத்துவிட்டு உள்ளே உட்காருகிறோம். அம்மா ஒரு தையல் மிஷின் வாங்கியிருக்கிருள். அதன் சக்கரங்கள் வெண்மைத் தீயாய்ச் சுற்றுகின்றன.


இப்பொழுது நடைபெறுகிறது!

சென்னை காமதேனு-மஹாலக்ஷ்மி-பிரைட்டன்-ஜெயராஜ்

மற்றும் தென்னாடெங்கும்



இந்த ஒரு **வண்ணத்திப் பூச்சி** தான்



ஷர்ட்டிங்குகள் மேல்
அச்சாகிறது.

ரோஹித்

மில்ஸ் லிமிடெட்

தயாரிக்கும் ஷர்ட்டிங்குகள்

ரோஹித் மில்ஸ் லிமிடெட்
கோக்ரா மெஹ்மெதாபாத். அகமதாபாத்-8

ரோஹித் க்ரூப் நிறுவனங்களில் ஒன்று

RPY-3

பிறக்கும்போதே அம்பிப் பாப்பா இறந்தே பிறந்தானாம். அம்மா நிழலாய் வற்றி விட்டாள். கன்னங்கள் சோபை இழந்து உலர்ந்து விட்டன. கண்களில் ஒரு தேக்கம் முடங்கிவிட்டது.

ஒருநாள் அம்மா என்னைக் கூப்பிட்டாள். "மணி! ஒன்று செய்வாயா? நீ வெளியிலே போய்த் தெருவெல்லாம் இப்படிப் பார்த்துவிட்டு வருகிறாயா? அப்பா தென்படுகிறாரான்னு பார்க்கிறாயா?"

"ம்!"

சில நாட்களாக வீதிகளில் உலாவுகிறேன். அப்பா எங்கேயாவது தட்டுப்பட மாட்டாரா என்று மனம் ஏங்குகிறது.

ஒரு வாரம் ஓடிவிட்டது. ஒரு நாள் சின்னக் கடைத் தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்தேன். ஒரு பழக் கடைப் பக்கம் என் கண்கள் திரும்பியதும் திடுக்கிட்டேன். அங்கே அப்பா நின்று பழம் வாங்கிக்கொண்டிருந்தார். "அப்பா!" என்று இரைந்து கொண்டு ஓடினேன்.

"என்னடா?" என்றார் கடுமையாக.

அந்தக் கேள்வி பிறந்த உறைப்பிலேயே நான் அடிபட்டாற்போலாகி விட்டேன்.

"வீட்டுக்கு அப்புறம் வரேண்டா! நீ போடா!" என்றார். அவர் பேச்சின் எரிப்பு என்னைக் குடித்தது.

குமுறிக்கொண்டே வீட்டுக்குத் திரும்பினேன். மாடியின் கதவைத் திறந்து உள் நுழைந்தேன். அம்மா என்னை ஏக்கத்தோடு பார்த்தாள்.

"என்னடா மணி?"

நான் தயங்கினேன்.

"சொல்லுடா!"

"நான் அப்பாவைப் பார்த்தேனம்மா!"

"பார்த்தாயா?" அம்மா துள்ளி எழுந்தாள். என் கைகளை ஆர்வத்தோடு பற்றிக் கொண்டாள். "என்னடா சொன்னார்? அவர் என்னடா சொன்னார்?"

"வீட்டுக்கு அப்புறம் வரேன்னார்!"

அம்மா அமர்ந்து உட்கார்ந்து விட்டாள்.

பனி போய் கோடையும் வந்து விட்டது. வெய்யிலின் தாக்குதல் மெள்ள உலகையே ஒரு திக்கலாக மாற்றிக் கொண்டிருந்தன.

இப்போதெல்லாம் அப்பா வருவார் என்ற நம்பிக்கையே எங்களுக்குப் போய் விட்டது. நாற்காலி, மேஜை, அலமாரி எல்லாவற்றையும் அம்மா விற்றுவிட்டாள். நாங்கள் ஒரு சின்ன வீட்டில் குடி புகுந்து விட்டோம்.

அம்மாவுக்கு அடிக்கடி இருமல் வருகிறது. உலுக்கி எடுப்பது போல் அவள் உடல் இருமலில் அதிர்கிறது. இரவெல்லாம் ஒரு மண்ணெண்ணெய் விளக்கின் முன் அவள் தையல் மிஷினை ஓட்டிக் கொண்டிருக்கிறாள்.

சில தினங்களில் அம்மாவை வெளியே அழைத்துக் கொண்டு உலாவப் போகிறேன். அம்மாவுக்கு வெளிக் காற்றுப் பட்டால்தான் உடம்புக்கு நல்லதென்று எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள்.

அன்று பூங்காவில் சற்று அதிக நேரம் அமர்ந்து விட்டோம். வரும்போது இருள் கூடிவிட்டது. ரயில் நிலையத்தின் வழியாக வந்து கொண்டிருந்தோம். முன்னால் நடந்து கொண்டிருந்த என் கவனத்தை "ஹாங்!" என்ற அம்மாவின் குரல் இழுத்தது. அவள் கூப்பிட்டுச் சென்ற இடத்தில் அப்பா நின்று கொண்டிருந்தார்.

அம்மாவைக் கண்டதும் அப்பா ஆச்சரியப் பட்டார். அம்மா அவரை ஏதோ கேட்டு விட்டாள். அப்பா பதில் பேசாது நின்றிருந்தார். நான் அவர்களருகில் வந்துவிட்டேன்.

"காமு!" அப்பா திருத்திக் கொண்டார்.

"சொல்லுங்கள்!" அம்மா கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டாள்.

"சில நிர்ப்பந்தங்களால் நான் வீட்டுக்கு வராமல் இருந்து விட்டேன். என்னை மன்னித்துவிடு. எல்லாம் அப்புறம் சொல்லுகிறேன். என்னை விடு. பின்னாலேயே எல்லோரும் வந்து கொண்டிருக்கிறார்கள்."

அம்மாவின் கண்களில் நீர்.

"கடைசியில் நீங்கள் என்னைக் கைநழுவ விட்டு விட்டீர்கள்!"

அப்பா பதில் பேசவில்லை. அம்மா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"காமு... கா...மு!"

"இப்போது எங்கே போகிறீர்கள்?"

"ஊருக்கு, மாற்றலாகி விட்டது. ஊரை விட்டே போகிறேன்."

"கடைசியில் இல்லையா, காமு?"

"இல்லை காமு! நான் சீக்கிரமே திரும்பி வருவேன். உன்னை அதன் பின் சந்திக்கிறேன். இது நிச்சயம்."

அப்பா அங்குமிங்கும் இறைப்புடன் பார்வையை ஓட்டினார். பிறகு யாரையோ கண்டது போல், "நான் வருகிறேன் காமு!" என்று இரைந்துவிட்டு விரைவாக ரயில் நிலையம் நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

நான் வெறித்தவாறு அப்பாவை நோக்கினேன். அவர் அங்கே ஒரு கும்பலுடன் கலந்து கொண்டு விட்டார். அந்தக் கும்பலில் உள்ளவர்களை நான் ஒரு நொடியில் அடையாளம் கண்டு கொண்டு விட்டேன். அன்று என்னோடு வந்தபோது அப்பா பயந்துபோய் ஒரு சந்தில் புகுந்து கொண்டாரே, அந்தக் கும்பலில் இருந்தவர்கள்தான் இவர்கள்! ஒரு பெரிய பெண், மூன்று சிறுவர்கள்!

அம்மா ரயில் நிலையத்தை நோக்கியே வைத்த விழியை நீக்காது பார்த்திருந்தாள்.

"அவர்கள் எல்லோரும் யாரம்மா?"

அம்மா தயங்கினாள். பிறகு அப்படியே [illegible].

"அவர்கள் யாரம்மா?"


நான் அவளை உலுக்கிவிட்டேன். அம்மா என்னைப் பார்த்தாள்.

"அவள்தான் அவருடைய மனைவி! பக்கத்தில் அவர்களுடைய குழந்தைகள்!"

இதன் பின் அம்மா வெகு நாள் வாழவில்லை. மறைந்து விட்டாள். ஆனால் இன்று இருபது ஆண்டுகள் கழிந்த பின், நான் இளைஞனாக வளர்ந்த பின், சமூகத்தின் உள்ளும் புறமும் உள்ள ரகசியங்கள் எனக்கு நிதரிசனமாகத் தெரிந்த பின், இம்மாபெரிய நகரில் வாழும் அநேக பெரியவர்களின் இரட்டை வாழ்க்கை எனக்கு நன்றாக விளங்கி விட்ட பின், அன்று அம்மா கூறிய கடைசி வார்த்தைகளின் பொருள் என் மனத்தில் நன்றாகப் பதிந்து என்னைச் சுட்டு எரிக்கின்றன.

என் அப்பா நல்லவர்!

துக்கடா



ஷெரிடன் என்பவர் இங்கிலாந்தில் புகழ் பெற்ற கவிஞர். புலமைக்கும் பணத்துக்கும் வெகுதூரம் அல்லவா? வாழ்க்கையை நடத்தக் கடன் வாங்கினார். கடன் தலைக்கு மேல் போய் விட்டது. அடைக்க வழியில்லை.

இருந்தாலும் கடன் கொடுத்தவர்கள் சும்மா இருப்பார்களா? கண்ட இடத்தில் கடனுக்காக நச்சரித்தார்கள். எனவே, அவர்கள் கண்களில் படாமல் இருக்க அவர் படாத பாடு பட்டார்.

ஒரு நாள் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தும் கடன் கொடுத்தவர் ஒருவரிடம் வகையாகச் சிக்கிக் கொண்டு விட்டார் அவர். அவரிடமிருந்து தப்ப வழி தோன்றவில்லை. இருந்தாலும், தைரியத்தைக் கைவிடாமல் அவரது குதிரையின் அழகைப் பற்றி வர்ணித்தார், அப்படி வர்ணித்தார். கடைசியில் 'இது நன்றாக ஓடுகிறதா?' என்று கேட்டார்.



"ஓடினால் பிடிக்க முடியாது!" என்று பெருமையுடன் சொன்னார் அந்தக் குதிரைக்கு உடையவர்.

"எங்கே, பார்க்கலாம்!" என்று கேட்டார் ஷெரிடன்.

குதிரைக்குச் சொந்தக்காரர் சவுக்கால் சொடுக்கினார். குதிரை பறந்தது. அதற்குள் கவி ஷெரிடனும் பறந்து அவர் கண்களில் படாமல் மறைந்து விட்டார்.

மூன்று பேர் அவ்வழியே போய்க் கொண்டிருந்தார்கள். நல்ல குளிர். எலும்பும் தோலுமாக ஒட்டிப்போன ஒரு பிச்சைக்காரன் குளிரில் வெடவெடவென்று நடுங்கிக் கொண்டு, "ஐயா, ஒரு நயா பைசாவாகிலும் போடுங்கய்யா! கோடிப் புண்ணியமுண்டு ஐயா!" என்று கத்திக் கொண்டிருந்தான். அவன் தொண்டை பாறையாகக் கட்டியிருந்தது.

மூவரில் ஒருவர், "அப்பப்பா! என்ன பயங்கரம்! ஒட்டிப் போன உடல்! குலை நடுங்க வைக்கும் கொலைக் குளிர்! கண்வேறு தெரியக் காணோம்! எத்தனை நாள் பட்டினியோ! பசி வெறியில் உறுமும் வயிறு! ஒரு நயாபைசாவுக்காக இந்த ஆத்மா எத்தனை ஈனக் குரல் எழுப்புகிறது. இங்கே ஒரு பைசாவுக்காகப் புலம்பும் ஏழை. அங்கே பணத்தில் புரளும் செல்வந்தர்கள்! செல்வச் செருக்கில் மிதக்கும் சீமான்கள்! சீ! சீ! என்ன சமூகம்! என்ன சமூகம்! சுட்டுப் பொசுக்கவேண்டும் இந்தச் சமூக முறையை!" என்று பொரிந்தார்.

இதைக் கேட்ட மற்றொருவர் தமது கம்பளிச் சட்டைப் பைக்குள் கையை விட்டார். காசு எடுக்கவா, இல்லை, பேச!

"பார்ப்பதற்கு இந்த மனிதன் எத்தனை ஏழையாகக் காணப்படுகிறான்! இவன் எழுப்பும் குரலில் எத்தனை வேதனை தொனிக்கிறது! ஆனால் உண்மை என்னவாயிருக்கும், தெரியுமா? இவன் காலையிலிருந்து மாலை வரை இதே மாதிரி ஈனக் குரல் எழுப்பி நாளொன்றுக்கு நான்கைந்து ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதித்து விடுவான். இவனுடைய குடிசை மூலையில் பல நகங்கல்களைப் பார்த்த ஒரு பழைய உடைந்த டிரங்குப் பெட்டி இருக்கும். அதற்குள் ஒரு கந்தல் துணி மூட்டை இருக்கும். அதை அவிழ்த்துப் பார்த்தால், நூறு நூறாகப் பத்துப் பத்தாக எத்தனை கத்தை ரூபாய் நோட்டுக்கள் இருக்குமோ, யார் கண்டார்கள்? சில்லறைகள் அம்பாரமாகக் குவிந்து கிடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!"



தம் பேச்சை முடித்தார் ஒரு விதமாக.

மூன்றாமவர் ஒரு மாதப் பத்திரிகையின் ஆசிரியர். "கவிவாணரே! வெகு நன்றாகச் சொன்னீர்கள்! நமது 'மல்லிகை'ப் பத்திரிகையின் அடுத்த இதழுக்கு இதே உள்ளக் கருத்துக் கொண்ட புரட்சிகரமான கவிதை ஒன்று தங்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். கதாசிரியர் மின்னிநாதரே! உங்களுக்கும் ஒரு வேண்டுகோள். இதே கருத்தை நிலைக் களனாகக் கொண்டு பரபரப்பூட்டும் கதை ஒன்று தங்கள் பேனாவிலிருந்து புறப்பட வேண்டும்! சன்மானத் தொகையை இருவருக்கும் முன்கூட்டியே வேண்டுமானாலும் அனுப்பி விடுகிறேன்!" என்றார்.

மூவரது நிழல்களும் கூட விளக்குக் கம்பத்தைத் தாண்டி மறைந்து விட்டன.

குலை நடுக்கும் குளிர் மேலும் அதிகரித்தது. குருட்டுப் பிச்சைக்காரன், வெறுந் தரையில் கிடந்தான். இரு கால்களையும் மார்போடு ஒட்டி வைத்துக் கொண்டு, அவற்றை இரு கைகளாலும் கட்டிப் பிடித்துக் கொண்டு குளிரையும் மீறி, "ஐயா, ஒரு நயாபைசா வாகிலும் போடுங்க ஐயா. கோடிப் புண்ணியம் உண்டு ஐயா!" என்று தன் குரலைத் தாழ்த்தாமல் கூறிக் கொண்டிருந்தான்.


ஒரு பிச்சைக்காரன் பிரயாணி ஒருவரிடம், 'நீங்கள் இந்தச் சமயம் எனக்குப் பிச்சை போட்டு உதவா விட்டால், எனக்குச் சிறிதும் பிடிக்காத ஒரு காரியத்தை நான் செய்யவேண்டியிருக்கும்' என்றான்.



அந்தப் பிரயாணிக்கு அவன் மேல் அனுதாபம் பிறந்து ஓர் ஐந்து பைசா நாணயத்தை எடுத்துக் கொடுத்தார். "ஆமாம், உனக்குப் பிடிக்காத காரியம் என்று சொன்னாயே, அது என்ன அப்பா பிடிக்காத காரியம்?" என்று கேட்டார்.

"வேறு என்ன? வேலை பார்ப்பதுதான்!" என்றான் அந்தப் பிச்சைக்காரன்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



உங்கள் குழந்தையின் நலமான வளர்ச்சியை அஜீர்ணம் தாக்காது பார்த்துக்கொள்ளுங்கள்

உங்கள் சிறு குழந்தை தவழவும், உட்காரவும், நிற்கவும், நடக்கவும் பயிலவேண்டும்; அத்துடன் உடல் எடையை இரட்டித்துக்கொள்ளவேண்டும் — எல்லாம் ஒரு வருஷ காலத்திற்குள்! நலமான வளர்ச்சியை ஓர் அற்ப அஜீர்ணம் கூட பாதிக்காமல் நீங்கள் பாதுகாக்கவேண்டாமா?

அஜீர்ணம் என்று எப்போது படுகிறதோ, உடனே உங்கள் குழந்தைக்கு அமிர்தாஞ்சன் கிரைப் மிக்சர் கொடுங்கள். அது இருந்தால் பல் முளைக்கும் பருவமும் எளிதாக அமைகிறது.

நினைவிருக்கட்டும். அமிர்தாஞ்சன் கிரைப் மிக்சர் புகழ்பெற்ற அமிர்தாஞ்சன் வலிநிவாரணி தயாரிப்போராலேயே செய்யப்படுகிறது. உங்கள் நம்பிக்கைக்கு ஏற்றது.



அமிர்தாஞ்சன்
லிமிடெடின்
கிரைப் மிக்சர்

அமிர்தாஞ்சன் லிமிடெட், மதராஸ், பம்பாய், கல்கத்தா, புது டில்லி

JWT-AM-G-9913a

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon